2741

# T.N.L.A Debates

OFFICIAL REPORT

VOL: LIV NO: 5

November 16th 1983

D,
V 211,31 N83
N83·54·5
136064

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
274
தமிழ்நாடு
எழும்பூர்,

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

**புதன்கிழமை 1983 நவம்பர் 16 - தொகுதி LIV எண். 5**

**Wednesday 16th November 1983—Volume LIV No. 5**

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600009

**Legislative Assembly Department, Fort St. George, Madras-600009**

விலை: ரூ- 3-50 காசுகள்)

(Price Rs. 3-50 paise

## உள்ளடக்கம்.

*16–11–1983*


| | பக்கங்கள். |
|---|---|
| 1 வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 509-543 |
| 2 ஒழுங்குப் பிரச்சினை — | |
| நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றவை | 543-544 |
| 3 தன்னிலை விளக்கம்— | |
| திரு எல். இளைய பெருமாள் உண்ணாவிரதம் இருந்ததற்கான் விளக்கம் .. .. | 544-545 |
| 4 கவன ஈர்ப்பு— | |
| (அ) வடஆற்காடு மாவட்டத்திலுள்ள ஆரம்பப் பள்ளிக் கட்டடங்களைப் பழுது பார்த்தல் | 546-548 |
| (ஆ) மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் .. .. | 549-553 |
| 5 அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்—தொடர்ச்சி .. | |
| மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் | 553-578<br>580-583<br>620-629 |
| திரு. ரா. உமாநாத் .. .. .. | 583-598 |
| 6 அரசினர் தீர்மானம்— | 601-602 |
| விதி 32 (1) ஐத் அரசு அலுவலுக்கென் தளர்த்தல் | 636 |
| 7 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 636 |


D 2 A–194—1

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

*1983*, நவம்பர் *16*, புதன்கிழமை.

ஐப்பசி 30 ருத்ரோத்காரி திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை *9—00* மணி அளவில் மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. எஸ். ஜகத்ரட்சகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு எஸ் ஜகத்ரட்சகன்

'' எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல் ''.

கிடைத்தற்கரிய வாய்ப்புக் கிடைக்குமானால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, அப்போதே செய்வதற்கரிய செயல்களை எல்லாம் செய்துவிட வேண்டும்.

### 1. வினாக்கள் —விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சந்தூர் மேல்நிலைப் பள்ளிக்கான கட்டிடம் கட்டும் திட்டம்

*வினா எண் *178* —திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தருமபுரி மாவட்டம் பருகூர் தொகுதியில் உள்ள சந்தூர் மேல்நிலைப் பள்ளிக்காகக் கட்டிடம் கட்ட ஏதேனும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ?

(இ) இதற்காக ஊர்ப் பொதுமக்கள் ரூ. *4,000* மும் *2* ஏக்கர் நிலமும் கொடுத்துள்ளது உண்மையா ?

மாண்புமிகு திரு.. செ. அரங்கநாயகம் : (அ), (ஆ) மற்றும் (இ) இப்பள்ளிக்கென ஊர்ப் பொது மக்கள் ரூ. *4,000* நன்கொடையும், 2 ஏக்கர் நிலமும் கொடுத்துள்ளனர் என்பது உண்மையே. ஆனால் நடப்பு ஆண்டில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் இப்பள்ளிக்குக் கட்டடம் கட்டும் உத்தேசம் ஏதும் இல்லை.

[1983 நவம்பர் 16

**திரு. என். பழனிவேல் :** தலைவர் அவர்களே, இம்மாதிரி மேல்நிலைப் பள்ளிகளைப் புதிதாக ஆரம்பிக்க பொதுமக்கள் பங்கு என்ற ஒரு பெயரால் பணமும் நிலமும் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று நிபந்தனை இருப்பதால் பல இடங்களில் பள்ளிக் கூடங்கள் கட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதனால் பாடம் படிக்க வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே இதை ரத்து செய்து அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்றுத் தேவைக்கேற்றாற்போல் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இப்போது தேவையான இடங்களில் எல்லாம் கட்டடம் கட்டுவதற்குப் போதுமான நிதி வசதியில்லை என்று பலவித சந்தர்ப்பங்களில் இந்த மன்றத்திலே நாம் கூறி இருக்கிறோம். அதற்கான நிதி தேடுகின்ற முயற்சியிலே அரசு ஈடுபட்டு இருக்கிறது. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதில் அரசாங்கம் முழுப் பொறுப்பையும், ஏற்றுக் கொண்டு செய்கிறபோது நிதித் தேவை என்பது இன்னும் அதிகமாகிறது. ஆகவே பொதுமக்களிடமிருந்து கிடைக்கிற உதவி, ஆதரவு ஆகியவைகளை நாம் நிறுத்த வேண்டியதில்லை. ஆனால் அதோடு அரசும் சேர்ந்து முயற்சி செய்து அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஆவன செய்யும்.

**திரு. ந. சிவஞானம் :** தலைவர் அவர்களே, புது மேல்நிலைப் பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு புதிய ஏற்பாடு ஏதேனும் கொண்டுவர அரசு உத்தேசித்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இப்போது நாம் பணம் எப்படிக் கிடைக்கும் என்பதைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். அது கிடைத்தால் நாம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம்.

**திரு. கே. தனுக்கோடித் தேவர் :** தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே 1963–64 இல் கீழத் தூவல் என்ற ஊரில் ஒரு உயர்நிலைப்பள்ளி அமைக்க வேண்டுமென்று ஒரு திட்டம் இருந்தது. போன ஆண்டு கல்வி அமைசசர் அவர்களிடத்திலே கேட்டேன். 5 ஏக்கர் நிலமும் 10 ஆயிரம் ரூபாயும் மக்களுடைய பணத்தைக் கட்டி உயர்நிலைப் பள்ளி வேண்டுமென்று கேட்டிருந்தோம். அடுத்த ஆண்டு செய்வதாக சென்ற ஆண்டு சொன்னார்கள். இந்த ஆண்டு வரும் என்று எதிர்பார்த்தோம். வரவில்லை. ஆகவே வரவிருக்கிற ஆண்டிலாவது அந்த உயர்நிலைப்பள்ளியை ஏற்படுத்துவது பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?



1983 நவம்பர் 16]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டு புதிய உயர்நிலைப் பள்ளிகளைத் துவக்குகிற பிரச்சினையைப் பரிசீலிக்கிறபோது இந்தப் பள்ளிக்கூடத்தைப் பற்றியும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**விளையாட்டுகளில் முதலிடம் வகிக்கும் மாணவ மாணவிகளை ஊக்குவிக்கும் திட்டம்,**

**வினா எண் 179—திரு. செ. செம்மலை :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் விளையாட் யாட்டுகளில் முதலிடம் வகிக்கும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்குக் கூடுதல் மதிப் பெண்கள் அல்லது ஊக்கத் தொகை அளிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயலுக்கு வரும் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (ஆ) பொங்கல் மற்றும் குடியரசு தின விழாப் போட்டிகளில் முதலிடம் இரண்டாம் இடம் பெறும் தடகள விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கும், விளையாட்டுகளில் வெற்றி பெறும் குழுவைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் 1982–83 ஆம் ஆண்டிலிருந்து ஊக்கத்தொகை (Scholar Ship) வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. கூடுதல் மதிப்பெண்கள் தரும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**திரு. செ. செம்மலை :** தலைவர் அவர்களே, இந்த விளையாட்டுக்களை ஊக்குவிப்பதற்காக உதவித் தொகை கொடுத்து வருகிற நிலையில் கூட பள்ளி அல்லது கல்லூரி மாணவர்கள் விளையாட்டுக்களை ஆர்வமாக விரும்பிக்க ற்கக்கூடிய ஒரு சூழ்நிலை இப்போது இல்லை. எனவே தேர்வுக்கு உட்படுத்தப் பட்ட பாடத் திட்டமாக விளையாட்டைச் சேர்த்து பாடத் திட்ட அளவில் ஒரு கட்டாய பாடமாகச் சேர்த்து கல்லூரி அல்லது பள்ளிகளில் அது முக்கிய இடம் பெறத் தக்க முறையில் அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, விளையாட்டை ஒரு கட்டாய பாடமாக, பரீட்சைக்குரிய பாடமாக ஆக்க வேண்டுமென்ற ஒரு விருப்பம் நமக்கு இருக்கிறது. அதுபற்றி சில முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தப் பிரச்சினையை பரிசீலனையில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அதிகாரிகளை நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இளமையில் தெரிந்தெடு என்ற அந்தத் திட்டத்தின் அடிப்படையில் சிறந்த விளையாட்டு வீரர்களை, வீராங்கனைகளைத் தேர்ந்தெடுப்பதற்கு அரசு ஊக்கத் தொகை ஏதேனும் அளித்து வருகிறதா? அதற்கு என்று நிதி ஒதுக்கீடு ஏதேனும் செய்து இருக்கிறதா? என்ற அந்த விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இங்கே இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

திரு. மு. ஜான்வின்சென்ட் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விளையாட்டுகளில் சில மாணவ, மாணவியர்கள் முதலிடம் வகிக்கும் திறமை படைத்து இருந்தாலும் அவர்கள் வறுமை கோட்டுக்கு கீழே இருப்பதால் விளையாட்டில் முழு கவனம் செலுத்த முடியவில்லை. அப்படிப்பட்ட விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும் அரசு ஊக்கப்படுத்தும் வகையில் அவர்களுக்கு துணி, பூட்ஸ் மற்றும் உணவு வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நாம் விளையாட்டுப் பள்ளிகள் என்ற பெயரில் 4 இடங்களில் பள்ளிகளையும் விளையாட்டு விடுதிகளையும் ஆரம்பித்து அவர்களுக்கு தங்கும் இடமும், சாப்பாட்டு வசதியும், படிப்பு வசதியும் தந்து வருகிறோம்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விளையாட்டு மிகமிக முக்கியமானது. இன்றைய நிலையில் தமிழ்நாடு முன்னுக்கு வரவேண்டும் என்ற கருத்து எல்லோருடைய மனதிலும் இருந்து கொண்டிருக்கிறது. மதிப்பிற்குரிய தலைவர் காமராஜ் அவர்கள் காலத்தில் விளையாட்டுக்கு என்று மந்திரி போடப்பட்டு அந்த நிலையில் நடைபெற்று வந்தது. ஆகவே அந்த நிலையில் நடந்த விளையாட்டுக்கு ஒரு டைரக்டரேட் தனியாக ஆரம்பிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விளையாட்டு மந்திரி இருந்த காலத்தில் விளையாட்டு இருந்ததைவிட, விளையாட்டு மந்திரி இல்லாத இந்தக் காலத்தில் விளையாட்டு நல்ல முறையில் முன்னேறி இருக்கிறது. ஒருவேளை விளையாட்டு மந்திரி இருந்த காலத்தில் அவர் விளையாட்டில் ஈடுபட்டிருக்கலாம். ஆகவே, மக்கள் விளையாட்டில் ஈடுபடுவதற்குத்தான் மந்திரி தேவை. அந்த வேலை இப்போது ஒழுங்காக நடைபெறுகிறது.





திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மாணவ, மாணவியர்கள் கூடுதலாக மதிப்பெண்கள் பெறுகிற இவர்களுக்கு ஊக்கத்தொகை அளிக்கின்ற முறையை விளையாட்டுத்துறை மாநில ரீதியில் எடுத்து வருகிறதா? அல்லது மாவட்ட ரீதியில் எடுத்து வருகிறதா என்பதை அறிய விரும்புவதோடு, இதேபோல் மாவட்ட ரீதியாக விளையாட்டுத்துறையில் கமிட்டி உள்ளது. அந்த உறுப்பினர்களை குறிப்பாகச் சொல்லப்போனால் சட்டமன்ற உறுப்பினர்களை அவர்களை மதித்து அந்த விளையாட்டுத் துறையில் பரிசு வழங்கவோ அல்லது விளையாட்டுகளில் கலந்துகொள்கிறபோது அவர்களுக்கு அறிவிக்கவோ அவர்கள் அறிவுறுத்தப்படுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வருடந்தோறும் நடைபெறும் பொங்கல் மற்றும் குடியரசு தின விழாக்கள் தடகள விளையாட்டுப் பாடங்களில் வெற்றி பெற்று முதலிடம் மற்றும் இரண்டாம் இடம் வகிக்கும் விளையாட்டு வீரர்கள், வீராங்கனிகளுக்கு 1982—83-லிருந்து விளையாட்டு படிப்பு உதவித் தொகை ஆண்டுக்கு 600-ம் மற்றும் 400-ம் விளையாட்டுகளில் வெற்றி பெறும் குழுகுரூப் கேம்ஸில்சிறந்த ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு 600-ம் தரப்பட்டு வருகின்றது. இது மாநில அளவில் தரப்படுகின்ற ஒரு உதவித் தொகை ஆகும். விளையாட்டு மன்றத்தைச் சேர்ந்தவர்கள் எம். எல். ஏ.-க்களை மதிக்க வேண்டும். என்பது அது வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏதோ பிரச்சனைகள் இருப்பதுபோல் தெரிகிறது. அதுபற்றி விசாரித்து யார், என்ன என்பதைப்பார்த்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ, மாணவியர்கள் தேர்வு பெற்றவர்களுக்கு அதற்குத் தனி பயிற்சி அளித்து அவர்கள் கல்வியில் பிற்பட்ட நிலையில் இருந்தாலும் தேர்வு பெற்ற அந்தசெலக்டடு மாணவர்களுக்கு தனியாக பயிற்சி கொடுத்து அவர்கள் எல்லாம் ஒலிம்பிக் போன்றவற்றில் பங்கெடுக்கும் முறையில் இந்தியாவைச் சேர்ந்தவர்களும் விளையாட்டு வீரர்களாக வருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் நாம் இந்த விளையாட்டு பள்ளிகளை ஆரம்பித்து அதிலே பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கு இப்போது மற்றவர்களைவிட சிறந்த முறையில் இந்த விளையாட்டுகளில் இருந்து வருகிறார்கள். கூடுதல் மதிப்பெண்கள் பற்றி நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நாம் இந்தக் கேள்வியை எதை வைத்துக்கொண்டு கேட்கிறோம் என்

றால் விளையாடுகின்ற மாணவர்கள் சரியாக படிக்க மாட்டார்கள், ஆகவே, அவர்களுக்கு மதிப்பெண்கள் தரவேண்டும் என்ற அடிப்படையில் தான் மாண்புமிகு உறுப்பினர் கேள்வியை கேட்டு இருப்பார் என்று கருதுகிறேன். அது முழுவதும் சரியில்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். சமீபத்தி ஒய். எம். சி. ஏ.வுக்கு நான் சென்று இருந்தேன். அங்கே ஒரு ஸ்போர்ட்ஸ் கிளப்பில் எஸ். எஸ். எல். சி. ஹையர் செகண்டரியில் படிக்கின்ற மாணவர்கள் 10 சதவீதம் மார்க்குகள் அதிகமாக வாங்கி இருப்பதாகச் சொன்னார்கள். அகவே, விளையாட்டில் ஆர்வம் உள்ள மாணவர்களுக்கு விளையாட்டில் வாய்ப்பைத்தந்தால் அவர்கள் படிப்பிலும் நல்லமுறையில் இருக்கிறார்கள் என்பதைத்தான் இப்போது இந்த அனுபவம் நமக்குச் சொல்கிறது.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் கர்நாடகா மாநிலத்தைப்போல ஸ்போட்ஸ் கவுன்சிலுக்கு தனியாக சேர்மேன் நியமித்து ஊக்கப்படுத்த அரசு முன்வருமா ? ஆசிய விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசு வழங்கியதைப் போல் பயிற்சியாளர்களுக்கும் ஊக்கத் தொகை அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இப்பொழுது நாம் தனி டைரக்டரேட்டை ஏற்படுத்தி இதற்கு முன்னாலே இருந்ததைவிட நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது. இன்னும் சொல்லப்போனால் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இருப்பதைவிட இங்கே தமிழ்நாட்டிலே நாம் விளையாட்டுத்துறையில் அதிகமான முன்னேற்றத்தைத்தான் பெற்றிருக்கிறோம். இதிலே இருக்கிற முக்கியமான குறைபாடு மந்திரி இல்லை என்பதோ, அல்லது தனி சேர்மன் இல்லை என்பதோ, அல்லது வேறு பொறுப்பிலே இல்லையென்பதைவிட மக்கள் மத்தியிலே விளையாட்டில் ஆர்வம் இல்லை என்பதுதான் மிக முக்கியமான குறைபாடு. ஆக, மக்கள் பிரதிநிதிகளாக இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் இதிலே கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு அரசே கிராம விளையாட்டு மையங்களை எவ்வளவு வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து அது மக்களுடைய ஆதரவு, மக்கள் பிரதிநிதிகளுடைய ஆதரவு போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால் இன்றைக்கு அது நாம் விரும்பிய அளவுக்கு வெற்றி பெறவில்லையென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, நாம் ஆர்வம் எடுத்துக்கொண்டு செயல்படுகிறபொழுது இன்னும் பெரிய முன்னேற்றத்தை நாம் பெற முடியும்.



## பாலிடெக்னிக்குகளில் பாடங்களைத் தமிழில் போதிக்கும் திட்டம்

*வினா எண் 180—திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் எந்தெந்த பாலிடெக்னிக்குகளில் பாடங்களைத் தமிழில் போதிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழகத்திலுள்ள கீழ்க்கண்ட பாலிடெக்னிக்குகளில் மாணவர்களுக்குப் போதிக்கப்படும் எட்டுப் பாடங்களில் பௌதீகம் மற்றும் பொறியியல் படவரைவு ஆகிய இரண்டு பாடங்கள் மட்டும் தமிழிலும் மற்ற பாடங்கள் ஆங்கிலத்திலும் போதிக்கப்படுகின்றன :—

(1) அரசினர் பாலிடெக்னிக், திருச்சி.

(2) அரசினர் பாலிடெக்னிக், தூத்துக்குடி.

(3) தந்தை பெரியார் ஈ.வெ. ரா. அரசினர் பாலிடெக்னிக, வேலூர்.

(4) தமிழ்நாடு பாலிடெக்னிக், மதுரை.

(5) அரசினர் பெண்கள் பாலிடெக்னிக், மதுரை.

(6) நாச்சிமுத்து பாலிடெக்னிக், பொள்ளாச்சி.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இரண்டு பாடங்கள் மட்டும் மாணவர்களுக்குத் தமிழிலே போதிக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தஞ்சையிலே இருக்கிற தமிழ்ப் பல்கலைக் கழகம் மருத்துவக் கல்லூரி பாடங்களைக்கூட மிக முனைப்பாகத் தமிழிலே மொழிபெயர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆகவே, பாலிடெக்னிக்குகளுக்கான அனைத்துப் பாடங்களையும் தமிழிலே மொழிபெயர்க்கும் பணி தமிழ்ப் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதா? ஆமென்றால், அந்தப் பணி எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பாலிடெக்னிகுகளிலே தமிழிலே பாடம் நடத்துவதற்கு நாம் தமிழ் பல்கலைக் கழகத்திடம் அந்தப் பொறுப்பைத் தர வேண்டுமென்ற அவசியம் இல்லை. நாமே அந்தக் காரியத்தைச் செய்ய முடியும். இப்பொழுது இரண்டு பாடங்கள் மட்டும் தமிழில் நடப்பதற்குக் காரணம், நாம் கொஞ்சம், கொஞ்சமாக, தமிழிலே நடத்துவதைக் கொண்டு வருகிறோம் என்பதுதான் பொருளே தவிர, முடியாத நிலையிலே இருக்கிறோம் என்பது அல்ல.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, முழுக்க, முழுக்க தமிழ் பயிற்று மொழியிலே பாலிடெக்னிக் படிக்கின்ற மாணவர்களுக்கு ஏதாவது ஊக்கத் தொகை அல்லது பணியிலே முன்னுரிமை கொடுக்கின்ற செயற் குறிப்பு அரசினுடைய பரிசீலனையிலே இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அப்படி ஒன்றும் இல்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 10-ஆம் வகுப்பு வரை தமிழிலே படித்துவிட்டு பாலிடெக்னிக்கிற்கு வருகின்றபொழுது, ஆங்கிலத்திலே பாடங்கள் நடக்கின்றபொழுது நகரத்திலே இருக்கிற குழந்தைகள் அவர்கள் படிக்கின்ற பாடங்களில் முழுமையாகக் கவனம் செலுத்தக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால் கிராம பள்ளிகளிலே இருந்து வருகிற குழந்தைகள் அந்தப் பாடங்களிலே முழுமையான அளவுக்கு மதிப்பெண் பெற முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, கிராமத்திலேயிருந்து வருகிற குழந்தைகளுக்கு அதில் ஏதாவது சலுகை கிடைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது ஓரளவிற்கு உண்மைதான். ஆனால், பாலிடெக்னிக்குகளில் ஆங்கிலத்தை நாம் எடுக்காமல் இருப்பதற்குக் காரணம், அங்கே படிக்கின்ற மாணவர்களும் அவர்களுடைய பெற்றோர்களும் ஆங்கிலத்திலே நடத்த வேண்டுமென்ற தவறான கருத்தை வைத்துக் கொண்டிருப்பதுதான். அதனால், பொதுமக்களுடைய விருப்பத்திற்கு விரோதமாக நாம் திடீரென்று ஒரு நடவடிக்கையை எடுக்கக் கூடாது என்பதற்காகத்தான் நாம் இதிலே நிதானத்தைக் கடைப்பிடித்து வருகிறோம். மாணவர்களுக்கு, ஒரு பிரச்னை. சில இடங்களிலே ஆசிரியர்களுக்கு ஒரு பிரச்னை. ஆங்கிலத்திலே சொல்லித் தருவது அவர்களுக்கு ஒரு பிரச்னையாக இருக்கிறது. ஆகவே, பெரும்பாலான இடங்களிலே ஆங்கில மீடியம் என்று இருந்தாலும்கூட பாதிக்குப் பாதி தமிழிலேதான் சொல்லித் தந்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்திகளும் நமக்கு வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, பரீட்சை எழுதுகின்ற பொழுது அவர்கள் தமிழிலே விடை எழுத விரும்பினால், எழுதுவதற்கு அனுமதி தரலாமா என்பதைப் பற்றி நாம் அந்தத் துறையோடு யோசித்துக்கொண்டிருக்கிறோம்.





திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கின்ற பொழுது ஆங்கில மீடியத்திலேயே சொல்லிக் கொடுப்பதை பொதுமக்கள் விரும்புகிறார்கள் என்று சொன்னார்கள். அதிலுள்ள சிரமங்களையும் சொன்னார்கள் அது மட்டுமல்ல அட்மிஷன் நடக்கின்றபொழுது, கான்வென்டிலே ஆங்கில மீடியத்திலே படித்த மாணவர்களுக்கு அதிக முன்னுரிமை கொடுத்து தமிழ்நாட்டிலே தமிழிலே படிக்கின்றவர்களுக்கு அரசாங்கம் ஊக்கம் தருகின்ற இந்த நிலையில், தமிழ் மீடியத்தில் படித்த பிள்ளைகளுக்கு இடம் தரப்படாமல் இருப்பது சம்பந்தமாக அரசுக்குப் புகார்கள் வந்துள்ளனவா ? வருங்காலத்திலாவது இதற்குச் சரியான தீர்வு காண அரசாங்கம் முன்வருமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புவதோடு, அரசாங்கம் சொன்ன 18 சத விகிதம் முறை இந்த பாலிடெக்னிக்குகளில் கொடுக்காமல் இருப்பதுபற்றி புகார்கள் வந்துள்ளனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்து சரியல்ல. நாம் பாலிடெக்னிக்கை பொறுத்தவரையில் மார்க்கை வைத்துத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறோம். தமிழ் மீடியமாக இருந்தாலும், இங்கிலீஷ் மீடியமாக இருந்தாலும் மார்க் எவ்வளவு இருக்கிறதோ அதை வைத்து தான் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதிக மார்க் வாங்கியவர்களுக்கு கிடைக்கும். பாலிடெக்னிக் அட்மிஷனைப் பொறுத்தவரையில் இண்டர்வியூ கிடையாது. அதிக மார்க் வாங்கியவர்களுக்கு கிடைக்கவில்லை ; குறைந்த மார்க் வாங்கியவர்களுக்கு கிடைத்தது என்ற பிரச்னை எழுவதற்கே நியாயம் இல்லை. அப்படி எங்கேயாவது நடந்திருக்குமானால் அது முறைகேடாகும். அது பற்றி புகார் வருமேயானால், அதை விசாரித்து கடுமையான நடவடிக்கையை மேற்கொள்வோம். 18 சதவீதம் என்பதையும் நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். பிற்பட்டவர்களுக்கு 50 சதவீதத்தை கொடுக்க வேண்டுமென்பதையும் வலியுறுத்தி வருகிறோம். ஆகவே அதிலே விட்டுக்கொடுக்கிற நிலைமை அரசிடம் இல்லை. இதுபற்றி அரசிற்கு புகார்கள் எதுவும் இல்லை. ஏதேனும் வருமேயானால் கடுமையான குற்றமாகக் கருதி நடவடிக்கை எடுப்போம்.

[1983 நவம்பர் 16

**பொன்விளைந்த களத்தூர் உயர்நிலைப் பள்ளிக்குப் புகழேந்தி அரசினர் உயர்நிலைப் பள்ளி எனப் பெயரிடும் திட்டம்**

* **வினா எண் 181—திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரும்புலவன் புகழ்ழந்தி பிறந்த ஊரான செங்கை மாவட்டம் பொன்விளைந்த களத்தூரிலிருக்கும் உயர்நிலைப் பள்ளிக்கு புகழேந்தி அரசினர் உயர்நிலைப்பள்ளி எனப் பெயரிட வேண்டும் என வேண்டுகோள் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(ஆ) செங்கை மாவட்டம் பொன்விளைந்த களத்தூர் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு புலவர் புகழேந்தி அரசினர் உயர் நிலைப்பள்ளி எனப் பெயரிட கல்வித் துறை அரசாணை (நிலை) எண். 1827, தேதி 19—9—1983-ல் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

**எல்லா மேல்நிலைப் பள்ளிகளிலும் இந்தியப் பண்பாடு என்பதனை ஒரு பாடமாக்கும் திட்டம்.**

* **வினா எண். 182—திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எல்லா மேல்நிலைப்பள்ளிகளிலும் இந்தியப் பண்பாடு (Indian Culture) ஒரு பாடமாக வைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கலாசாரம் மற்றும் இந்தியப் பண்பாடு என்பது ஒரு விருப்பப்பாடமாகும். எனவே எல்லா பள்ளிகளிலும் இதனை ஒரு பாடமாக வைக்க வேண்டுமென கட்டாயப் படுத்த முடியாது. மாணவர்கள் விரும்பினால் பள்ளிகளில் இப்பாடப் பிரிவு ஏற்படுத்தப்படும். ஏற்கனவே சில பள்ளிகளில் (Ethics and Indian Culture) என்ற பாடம் மேல் நிலைப் பொதுப் பிரிவில் ஒரு பாடமாக வைக்கப்பட்டு ஏப்ரல் 1983-ல், 960 மாணவர்கள் பொதுத் தேர்வும் எழுதியுள்ளனர்.



1983 நவம்பர் 16]

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தியப் பண்பாடு பாடத்தை எல்லா பள்ளிகளிலும் ஒரு பாடமாக வைக்க வேண்டுமென கட்டாயப் படுத்த முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, போதுமான நேரம், ஆயுள் ஆகிய இவைகள் நமக்கு இல்லை. ஆகவே எல்லாவற்றையும் கட்டாயப்படுத்த முடியாது.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நேரம் இல்லாததுதான் காரணமென்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அது தான் காரணமா? அல்லது ஏற்கெனவே இந்தியப் பண்பாடு பாடத்தை எடுத்து கல்வி கற்ற 500-க்கும் மேற்பட்டவர்கள் வேலையில்லாமல் இருக்கிற காரணத்தாலே, அந்தப் பாடத்தை வேண்டாமென்று விட்டார்களா? என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? அதோடு கடந்த 6, 7 ஆண்டுகளாக இந்தப் பாடம் படித்த சுமார் 500 பேர்கள் வேலையில்லாமல் நடுத்தெருவில் நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா? என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அடிப்படையில் தான் இந்த கேள்வியை கேட்டிருப்பார்கள் என்பதை நான் முதலிலேயே யூகித்தேன். 500 பேர்கள் படித்து வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்கிறபோது இன்னும் ஏன் அதிக பேர்கள் படிக்க வேண்டுமென்று கேள்வியை கேட்டார் என்பது புரியவில்லை. அவர்களுக்கு என்ன செய்யலாமென்று தகுந்த நிலையில் நாம் யோசிக்கலாம்.

**திரு. ந. சிவஞானம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மேல் நிலைப் பள்ளிகளில் விருப்பப் பாடமாக மருத்துவத் துறையைச் சேர்ந்த பல், கண் போன்ற பாடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய தொழில் கல்வி பிரிவில் பல் பற்றிய இரண்டு பாடப் பிரிவுகளை ஏற்படுத்தி அதை நாம் பல்வேறு பள்ளிகளிலே நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தோம். ஆனால் எனக்குத் தெரிந்தவரையில் ஒரு பள்ளியிலும் அது நடத்தப்படுவதாகத் தெரியவில்லை. நானே பல கட்டங்களில் சொல்லி இருக்கிறேன். டென்ட்டல் மெகானிக்,

டெக்னிஷியன் போன்ற இரண்டு பிரிவுகளும் மிக மிகத் தேவையானப் பிரிவுகள். படித்தால் உடனடியாக சம்பாதிக்கின்ற வாய்ப்பு இருக்கிறது. இன்றைக்கு பல் சுத்தம் செய்யக்கூடியவர்கள் டாக்டரிடம் சென்றுதான் சுத்தம் செய்கிறோம். பல்லை ஒவ்வொருவரும் ஆண்டிற்கு இரண்டுமுறை சுத்தம்செய்து கொள்வது நல்லதென்ற கருத்து இருக்கிறபோது பல்லாயிரக் கணக்கான பயிற்சி பெற்றவர்கள் தேவைப்படுகிறார்கள். ஆகவே வேலைவாய்ப்பு இருக்கிறது என்பதைக் கூட சொல்லியிருக்கிறோம். பி.டி.எஸ். படித்த டாக்டர்கள் தாலுக்கா அளவிலே இருக்கிறார்கள். ஆகவே தாலுக்கா அளவில் இருக்கிற பள்ளிகளிலாவது 25 மாணவர்களுக்கு இந்தப் பயிற்சியைத் தரலாமென்று கேட்டுக் கொண்டதற்கு பிறகும் அந்தக் கருத்து எடுபடவில்லை. காரணம், எல்லோரும் பொதுவாகக் கிளார்க் வேலை, பார்க்கத்தான் விரும்புகிறார்களே தவிர ஒரு தொழிலைக் கற்றுக்கொண்டு உழைத்து மக்களுக்குப் பயன்படச் செய்து, அதேநேரத்தில் தாங்களும் பயன்படுகின்ற நிலைமைகள் இன்னும் நம்மில் பெரும்பான்மையானவர்களிடத்தில் வரவில்லை.

(முற்பகல் 9-20)

அரசு போக்குவரத்துக் கழகங்களிலிருந்து பிற மாநிலங்களுக்கு விடப்படும் பேருந்துகள்.

*வினா எண். 183—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களிலிருந்து பிற மாநிலங்களுக்கு எத்தனை பேருந்துகள் விடப்படுகின்றன?

(ஆ) மேலும் அதிக பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : (அ) 361 பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன.

(ஆ) ஆம்.





திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, தற்போது இண்டர் ஸ்டேட் ரூட்டுகளில் பணிபுரிந்து வருகின்ற நடத்துனர்கள், ஓட்டுநர்கள் போன்றவர்களுக்கு மற்ற சில மாநிலங்களில் இன்டர்ஸ்டேட் ஸ்பெஷல் பேட்டா கொடுப்பதாகவும், பல ஓய்வு வசதிகள் செய்து கொடுப்பதாகவும் கூறப்படுகிறது. அப்படிப்பட்ட வசதிகள் இங்கே செய்து கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அப்படியென்றால், அதேபோன்று ஈக்குவல் சர்வீஸ் கண்டிஷன்களை இங்கேயும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இதுகுறித்துத் தனிக்கேள்வி போட்டால் அதற்குப் பதில் தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஆனால் இப்பொழுது கேட்கப்பட்டிருக்கும் மூலக் கேள்வி, எத்தனை பேருந்துகள் விடப்படுகின்றன, மேலும் பேருந்துகள் விடப்படுமா என்பதைப் பற்றியது. நான்கூட நினைத்தேன், மாண்புமிகு உறுப்பினரவர்கள் இதிலே அக்கறை காட்டுவார்கள் என்று, ஆனால் இப்பொழுதும்கூட அவர்கள் திசைமாறி வேறு கேள்வியைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து பம்பாய்க்குச் செல்கின்ற பிரயாணிகளைப் பொறுத்தவரையில் அதிகமான போக்குவரத்து நெருக்கடி இருப்பதால், சென்னையிலிருந்து பம்பாய்க்கு பஸ்களை ஆப்பரேட் செய்வதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்படுமா? அதேபோன்று கன்னியாகுமரியிலிருந்து திருப்பதிக்கும், கன்னியாகுமரியிலிருந்து குருவாயூருக்கும் பஸ்களை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, அந்தந்த மாநிலங்களுக்கு அருகில் இருக்கின்ற போக்குவரத்துக் கழகங்கள் அந்தந்த மாநிலங்களுக்குப் பேருந்துகளை இயக்குவதற்கு மேலும் பல புரப்போசல்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பம்பாய்க்கு இயக்குவதைப் பற்றி ஏறகனவே ஒருமுறை ஆலோசிக்கப்பட்டு பின்னர் அது கைவிடப்பட்டு விட்டது. காரணம் என்னவென்றால், தூரம் மிகவும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் பொதுமக்கள் அதை விரும்புவார்களா என்ற அச்சத்தின் காரணமாக அது கைவிடப்பட்டு விட்டது.

[1983 நவம்பர் 16

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பிற மாநிலங்களுக்கு விடப்படும் பேருந்துகளைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டிலிருந்து கர்நாடகத்திற்கு எத்தனை பேருந்துகளை விடலாம் என்று கர்நாடக மாநிலத்திடம் தமிழ்நாடு அரசு அனுமதி கேட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அவைகளை விரைவாக விடுவதற்கு ஏற்பாடு செய்ய அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலிருந்து கர்நாடக மாநிலத்திற்கு ஏறத்தாழ ஒன்பது பேருந்துகளை இயக்குவதற்கு அனுமதி கேட்டிருக்கிறோம். அதுபற்றி அந்த மாநிலத்திற்கும் நம் மாநிலத்திற்குமிடையே ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகுதான் அவைகளை இயக்குவதற்கான வாய்ப்பு ஏற்படும். அந்த அடிப்படையிலே ஒன்பது பேருந்துகளை இயக்குவதற்கு அண்ணா போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிற்கும் கேரளாவிற்குமிடையே எத்தனை பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன? தமிழ்நாட்டிலிருந்து கேரளாவிற்குச் செல்லும் வழியில் எங்கள் போடிநாயக்கனூர் மேட்டுப் பகுதியாகவும், மலைச் சாலையாகவும் இருப்பதால் கேரளாவிலிருந்து எந்தவிதமான பஸ்ஸும் நம் மாநிலத்திற்கு வரவில்லை. அந்தப் பகுதியில் கட் சர்வீஸ் தடங்களை அதிகரிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலே நேரிலே கூறியிருக்கிறோம். அவர்கள் போடிநாயக்கனூருக்கு வரும்பொழுது சில வழித்தடங்களை விடுவதாக உறுதியும் அளித்திருக்கிறார்கள். ஆனால் இன்றுவரையில் அவ்வாறு விடப்படவில்லை. ஆகவே, அந்தப் பகுதிகளுக்கு பஸ்களை அதிகமாக விடுவதற்கு அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, கேரளாவிற்கு 87 பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். மேலும், மாநிலத்தை விட்டு மாநிலத்திற்குச் செல்லும்பொழுது நம்முடைய மாநிலத்திற்கும் அந்த மாநிலத்திற்குமிடையே ஒப்பந்தம் ஏற்பட்டாக வேண்டும். நாம் கேட்டவுடன் அவர்கள் அதைக் கொடுத்துவிடுவார்கள் என்றும் நாம் எதிர்பார்க்க முடியாது. அவர்கள் எத்தனை வண்டிகளை விடுவதற்கான வசதி இருக்கிறதோ அத்தனை வண்டிகளுக்குத்தான் நமக்கு அனுமதி தருவார்கள். ஆனால் நாம் எத்தனை பஸ்களை விடுவதற்கு அவர்கள் அனுமதி தந்தாலும் நம்மால் போட முடியும். அந்த மாநிலம் சில கட்டுப்பாடுகளை வைத்துக்கொண்டு, அதற்குள்ளாகத்தான் போட முடியும் என்று சொல்கிறார்கள். இதுதான் இடையூறே தவிர வேறு நோக்கம் அல்ல.

திரு. வே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இதர மாநிலங்களுக்கு 361 பேருந்துகள் செல்வதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். வடாற்காடு மாவட்டத்தின் தலைநகரமாகிய வேலூரிலிருந்து ஆந்திர மாநிலத்தின் தலைநகரான ஹைதரபாத்திற்கும், அதேபோன்று பெங்களூருக்கும் அதிக பஸ்களை விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு இடத்திலே இருந்தும் வெளி மாநிலத்திற்கு பேருந்துகளை விடுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. ஆங்காங்கே சென்று வேறு பேருந்துகளில் ஏறிச் செல்வதற்குரிய வாய்ப்பும் வசதியும் இருக்கின்றது. இணைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த இடத்திலே இருந்து பேருந்துகள் விடுவது மிக மிக அவசியம் என்றால், அந்த இடத்திலே ஓரளவுக்கு நல்ல முறையில் இயங்கினால் அரசாங்கம் அது பற்றி நடவடிக்கை எடுக்க பரிசீலிக்கும்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருந்து கர்நாடக மாநிலத்திலே உள்ள கோலார் தங்க வயலுக்குச் சென்று கொண்டிருந்த பேருந்து சமீபத்திலே நிறுத்தப்பட்டு விட்டதாகச் செய்தி வந்திருப்பது உண்மையா ? அது உண்மை என்றால் அதற்கான காரணம் என்ன என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, அதற்கான காரணத்தை நான் இப்போது இங்கே சொல்ல முடியாது. ஆனால் அங்கே ஓடிக் கொண்டிருந்த பேருந்துகள் டபுள் பாயின்ட் டாக்ஸ் என்று சொல்லக்கூடிய வகையிலே நம்முடைய மாநிலத்திற்கும் வரி கட்ட வேண்டும், கர்நாடக மாநிலத்திற்கும் வரி கட்டவேண்டும் என்ற அடிப்படையிலே ஓடியது. அது தற்காலிகமானதாக இருந்த காரணத்தால் இப்போது நிறுத்தி விட்டார்கள். ஆனால் அந்த வழித்தடத்தைப் பொறுத்த வரையில் இந்த அக்ரிமென்டிலே சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை போக்குவரத்துக் கழகம் எடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாற்றுத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையிலிருந்து பெங்களூருக்கு அதிகமான கூட்டம் செல்கின்றது. ஏற்கனவே பல முறை இந்தப் பேரவையிலே இதுபோன்ற கேள்விகளைக் கேட்டிருக்கிறோம். கட்டணம் யார் அதிகமாகத் தருகிறார்களோ அவர்களுக்குத் தான் இடம் அளிக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. அதுபற்றி

பத்திரிகைகளில் செய்தி வந்ததைக் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்திருக்கலாம். எனவே இந்த நிலைமையினைப் போக்குவதற்காக இன்னும் அதிகமான பேருந்துகளை திருவண்ணாமலையிலிருந்து பெங்களூர் நகரத்திற்கு விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, இதிலே ஒரு சின்ன சங்கடம் இருக்கின்றது. கர்நாடக மாநிலத்திற்கும் நமக்கும் ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு ஒரு பேருந்தை இயக்க வேண்டும் என்று சொன்னால் அந்தப் பேருந்தை எவ்வளவு முழுமையாக அந்த மாநிலத்திலே பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்த வேண்டும். எனவே நம்முடைய மாநிலத்திலே அதிகமான தூரத்திலே இயக்கினால் அந்த மாநிலத்திலே நாம் மிகக் குறைந்த தூரத்தைத் தான் பயன்படுத்த முடியும் என்ற சூழ்நிலை இருப்பதன் காரணத்தால் இணைப்பு வசதிகளைக் கொடுத்து, அந்தப் பேருந்துகள் அங்கே அதிகமாக இயக்கப்படக் கூடிய அளவிலே செய்து கொண்டிருக்கிறோம். அப்படி இணைப்பு வசதிகள் கிடைப்பதற்குரிய சூழ்நிலைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆட்டோ ரிக்ஷாவில் செல்லும் பயணிகளின் எண்ணிக்கையை உயர்த்தும் திட்டம்.**

*வினா எண். 184—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆட்டோ ரிக்ஷாவில் செல்லும் பயணிகளின் எண்ணிக்கை இரண்டிலிருந்து மூன்றாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில் எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) : ஒரு செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாற்றுத் தலைவர் அவர்களே, சைக்கிளிலே இரண்டு பேர் செல்ல அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது. எனவே ஆட்டோ ரிக்ஷாவிலும் இப்போதுள்ள மீட்டர் கட்டணத்தில் 3 பேர் செல்வதற்கு ஏற்பாடு செய்கின்ற வகையில் அதுபற்றி பரிசீலித்து அரசு விரைவாக முடிவு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, சைக்கிள் மெதுவாகச் செல்லக்கூடிய ஒரு வாகனம். எனவே அதிலே இரண்டு பேர் செல்ல அனுமதிப்பதில் எந்த விதமான இடையூறும் வர வாய்ப்பு இல்லை. ஆனால் ஆட்டோவைப் பொறுத்த வரையில் அது வேகமாகப் போகக்கூடிய ஒரு வாகனம் என்பதால் அதிலே எவ்வளவு எண்ணிக்கை இருக்க வேண்டும், எவ்வளவு வெயிட் இருக்க வேண்டும் என்பதை எல்லாம் பார்த்துத் தான் அனுமதிக்க வேண்டி இருக்கின்றது. எனவே அரசாங்கம் இது பற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கின்றது. அந்த பரிசீலனை முடிந்ததற்குப் பின்னால் ஒரு முடிவை என்னால் சொல்ல முடியும்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாற்றுத் தலைவர் அவர்களே, ஆட்டோவிலே மீட்டர் போடாமல் ஓட்டுகின்ற ஆட்டோ டிரைவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போதும் நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். இன்னும் கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்துகொண்டுதான் இருக்கின்றது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாற்றுத் தலைவர் அவர்களே, ஆட்டோ ரிக்ஷாவைப் பொறுத்த வரையிலே மீட்டர் கட்டணத்தை மட்டும் வாங்காமல் அதிகப்படியான கட்டணத்தைக் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் கேட்கின்ற நிலைமை தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கின்றது. அதுபற்றி நடவடிக்கை எடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சொல்லிக் கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால் போதிய அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதுவரை எந்த அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கிறன ? மேலும் கடுமையான நடவடிக் வடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, அதற்காக ஒரு தனிக் கேள்வி போட்டால் ஒரு பெரிய விவாதமாகக் கூட வைத்துக் கொள்ளலாம். ஆனால் இங்கே மூலக்கேள்வி ஆட்டோவிலே மூன்று பேர் செல்ல அனுமதி கிடைக்குமா என்பது பற்றியது. இருந்தாலும் உங்களுடைய் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். இம்மாதிரி பிரச்சினைகளுக்காகத் தான் ஃப்ளையிங் ஸ்குவார்ட் என்ற ஒரு தனி அமைப்பையே உருவாக்கி வைத்து கடுமையான நட

வடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதுபற்றி பத்திரிகைகளிலே கூட படித்திருக்கலாம். 500-க்கு மேற்பட்ட வழக்குகளை இப்போது அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். இது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக என்பதைச் சொல்கிறேன். எனவே இப்படி கடுமையான நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாற்றுத் தலைவர் அவர்களே, எக்மோர் இரயில்வே ஸ்டேஷனிலிருந்து சட்டமன்ற விடுதிக்கு ஆட்டோ வரவேண்டும் என்றால் கூடுதலானக் கட்டணம் கேட்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட புகார்கள் குறித்து உடனடியாகப் பதிவு செய்கின்ற வகையில் புகார் பதிவு அலுவலகத்தை எக்மோர் இரயில்வே ஸ்டேஷன், சென்ட்ரல் இரயில்வே ஸ்டேஷன் போன்ற இடங்களில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த ப்ளையிங் ஸ்க்வார்ட்-க்காக ஒரு இடம் ஒதுக்கப்பட்டு அங்கு இருக்கிறது. அங்கே புகார் கொடுக்கலாம். அல்லது காவல் துறையில் புகார் கொடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துக்களை வைத்து அந்த இடத்தில் தனி அலுவலகம் அமைத்து தொலைபேசி வசதி செய்து கொடுப்பதற்கு சாத்தியமில்லை. வேறு வகையில் ஏதாவது செய்ய முடியுமா என்பது பற்றி ஆலோசிக்கலாம்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சைக்கிளில் டபுள்ஸ் செல்ல அனுமதித்த புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி ஆட்டோ ரிக்ஷாக்களில் ட்ரிபிள்ஸ் செல்வதற்கு அனுமதித்தால் எந்தவிதமான ட்ரபிள்ஸ்-ம் ஏற்படாது என்பதை அறியுமா ? அப்படி அதை அனுமதிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போல் மூன்று பேர்கள் போனால் ஏதாவது ட்ரபிள்ஸ் வந்துவிடுமோ என்ற காரணத்தினால்தான் அரசாங்கம் பரிசீலித்துத்தான் முடிவு எடுக்க வேண்டும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இன்றைக்கு ஆட்டோ-ரிக்ஷாக்கள் மிக அதிகமான அளவில் ஓடிக் கொண்டிருக்கின்றன. இதை பெரும்பாலும் அரசாங்க அலுவலர்கள் சொந்தமாக ஆக்கிக் கொண்டு அவர்கள் வாடகைக்கு ஆட்களை வைத்துக் கொண்டு பெரிய நிறுவனமாக நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே இதை உடனடியாக கார்ப்பரேஷனாகப் பிரகடனம் செய்து இப்போது சர்க்கார் பஸ் கார்ப்பரேஷன்கள் வைத்திருப்பது போல் ஆட்டோ ரிக்ஷாக்களுக்கும் ஒவ்வொரு நகரத்திலும் கார்ப்பரேஷன்ஸ் அமைப்பதற்கான யோசனையை அரசாங்கம் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தமக்கு வசதியான ஒரு யோசனையைச் சொல்கிறார்கள். அரசு அந்த யோசனையில் இல்லை.

சென்னை—குற்றாலம் இடையே சொகுசுப் பேருந்து விடும் திட்டம்.

*வினா எண். 185—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து குற்றாலத்திற்கு சொகுசுப் பேருந்து விடும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து குற்றாலத்திற்கு சொகுசுப் பேருந்து விடும் உத்தேசம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். சென்னையிலிருந்து மட்டுமல்லாது பல மாநிலங்களிலிருந்தும் குற்றாலத்திற்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். ஆதலால் படுக்கை வசதி, வீடியோ டேப்களைக் கொண்ட பஸ்களை அதிகமான அளவில் விடுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து செங்கோட்டை செல்கிற பேருந்துகள் ஏற்கனவே இந்த வழியாகச் செல்கிற காரணத்தால் அதற்குத் தனியாக பேருந்து விடமுடியாது என்று சொன்னேன். மேலும் அங்கே பணிமனை போன்ற வசதி இல்லாத காரணத்தால் அவ்வழியாகப் பேருந்து போய்க் கொண்டிருக்கிறது. அதைப் பொதுமக்கள் பயன்படுத்த முடியும் என்றளவில் அந்தக் கருத்தைச் சொன்னேன்.

[1983 நவம்பர் 16

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சென்னையிலிருந்தும் மதுரையிலிருந்தும் சொகுசுப் பேருந்துகள் வரும்போது வழியில் சில இடங்களிலிருந்து செங்கோட்டை போகவேண்டுமென்றால்—சொகுசுப் பேருந்தில் போகவேண்டு மென்று எங்களைப் போன்றவர்கள் கிராமப்புற மக்கள் ஆசைப் படுகிறார்கள். அவர்களுக்கு டிக்கெட் இல்லை என்று சொல்கி றார்கள். அதனால் அப்படிப்பட்ட இடங்களுக்கு, திருவில்லி புத்தூர், இராஜபாளையம், கல்லுப்பட்டி, திருமங்கலம் போன்ற இடங்களுக்கு சில ஒதுக்கீடுகள் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, வழி நெடுக ஒதுக்கீடுகள் செய்கிறபோது அந்தப் பேருந்துகள் நஷ்டத்தில் இயங்க ஆரம்பித்து விடும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே நகரப் பேருந்து விடவேண்டுமென்றும் கேட்கிறார்கள், சொகுசுப் பேருந்து விடவேண்டும் என்றும் கேட் கிறார்கள். நகரப் பேருந்து ஏற்கனவே விடப்பட்டிருக்கிறது. அதைப் பயன்படுத்தினால் எங்களுக்கு கொஞ்சம் நன்றாக இருக்கும். ஒதுக்கீடுகள் பற்றி எவ்வளவு தூரத்தில் அமைந்திருக் கிறது என்பதைப் பார்த்துத்தான் முடிவு எடுக்க முடியும். பார்த்து, தேவை என்றால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சில ஷார்ட் ரூட்களில் சூப்பர் டீலக்ஸ் பஸ் விடுவது போதுமான அளவிற்கு பிரயாணிகளை ஆகர்ஷிக்கவில்லை என்ற காரணத்தால் —எடுத்துக்காட்டாக நாகர்கோவில்—திருவனந்தபுரம் ரூட்டில் ஏற்கனவே எக்ஸ்பிரஸ் பஸ் விடப்பட்டிருந்தது இப்போது சூப்பர் டீலக்ஸாக மாற்றப்பட்டுவிட்டது. இந்தப் பஸ்ஸில் போதுமான அளவிற்கு பிரயாணிகள் பிரயாணம் செய்ய வில்லை, கட்டணம் ஜாஸ்தியாக இருப்பதால். ஆகவே இப்படிப் பட்ட ஷார்ட் ரூட்களில் சூப்பர் டீலக்ஸ் விடுவதை மாற்றி எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பொதுமக்களுடைய கோரிக்கைகளுக்கேற்ப, இருக்கிற சூழ்நிலை களுக்கேற்ப அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற சில தனிப்பட்ட வழித்தடங்கள் பற்றி இப்போது என்னிடம் தகவல் இல்லை. அதைப்பார்த்து விட்டு நடவடிக்கைகள் எடுக்கலாம்.



1983 நவம்பர் 16]

திரு. பி. துரைராஜ் : தலைவர் அவர்களே, சென்னையி லிருந்து குற்றாலத்திற்கு சொகுசுப் பேருந்து விடுவதற்கு அவசி யமில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் குற்றாலத்தில் ஸீசன் நேரங்களில் குறிப்பாக மே மாதம் 1-ம் தேதியிலிருந்து ஆகஸ்ட் 31 வரை வெளிமாநிலங்களிலிருந்து அதிகப்படியான மக்கள் அங்கே வருகிற காரணத்தால், அங்குள்ள மக்களும் அதிகமாகச் செல்வதால், ஸீசன் காலத்திலாவது சென்னையிலிருந்து குற்றாலத்திற்கு சொகுசு பேருந்து விடுவ தற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இப்படி சீசன் நேரத்திலே, விழாக்கள் நேரத்திலே, பேருந்து களை அரசாங்கம் அந்தந்த வழித்தடங்களில் இயக்கிக்கொண்டு தான் இருக்கிறது. சென்னையிலிருந்து இயக்குவது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து செங்கோட் டைக்கு இரண்டு பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அது குற்றாலம் வழியாகச் செல்கிறது. சென்னையிலிருந்து. மதுரையிலிருந்து கல்லுப்பட்டி வழியாகச் செல்கின்ற பஸ், ராஜபாளையம், புளியங்குடி வழியாக குற்றாலம் போகிறது. எனவே, ஒரு வழித்தடத்தை சங்கரன்கோயில், சுரண்டை வழி யாக குற்றாலத்திற்குப் போவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் கேள்விக்கு, நகரப் பேருந்துகள் வேண்டுமென்று கேட்டு, விடப் பட்டிருக்கிறபோது, அந்தப் பேருந்துகளைப் பயன்படுத்தாமல், இப்படி வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அந்த நகரப் பேருந்துகளை நிறுத்தவேண்டிய நிலைமை ஏற் படும். இருந்தாலும், உறுப்பினர் கேட்கிறபடியால் ஒரு வழித் தடத்தை எப்படி இயக்க முடியும் என்பதை பார்த்தாக வேண்டும். காரணம், எக்ஸ்பிரஸ் பஸ் இயங்க வேண்டியிருப்பதால, அந்த வழித் தடம் கொஞ்சம் நல்ல வழித்தடமாக இருக்கவேண்டும். அதைப்பார்த்துவிட்டு, முடியுமானால், நடவடிக்கை எடுக்கலாம்.

### கயத்தாற்றை மையமாக வைத்து நகரப் பேருந்து விடும் திட்டம்.

* வினா எண். 186—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் கயத்தாற்றை மையமாக வைத்து கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து விடவேண்டும் என கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) கயத்தாற்றிலிருந்து திருநெல்வேலிக்கு ஒரு நகரப் பேருந்து கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தினரால் ஓட்டப்பட்டு வருகிறது. கயத்தாற்றிலிருந்து கோவில்பட்டிவரை ஒரு நகரப் பேருந்து விட மாவட்ட போக்குவரத்துக் குழு பரிந் துரை செய்துள்ளது. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் இது பற்றி தக்க நடவடிக்கை எடுத்துள் ளார். கயத்தாற்றிலிருந்து மற்ற வழித்தடங்களிலும் நகரப் பேருந்து விடுவது பற்றி மாவட்டப் போக்குவரத்து அதிகாரியிட மிருந்து போக்குவரத்து விகிதாசாரம் பெறப்பட்டு மாவட்டப் போக்குவரத்துக் குழுவில் பரிசீலனை செய்யப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கும்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவை மாற்றுத்தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தபோது, மாவட்டப் போக்குவரத்து அதிகாரிகளினுடைய பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். அந்தப் பரிசீலனை முடிந்து, எப்போது அங்கேயிருந்து நகரப் பேருந்து விடக்கூடிய நிலைமை உருவாக்கப்படும் என்பதைத் திட்டவட்டமாக அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஆறு வழித் தடங்களில் பேருந்துகள் விட வேண்டுமென்று கேட்டு, மனுக்கள் வந்திருக்கின்றன. அந்த ஆறு வழித் தடங்களில் ஒரு வழித் தடம் தவிர, மற்ற எல்லா வழித் தடங்களிலும், 'ஆகுபென்சி ரேஷியோ' மிகக் குறைவாக இருக்கிறது. ஒரு வழித் தடத்தில் மட்டுமே, ஓரளவுக்கு இயக்குவதற்கான சூழ் நிலை இருக்கிறது. இதைப் பார்த்தாக வேண்டும். ஒரு பேருந் துக்கு ஒரு நாளைக்கு ரூ. 1500 வசூலாகவில்லை என்று சொன் னால், அது நஷ்டத்திலேதான் இயங்கும். எனவே, இதைப் பார்த்துத்தான் நடவடிக்கை எடுக்க முடியும். ஆகவே, இன் றைய தினம் திட்டவட்டமாகச் சொல்வது என்பது முடியாத காரியம்.

திரு. மு. அய்யாதுரை : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீரபாண்டியக் கட்டபொம்மன் பிறந்த பாஞ்சாலங்குறிச்சி, அவர் தூக்கில் இடப்பட்ட கயத்தாறு என்னுடைய தொகுதியில்தான் இருக்கின்றன. இன்றையதினம் சுற்றுலாப் பயணிகள் அங்கே அதிகமாக வருகிறார்கள். அது மட்டுமல்ல, அங்கே அதிகமான போக்குவரத்து இருக்கின்ற காரணத்தினால், தனியார் பஸ்கள் அங்கே இன்றையதினம் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் பரிசீலனை செய்து, அங்கே உடனடியாக நகரப்பேருந்துகள் விடுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, நாங்கள் எடுத்த கணக்குப்படி, ஏற்கனவே ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்துகளில் 55 சதவீதம் தான் நிரம்புகிறது. அவ்வளவுதான் அதிலே பயணிகள் பயணம் செய்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையிலே நான் கருத்தைச் சொன்னேன். கொஞ்சம் அதிகமாகப் போகக்கூடிய எண்ணிக்கையைப் பார்த்துவிட்டுச் சொல்லுகிறார்கள். என்றாலும், லாபம் வருமென்றால் பொது மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு, அதை இயக்க அரசாங்கம் எந்தவித தயக்கத்தையும் காட்டாது.

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, டவுன் பஸ்கள் பல இடங்களில் செல்கின்றபோது நான்குனேரி பகுதியில் டீசல் பிடிப்பதற்கு, 30 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள வள்ளியூர் செல்லுகிறது. அரசாங்கத்தின் லாபத்தை முன்னிட்டும் டீசலை மிச்சப்படுத்துவதற்கும், நான்குனேரியில் அரசு ஒரு பணிமனையை அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, அதற்கான குறிப்பு என்னிடத்திலே இல்லை. ஆனாலும், 30 கிலோ மீட்டர் தூரம் வீணாகப் போகாது. அதற்கு ஒரு வழித் தடத்தை ஏற்பாடு செய்துகொண்டு, காலையில் ஒரு முறை, மாலையில் ஒரு முறை டீசல் பிடித்துக் கொள்வார்கள். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் கூறும் ஆலோசனையைப், பரிசீலித்து, அங்கே ஒரு பணிமனை தேவையிருந்தால், அதற்கான சூழ்நிலை இருக்குமானால், அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜகத்ரட்சகன்) : கேள்விகள் 187, 188, 189, 190 ஆகியவை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

[1983 நவம்பர் 16

### வடவள்ளியில் பிற்பட்டோர் நலத்துறை மூலம் நடத்தப் படும் நடுநிலைப்பள்ளி.

* வினா எண். 191—திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு பிற் பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சத்தியமங்கலம் தொகுதி வடவள்ளியில் பிற்பட்டோர் நலத் துறையின் மூலம் நடத்தப்படும் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : இல்லை.

(முற்பகல் 9–40.)

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வடவள்ளியில் இயங்கும் நடுநிலைப் பள்ளியில் குற்றபரம்பரையைச் சேர்ந்தவர்கள் சுமார் 600 மாணவர் களுக்கு மேல் படிக்கிறார்கள். 6 ஏக்கர் நிலம் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மிகவும் பின் தங்கிய பகுதியான அந்தப் பகுதியில் இருக்கும் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் தொகுதி வடவள்ளியில் இத்துறையின் நடுநிலைப்பள்ளி எதுவும் செயல் படவில்லை என்பது எனக்குக் கிடைத்த தகவல். மாண்புமிகு உறுப்பினர் வேடர்நகர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டும் என்று கேட்டு இருந்தார். அவரது கோரிக்கையைப் பரிசீலித்து அறிக்கை அனுப்ப வேண்டும் என்று பெரியார் மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர்முதன்மைக் கல்வி அலுவலரைக் கேட்டு இருக்கிறார். அவரது அறிக்கை கிடைத்தவுடன் பள்ளிக் கல்வி இயக்குனர் தலைமையின் கீழ் செயல்படுகிற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த முடிவு செய்யும் உயர்மட்டக் குழுவிற்கு பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல் கின்றபோது அந்தக் கிராமத்தில் உள்ள பள்ளியைப் பற்றி மட்டும்சொன்னார்கள். நான் சொல்வது, இந்த டி. நோடிபைட் டிரிபினர் பிரிட்டிஷ் காலத்திலிருந்தே தொல்லைக்கு ஆட்பட்டு, அதற்குப் பிறகு சுதந்தரம் வந்த பிறகுதான்



1983 நவம்பர் 16]

அவர்களுடைய நிலைமை மாறி, இந்த அரசாங்கமும் நல்லவைகளை அவர்களுக்குச் செய்து வருகிறது. அந்தச் சமூகத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் தமிழகத் தில் குறிப்பாக, மதுரை, இராமநாதபுரம், சேலம், தென்னாற் காடு ஆகிய இடங்களில் வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட இடங்களில் உள்ள பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்க அரசாங்கம் முனைப்பான திட்டம் கொண்டு வருமா? வருகின்ற கல்வியாண்டில் குறைந்தபட்சம் 5 பள்ளிகளை ஏற்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாற்றுத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக்கேள்வி போட்டால் விவரமாகப் பதில் தரலாம்.

### 1982–83-ம் ஆண்டில் குழாய்க் கிணறு வாரியத்திற்கு ஒதுக்கப் பட்ட தொகை.

* வினா எண். 192—திரு. சி. கோபால் : மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1982–83-ஆம் ஆண்டில் குழாய்க் கிணறு வாரியத் திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) 1983 மார்ச் முடிய மாநிலம் முழுவதும் எத்தனை ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) 1982–83-ம் ஆண்டில் ரூ. 31,48,500 தமிழ்நாடு மாநில குழாய்க் கிணறு கழகத்திற்கு அரசு கடனாக வழங்கியுள்ளது.

(ஆ) ஆதிதிராவிடர் குடியிருப்பு மேம்பாட்டு பணிகளின் கீழ் ஆதிதிராவிடர் குடியிருப்பு மேம்பாட்டுக் கழகத்திட மிருந்து முன்பணமும் மானியமும் பெற்று மாநிலத்தில் ஐந்து மாவட்டங்களில் 45 குழாய்க் கிணறுகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன.

திரு. சி. கோபால் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது ஐந்து மாவட்டங்களில் மட்டும் எடுத்ததாகச் சொன்னார்கள். இந்தக் குழாய்க்கிணறு வாரியத்தின் மூலம் மாநிலங்கள் முழுவதிலும் இத்தகைய குழாய்க் கிணறுகளை அமைக்க அரசு முன்வருமா? குறிப்பாக வடாற்காடு மாவட்டத்தில் இந்தக் குழாய்க்கிணறு அமைக்கும் திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1983 நவம்பர் 16

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தற்போது செங்கற்பட்டு மாவட்டத்தில் 3 குழாய்க் கிணறுகளும், தென்னாற்காடு மாவட்டத்தில் 11-ம், தஞ்சை மாவட்டத்தில் 12-ம், திருச்சியில் 6-ம், இராமநாதபுரம் மாவட்டத்தில 13-ம் ஆக மொத்தம் 45 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய குழாய்க் கிணறுகள் அமைக்கும் நேரத்தில் படிகப்பாறைகள் அதிகமாக உள்ள பகுதிகளில்தான் தண்ணீர் நிச்சயமாகக் கிடைக்கும் என்ற நிலைமை இருப்பதால் அந்தப் பகுதியில் குழாய்க் கிணறு அமைப்பதில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அத்தகைய நிலைமைகள் வடாற்காடு மாவட்டத்தில் இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

திரு. தி. அன்புமுகன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, குழாய்க் கிணறு வாரியத்தின் மூலமாக அரசால் இந்தக் குழாய்க் கிணறுகள் எந்த நிபந்தனையின் அடிப்படையில் அமைக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழாய்க் கிணறுகள் ஏற்கனவே உள்ள பாசன வசதியைப்பெருக்குவதற்கு—குறிப்பாக அரிசனப் பகுதிகளில் பாசன வசதியைப் பெருக்குவதற்காக அமைக்கப்பட்டு, அதனைக் கூட்டுறவு முறையில் பங்கீடு செய்வதற்காக அமைக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசுமைப் புரட்சிக்கு உதவிகரமாகவும், ஏழை எளிய விவசாயிகளுக்கு நன்மைபயக்கும் வகையிலும் அமைக்கப்படும் இந்தக் குழாய்க் கிணறுகள் திட்டத்தை எல்லா மாவட்டங்களிலும் அமைக்க அரசு முன் வருமா? அதன் மூலம் எல்லா விவசாயிகளுக்கும் பயன் அளிக்கும் விதத்தில் செய்ய அரசு ஏதாவது திட்டம் வைத்து இருக்கிறதா? அப்படியானால் கோவை மாவட்டத்திற்கு இந்தத் திட்டத்தைக் கொண்டு வர அமைச்சர் அவர்கள் ஏதாவது முயற்சிப் பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற நிதியைப் பொறுத்தும், வசதிகளைப் பொறுத்தும் எங்கெங்கே தேவையோ அதைச் செய்ய வேண்டும் என்ற நிலையில் இந்த அரசு பணியாற்றிக்கொண்டு இருக்கிறது.



1983 நவம்பர் 16]

பாசன ஏரி குளங்களின் மத்தியில் குழாய்க்கிணறுகள் அமைத்தும் பாசன வசதி அளிக்கும் திட்டம்.

வினா எண். 193—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாசன ஏரி, குளங்களில், தண்ணீர் கிடைக்காத நேரத்தில் ஏரி, குளங்களின் மத்தியில் அரசு குழாய்க் கிணறுகளை நிறுவி, மோட்டார் பம்ப்செட்டு அமைத்துப் பாசன வசதி அளிக்க முன் வருமா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) இல்லை. எனினும், தமிழ்நாடு குழாய் கிணற்றுக் கழகம் தற்போது பாசனமில்லாத நிலப்பரப்புகளில் ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு குழாய்க் கிணறுகளை அமைத்துப் பாசனமளிக்கும் திட்டத்தை ஏற்று நிறைவேற்றி வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். தியாகராசன் : தலைவரவர்களே, விருத்தாசலம், ஓமத்தூர் ஆற்றுப் பகுதியில் மேல்மட்டத்தில் மூன்று அணைகளைக் கட்டியிருப்பதால் அந்தப் பகுதி விவசாயிகள் தண்ணீர் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் ; அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கஷ்டத்தைப் போக்க, அவர்களுடைய நிலையை உயர்த்த வேண்டியது அவசியம் என்பதால், அந்தப் பகுதி ஏரிகளுக்கு எல்லாம் முன்புபோல் தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ? அந்தப் பகுதி நிலங்கள் எல்லாம் தற்போது தண்ணீர் இல்லாமல் பாழடைந்து கிடக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதி குளங்களின் மத்தியில் குழாய்க் கிணறுகளை நிறுவி, பாசன வசதி அளிக்க சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்து, அந்த விவசாயிகளுக்கு மறுவாழ்வு அளிக்க அரசு தக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, தற்போதைய சூழ்நிலையில் ஏரிகளின் மத்தியில் ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்து, ஏரிகளில் தண்ணீரைப் பெருக்கி, பாசன வசதி செய்துதருவது என்பது இயலாத ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அவ்வாறு ஒரு நிலையை உருவாக்கும்போது ஏரிகளில் தண்ணீர் இல்லாத காலங்களில் மட்டுமே அது பயன்படும். அத்துடன் பராமரிப்பு, மின்கட்டணம் ஆகியவற்றைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஏரிப்பாசன தண்ணீர் தீர்வை செலுத்தும் செலவைவிடப் பன்மடங்கு அதிகமாகச் செல

விட வேண்டும். அது மட்டுமல்ல. ஏற்கனவே மின்சாரப் பற்றாக்குறை இருக்கிற சூழ்நிலையில் இது மேலும் மின்சாரப் பற்றாக்குறையை அதிகரிப்பதாக அமைந்துவிடும். அதோடு, இருபது அம்சத் திட்டத்தின்கீழ் அதன் முதல் எண்ணாக அறிவிக்கப்பட்ட 'இதுவரை பாசன வசதி கிடைக்காத பகுதிகளுக்கு பாசன வசதி செய்து கொடுக்கின்ற திட்டம்' இத்திட்டத்தை நிறைவேற்றினால், காலதாமதம் அடையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். தியாகராசன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரும் நிதி செலவில் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். அந்தப் பகுதி விவசாயிகள் தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது அந்தப் பகுதி வறண்ட பகுதியாக இருக்கிறது. இரண்டு, மூன்று ஆண்டுகளாக அந்தப் பகுதி நிலங்களுக்கு தண்ணீர் கிடைக்காததால் புன்செய் பயிர் செய்கிறார்கள். அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற வகையில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் போன்று அந்தப் பகுதி ஏரிகளின் மத்தியில் ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்து பாசன வசதி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் என்னுடைய கேள்வி இருக்கிறது. அந்தப் பகுதியில் சில இடங்களில் ஆழ்குழாய் இறக்கி பயிர் செய்கிறார்கள். அந்த அடிப்படையில் எங்களுக்கும் அந்த ஏரிகளில் ஆழ்குழாய்கள் அமைத்து, பாசன வசதிக்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே' மூலக்கேள்வி ஏரி, குளங்களின் மத்தியில் அரசு குழாய்க் கிணறுகளை நிறுவுமா என்பது. ஆனால் இப்போது அவர்கள் கேட்கின்ற கேள்வி வேறு எங்கோ போகிறது என்று கருதுகிறேன். தனிக் கேள்வி போட்டால் பயனுடையதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு க. பாரமலை: தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டதில ஏரிகள் அதிகமாக இருக்கின்றன கண்மாய்கள் நிறைய உள்ளன. அங்கே மத்திய அரசு 50 சதவீதம், மாநில அரசு 50 சதவீதம் என்ற அளவில் தொகை ஒதுக்கி, 100 கிணறுகளுககு ஆழ்குழாய் போடுகிற திட்டம் என்னுடைய தொகுதியில் இருக்கிறது. தற்போது மைய அரசு நிதியை நிறுத்திவிட்டதால் 'டெலீட்டட்பிளாக்' என்று சில பகுதிகளை ஒதுக்கி வைத்து இருக்கிறார்கள். மாநில அரசு நிதியிலிருந்தே முழுமையாக அந்தக கிணறுகளை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிநீர்க் கிணறுகளைப்பற்றிக் கேட்கின்றார்கள் என்று கருதுகிறேன். (குறுக்கீடு) குடிநீர்க்கிணறுகளைப்பற்றி இல்லாவிட்டால் மற்ற விவரங்களுக்குக் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.





திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்தில் குழாய்க் கிணறு அமைப்பதற்காக அரசு 31,48,500 சாங்ஷன் செய்தது என்று சொன்னார்கள். அதிலே 13 இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றும் சொன்னார்கள். ஆனால், இப்போது பதில் சொல்லக்கூடிய நேரத்திலே கண்மாய்க்கு மத்தியில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து தண்ணீர் எடுக்க முடியாது என்று சொல்லுகிறார். கண்மாய்க்கு உள்ளே போடாமல், கண்மாய்க்குச் சுற்றி போட அரசு ஆவன செய்யுமா ?

(முற்பகல் 9-50.)

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முந்தைய கேள்விக்கு சொன்ன பதிலிலிருந்து இந்த வினாவினைத் தொடுத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். என்றாலும் அத்தகைய பகுதிகளில்தான் இப்போது ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்படுகின்றதே தவிர, நான் ஏற்கனவே சொன்னதைப்போல கண்மாய்களுக்கு நடுவில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பூலா ஏரி வாய்க்கால் திட்டம்

* வினா எண். 194—திரு. செ. செம்மலை : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம் 'பூலா ஏரி வாய்க்கால், திட்டத்தின் தற்போதைய நிலை யாது?

(ஆ) அந்தத் திட்டத்தை விரைவுபடுத்தி செயலபடுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) இத்திட்டம் தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

(ஆ) சில தொழில் நுட்ப குறிப்புகள் தற்சமயம் ஆராயப்பட்டு வருகின்றன. இணைப்புக் கால்வாயினை அதிக பள்ளத்தில் எடுத்துச் செல்லாமலிருக்கவும் மற்ற துறையினரின் குறுக்கீடுகள் இல்லாமல் இருக்கவும் ஏதுவாக வெவ்வேறு சாத்தியக் கூறுகள் ஆராயப்படுகின்றன.

[1983 நவம்பர் 16

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு எவ்வளவு என்ற விவரத்தையும், இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெற இருக்கும் ஏரிகள் என்னென்ன என்பதையும், இந்தத் திட்டத்தின் மூலமாகப் பாசன வசதி பெற இருக்கும் மொத்த ஏக்கர் நிலப்பரப்பு எவ்வளவு என்பதையும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, இத்திட்டத்தின் வாயிலாக 2,210 மீட்டர் நீளமுள்ள இணைப்புக் கால்வாய் ஒன்றைத் தோண்டி கொண்ட சமுத்திரம் ஏரி, கங்காதரன் கோட்டை, நைனக்கால் ஏரி ஆகிய 3 ஏரிகளின் வாயிலாகப் பாசன வசதி 237 ஏக்கர் நிலங்களுக்குப் புதிதாக கிடைக்கும். இந்தத் திட்டத்திற்காக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் ரூபாய் 22 இலட்சம் ஒப்புதல் வழங்கி இருக்கிறார்கள்.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற நேரததில் ஆய்வுப் பணிகளுக்காக அதிக காலத்தை அதிகாரிகள் எடுத்துக் கொள்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் தல அதிகாரிகள் ஆய்வு செய்து தலைமைப் பொறியாளருக்கு இந்தத் திட்டம் அனுப்பப்பட்டும், இரண்டு தடவைகள் தல அதிகாரிகளுக்கே மீண்டும் மறு ஆய்வுக்காக அனுப்பப் பட்டு காலம் கடத்தப்படும் நிலை இருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தை விரைவு படுத்தி உடனடியாக எடுத்துக் கொள்ள அமைச்சர் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூலக்கேள்விக்குப் பதில் சொன்னதைப்போல ஏற்கனவே இந்தத் திட்டம் ஆய்வுகள் எல்லாம் முடிவடைந்து, தற்போது தல அதிகாரிகளால் இணைப்புக் கால்வாய் எந்தத் தடத்தில் செல்ல வேண்டும் என்று ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆய்வு செய்வதன் வாயிலாக கால்வாய் அதிகமான பள்ளத்தில் செல்லாமல் இருக்கவும், இதர துறைகளின் குறுக்கீடுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப் படுகிறது. இதிலே இருந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்தத் துறை அவருடைய கோரிக்கையை ஏற்று எவ்வளவு முனைப்பாக பணியாற்றிக் கொண்டு இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள வாய்ப்பிருக்கும்.

அதற்குப் பிறகு இந்தத் திட்டம் பரிசீலனை செய்த பிறகு அரசுக்கு அனுப்பப்படும். அரசு ஆய்வு செய்து, அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையின் பேரில் உரிய நடவடிக்கையை எடுக்க முயற்சிக்கும்.



கப்பலூர் தொழிற்பேட்டையிலுள்ள தொழிற் கூடங்கள்

*வினா எண். 195—திரு இரா. மூக்கையா : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கப்பலூர் தொழிற்பேட்டையில் தொழிற் கூடங்களில் தொழில் நடத்த எத்தனை பேர் மனு செய்துள்ளனர் ?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேருக்கு வாய்ப்பளிக்கப் பட்டுள்ளது ?

(இ) அத் தொழிற்பேட்டையை விரிவுபடுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு இரா. அருணாசலம் : (அ) மின் அணுவியல் மின் இயல் தொழில்கள் துவங்க இதுவரை 4 பேர் நில ஒதுக்கீட்டிற்காக விண்ணப்பித்துள்ளனர். பிற தொழில்கள் துவங்க 89 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

(ஆ) மின் அணுவியல், மின்இயல் தொழில்கள் துவங்குவதற்கு இதுவரை எவருக்கும் வாய்ப்பளிக்கப்படவில்லை. பிற தொழில்களைத் தொடங்குவதற்கு 46 பேர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

(இ) கப்பலூர் தொழிற்பேட்டையை விரிவுபடுத்தும் செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் இத்தொழிற்பேட்டையை விரிவுபடுத்துவதற்கு சாத்தியக் கூறுகள் உள்ளன.

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கப்பலூர் தொழிற்பேட்டை திருமங்கலம் தொகுதியில் உள்ளது. இந்தத் தொழிற்பேட்டை ஏறத்தாழ 20 ஆண்டுகாலத்திற்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டும் கூட, இன்னும் பல இடங்களில் புதிய தொழிற்கூடங்கள் கட்டுவதற்கான காலி இடங்கள் இருக்கின்றன. இதற்கு என்ன காரணம் ? அப்படி காலி இடங்களாக இருக்கின்ற அந்த இடங்களைக் கோரி மனுக்கள் வந்தும் கூட, நீண்டகாலமாக அவர்கள் காத்து இருக்கின்ற நிலை ஏற்பட்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே அந்த மனுக்களைப் பரிசீலனை செய்து, அப்படி காலி இடங்களைப் பெற்றவர்கள் பல ஆண்டுக்காலமாக தொழில் தொடங்கவில்லை என்றால், அதை ரத்து செய்து விட்டு மற்றவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

[1983 நவம்பர் 16

மாண்புமிகு திரு இரா. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேயிருக்கும் காலியிடங்களை மேம்படுத்தி, அவைகளைச் செம்மைப்படுத்தியபிறகு, இதில் மனுச் செய்தவர்களுக்கு தொழில் தொடங்க அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செங்கல் விலையை கட்டுபடுத்தும் திட்டம்

*வினா எண் 196—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செங்கல் விலையைக் கட்டுப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு இரா. அருணாசலம் : (அ) மற்றும் (ஆ) : செங்கல் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவது குறித்து 1982 அக்டோபர் திங்களில் இதற்காக நடத்திய கூட்டத்தில், சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளுடனும் மற்றும் செங்கல் மற்றும் ஓடு தயாரிப்பாளர் சங்கத்தினருடனும் கலந்து பரிசீலிக்கப்பட்டது

மேற்படி சங்கம் ஆயிரம் செங்கலுக்கு ரூ. 300/- (விற்பனை வரி, மேல் வரி போக்குவரத்துச் செலவு நீங்கலாக) என்ற விலைக்கு விற்க ஒப்புக் கொண்டு தீர்மானமும் நிறைவேற்றி செய்தித்தாளில் விளம்பரம் செய்தது. இது குறித்து பத்திரிகைகளில் அரசு சார்பில் செய்தி வெளியீடும் தரப்பட்டது. இந்நிலையில் தனியாக செங்கல் விலையைக் கட்டுப்படுத்த ஆணை எதுவும் தற்போது பிறப்பிக்கத் தேவையில்லை என அரசு முடிவெடுந்துள்ளது.

திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நகரங்களிலும், மற்றும் கிராமங்களிலும்கூட வீடுகட்டுகின்ற நடுத்தரக் குடும்பங்கள், அல்லது அரசாங்கத்தில் கடன் பெறுகின்ற ஆதிதிராவிட மக்கள், மற்றும பலரும் இந்தச் செங்கல்லின் விலை ஏறியிருப்பதன் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது அமைச்சர் அவர்கள் அறிவித்ததில் அந்தச் சங்கத்தினர் ஒத்துக்கொண்ட அந்த விலைக்கே, மார்க்கெட்டிலே தற்போது கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அப்படிக் கொடுக்கவில்லை என்றால், அவர்களுக்குத் தேவையான பொருள்களை அரசாங்கமே மலிவு விலையில் கொடுத்து மக்களுக்குக் குறைந்த விலையில் செங்கல் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1983 நவம்பர் 16]

மாண்புமிகு, திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செங்கல் விலையேற்றம் காலத்திற்குத் தகுந்தவாறு, சமயாசமயம் மாறுபடுகின்றது. என்றாலும் கூட 15-10-1982 அன்று நிறைவேற்றிய தீர்மானத்தின் மூலமாக முடிந்த அளவில் அனைவருக்கும் செங்கல் கட்டுப்படியான விலையில் கிடைப்பதற்கு அரசு வழி வகுக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சங்கத்தினர் ஒத்துக் கொண்ட விலைக்கு தற்சமயம் கொடுக்கிறார்களா? அப்படிக் கொடுக்கவில்லை என்பதால்தான் இந்தக் கேள்வியே கேட்கிறேன். இதற்கு அரசு துரிதமான ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இல்லை என்றால் பல வீடுகள் — நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 70 லட்சம் வீடுகள் தமிழகத்தில் கட்டப்படுவதாகச் சொன்னார்கள் — குறையாக நின்று கொண்டு இருக்கின்றன. எனவே அவைகளைச் சீக்கிரம் கட்டி முடிப்பதற்குத் தேவையான செங்கல்லை குறைவான விலையில் கிடைப்பதற்கு வேறு ஏதாவது தீவிர நடவடிக்கையை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல் விலை அதிகரித்துள்ளதா என்பதைப் பற்றி தகவல் இல்லை என்றாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு கவனத்தில் கொண்டு ஆவன செய்யும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆயிரம் கல்லின் விலை, டாக்ஸ் நீங்கலாக 300 ரூபாய் என்று சொன்னார்கள். இந்த 300 ரூபாய் சென்னைக்குப் பொருந்துமா ? அல்லது மாநிலம் முழுவதற்கும் பொருந்துமா ? ஒவ்வொரு மாவட்ட வாரியாக ஆயிரம் கல்லின் விலையை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சங்கத்தினர் கூடிப் பேசியபோது ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் 300 ரூபாய் என்று அந்தச் சங்கம் ஒப்புக் கொண்டது. மாநிலம் முழுமைக்கும் சேர்த்துத்தான் பேசப்பட்டது. மாவட்ட வாரியாக அது பேசப்படவில்லை.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்லின் விலை மிகவும் அதிகமாக ஏறிக் கொண்டு இருப்பதால். அரசாங்கமே அதுமாதிரி செங்கல் தொழிற்சாலையை ஆரம்பிக்க முன்வருமா ?

[1983 நவம்பர் 16

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவர் அவர்களே, அதுபற்றி தகவல் எதுவும் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல் செய்யும் தொழிலை கிராமப்புறங்களிலே குடிசைத் தொழிலாகச் செய்துக் கொண்டிருக்கிறார்கள். செங்கலுக்கு மூலப் பொருள் களிமண், அந்தக் களிமண்ணை குறிப்பிட்ட அளவுக்கு மேல் எடுத்தால், வண்டிக்கு 5 பைசா வீதம் கிராமப் புறங்களிலே செங்கல் செய்கிறவர்களிடம் இருந்து அரசாங்கம் வசூல் செய்கிறது. அரசாங்கம் எவ்வளவோ சலுகைகளை ஏழை எளியவர்களுக்கு செய்து வரும் போது, இந்த செங்கல் தயாரிக்கும் தொழிலை குடிசைத் தொழிலாக செய்து வரும் ஏழை எளிய மக்களிடத்தில் இப்படி வண்டிக்கு 5 பைசா வசூல் செய்யும் வரியை அரசு ரத்து செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி தகவல் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் அவையின் முன் அனுமதியுடன் சிறிது நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

(முற்பகல் 10.00)

சிறு தொழில் தொடங்க சான்றிதழ் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் திட்டம்.

*வினா எண் 197—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் அதிகாரத்திற்குட்பட்ட தொழில்களுக்கான லைசென்ஸ் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அக்குறையைப் போக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) மற்றும் (ஆ) : சிறுதொழில் தொடங்க உரிமங்கள் தேவையில்லை. தொழில வணிக இயக்குநரால் பதிவுச் சான்றிதழ்கள் மட்டும் வழங்கினாலே போதும். பதிவுச் சான்றிதழ் கோரி வரும் விண்ணப்பங்கள் போதிய விவரங்களுடன் சரிவர பூர்த்தி செய்யப்பட்டிருந்தால், சான்றிதழ் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதில்லை.



1983 நவம்பர் 16] [திரு வி. கிருஷ்ணமூர்த்தி]

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சான்றிதழ்கள் வழங்குவதிலே கூட, ஒரு ஆண்டு காலம் என்று வீணாக காலதாமதம் ஆகிறது. சிங்கப்பூர் போன்ற மேலை நாடுகளில் மனுதாரர்களை அழைத்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், ஆன் தி ஸ்பாட் டெசிஷன் என்ற வகையில், அதே இடத்திலேயே அப்ளை செய்த 4 நாட்களுக்குள்ளாகவே, லைசென்சுகளை வழங்குகிறார்கள். அந்தமுறையினை நம்முடைய மாநிலத்திலும் மேற்கொள்ள அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமங்களை வழங்கும் முன், உள்ளாட்சி மன்றம் சம்பந்தப்பட்ட எல்லாத் துறைகளிடமும், அவைகளின் முன் நோக்கத்தை பெற்று வந்ததே, தாமதம் ஏற்படக் காரணமாய் இருந்து வந்தது என்று கண்டு அறிந்து. இதனால் ஏற்படும் இடர்பாடுகளைக் களைய பல அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. எனவே, உரிய காலத்தில் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் – விடைகள் முடிவுற்றன.

## 2. ஒழுங்குப் பிரச்சினை.

### நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றவை

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சார், ஐ யாம் ரெயிசிங் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். நான் 11—11—1983 அன்று இந்த மாமன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திலே பேசுகிற சமயத்தில், இந்த அரசாங்கத்தின் பேரிலே பல குற்றச்சாட்டுகள் அடங்கிய என்னுடைய பேச்சை இந்த மாமன்றத்திலே செய்தேன். ஆனால் நேற்றையதினம் எனக்கு இந்தத் துறையால் வழங்கப்பட்டுள்ள என்னுடைய பேச்சுக்கான குறிப்பில், ஏறக்குறைய 3 அல்லது 4 பக்கங்கள் நான் சொல்லிய குற்றச்சாட்டுகளை நீக்கிவிட்டு, என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். டெபுடி ஸ்பீக்கருடைய ஆணையின் பெயரால் நீக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. எந்தெந்த செய்திகளை, எந்தெந்த பொருள்களில், எந்தெந்த வார்த்தைகளை உபயோகப்படுத்தக் கூடாது, அல்லது எந்தெந்த வார்த்தைகளை உபயோகப்படுத்தலாம் என்று. அப்ஜெக்ஷனபிளாக இருப்பதை விதிகளுக்கு உட்பட்டு நீக்குவதற்கு சபாநாயகர்

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

அவர்களுக்கும், டெபுடி ஸ்பீக்கருக்கும் உரிமை இருக்கிறது. அதிகாரம் இருக்கிறது. ஆனால் முழு பகுதியையோ அல்லது பெரும்பாலான பகுதிகளையோ நீக்குவதற்கு இந்த மன்றத்திலே உள்ள விதிகள் அதிகாரம் கொடுக்கவில்லை. ஆகையினால், நான் கேட்டுக் கொள்வது என்னுடைய பேச்சை, தயதுசெய்து தாங்கள் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும். அப்படி பரிசீலனை செய்து, எதெது வரையரைக்கு உட்பட்டதோ அவைகளை ரெஸ்டோர் செய்ய வேண்டும் என்றுதான் இந்த பாயிண்ட் ஆப் ஆர்டரை எழுப்பினேன். இது குறித்து சரியான நீதி வழங்கவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசிய முழு பேச்சுக்களின் விவரம் என்னிடத்திலே இல்லை. அதை அறையிலே படித்துப் பார்த்துவிட்டு, பிறகு தீர்ப்பு அளிக்கிறேன்.

## 3. தன்னிலை விளக்கம்.

### திரு. எல். இளயபெருமாள்—உண்ணாவிரதம் இருந்ததற்கான விளக்கம்

*திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் விதி 105-ன் கீழ் கீழ்க்கண்ட விளக்கத்தை அளிக்க கடமைப்பட்டிருக்கிறேன். 31—10—1983 அன்று தமிழக அரசை வற்புறுத்தி, நான் இங்கே பேசிய பேச்சுக்கள் மூலம் அமைச்சர் பெருமக்களிடம் சொன்னவைகளின் மீது சரியான நடவடிக்கை இல்லாத காரணத்தால், உண்ணாவிரதத்தை, மனித உரிமை பாதுகாப்பு சம்மேளனம் என்ற சோஷியல் ஆர்கனைசேஷன் மூலமாக மேற்கொண்டேன். எங்களுடைய கட்சியின் உதவித் தலைவர் திரு. சித்தன் அவர்களும் அதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தபோது...... (குறுக்கீடு, மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் தன்னிலை விளக்கமாக எழுதி அனுமதி பெற்றதை மட்டும் பேசுங்கள்.

திரு. எல். இளையபெருமாள் : நான் அவைகளை தங்களுக்கு சொல்வதற்குத்தான், இவைகளை படிக்கக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

நான் 1980-ஆம் ஆண்டு முதல் சென்னையில் மாநகராட்சி றுப்பினர்கள் இல்லாமையால் சர்வகட்சி கொண்ட குழு ஒன்று அமைக்க வேண்டுமெனவும் ;





இரண்டு, மத்திய அரசு எல்லா சமூக கிராமப்புற ஏழைகளுக்கு வீடு கட்டும் திட்டத்திற்கு வீடு ஒன்றுக்கு கூட்டுறவு முறையின் கீழ் ரூபாய் 6,000 கொடுக்க வேண்டுமென்ற திட்டம். மாநில அரசு ரூபாய் 3,000 ஆக குறைந்தது கூடாது என கேட்டு பிறகு ரூபாய் 5,000 ஆக கொடுக்கப்படும் என உறுதி கூறப்பட்டது நடக்காததும் ;

மூன்று, எழும்பூர் தொகுதி சேத்துப்பட்டு, சிவராஜ், மீனாம் பாள் நகரில், 1980 ஆம் ஆண்டு நடந்த தீ விபத்திற்கு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு வீடு கட்ட ரூபாய் 2,000 கொடுக் கிறேன் என்று பேரணியில் வாக்கு கொடுத்திருந்தும் ;

ஆதி திராவிட சமூக மக்களுக்கு நீதி துறையில் ஆவர்கள் விகிதாச்சாரப்படி பதவி கொடுக்க சட்ட அமைச்சர் உறுதி கொடுத்ததும்.

ஆதி திராவிட சமூக நலக்குழு 1980 ஆம் ஆண்டு முதல் அமைக்காதது பற்றி முதல்வர், ஆதி திராவிட நல அமைச்சர் உறுதி கொடுத்தும்.

சென்னை நகரத்தில் எல்லா சமூக ஏழை மக்கள் சுடந்த 100 ஆண்டு காலமாக வாழ்ந்துவரும் இடத்தை இனாமாகக் கொடுக்கவேண்டும்.

சென்னை கழிவுநீர் அகற்றும் திட்டம் 1920-ல் ஆரம் பிக்கப்பட்டதனை சீர்திருத்த ரூபாய் 200 கோடி.ருந்தும்

1980 ஆம் ஆண்டு முதல் ஏழை ஆதி திராவிடர்களுக்கு காமராஜர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தை கைவிட் டிருப்பது பற்றியும் பல முறை பேரவையில் நான் பேசியிருந்தும், அமைச்சர்கள் பேரவையில் உறுதி கொடுத்திருந்தும்,

புதுக்கோட்டை நகரத்தில் 13—7—1983-ல் வீடுகள் தீப் பற்றியது 8—11—1983 வரை அரசு எந்த உதவி கொடுக்காதது பற்றி வருவாய்த் துறை அமைச்சர் இடம் சொல்லியும் ஏதும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே தாங்கள் இதுபற்றி நான் 31—10—1983-ல் மனித உரிமை பாதுகாப்பு சம்மேளனத்தின் ஊழியர்களுடன் உண்ணாவிரதம் இருந்ததனை 2—11—1983 தினமணியில் நான் சட்டப் பேரவையில் பேசவில்லை ஏன் உண்ணாவிரதம் இருக்க வேண்டும் என்ற முறையில் தாங்கள் எங்கள் கட்சித் துணைத் தலைவர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் இதனை பேரவை கவனத்திற்குக் கொண்டு வந்தபோது சொன்னதாக இருப்பது சரியல்ல, ஆகவே குறிப்பில் அதுபோன்ற வாசகம் இருப்பதனால் இந்த விளக்கத்தை அளிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[1983 நவம்பர் 16

## 4. கவன ஈர்ப்பு.

### (அ) வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஆரம்பப் பள்ளிக் கட்டடங்களைப் பழுதுபார்த்தல்

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, ''வட ஆற்காடு மாவட்டத்தில் ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்கள் கடந்த ஐந்து ஆண்டுகளாக பழுது பார்க்கப் பெறாததால், அவைகள் இடிந்துவிழும் நிலையிலுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்களை ஐந்து ஆண்டுக் காலமாக பழுது பார்க்கும் வேலையை ஊராட்சி ஒன்றியங்கள் கவனிக்காமல் இருந்து வருகின்றன என்ற குற்றச் சாட்டு சரியில்லை. பள்ளிக் கட்டிடங்கள் பழுது பார்க்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை வந்தாலோ அல்லது ஆய்வின் போது பள்ளிக் கட்டிடங்கள் பழுது பார்க்கப்பட வேண்டுமென்று சுட்டிக் காட்டப்பட்டாலோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல் அந்த நிலை எந்தப் பள்ளிக்கூடத்திற்கும் இல்லை என்கிற அந்த நிலையை உறுதிப்படுத்த விரும்புகிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இப்போது ஊராட்சி ஒன்றியங்களின் ஆசிரியர்கள் கல்வி இலாகாவிற்கு அனுப்பப்பட்டு உள்ளார்கள். கட்டிடங்களைப் பழுது பார்க்கின்ற அந்த நிலைமை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களிடத்திலே இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் இல்லை. ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் இருக்கின்றபோது, அரசாங்க நிதி வராவிட்டாலும் பொது நிதியிலிருந்து அந்த பழுது பார்க்கிற பணிகள் செவ்வனே நடைபெற்றுக் கொண்டிருந்தன. இப்போது தனி அதிகாரிகள் டி. டி. ஓ.-க்கள் பொது நிதியிலிருந்து செலவழிக்காமல் எஜூகேஷனல் கிராண்ட் போதுமான அளவுக்கு வரவில்லை என்று காரணம் காட்டியிருக்கிறார்கள். உதாரணமாகச் சொல்லவேண்டுமானால் 36 ஒன்றியங்களிலே — அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்த நேரத்திலே நான் நேரிலேயே அவருடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன் — அரசாங்கத்தின் சார்பிலே எவ்வளவு நிதி பழுதுபார்க்கும் பணிக்குத் தேவைப்படுகிறது என்று கேட்கப்பட்டு ஆணையர்களும் அதற்காக இவ்வளவு தொகை தேவை என்று அரசாங்கத்திற்கு எழுதியிருப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனால் இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. உதாரணமாக என்னுடைய தொகுதியிலே எறும்பூண்டு, ஊசாம்பாடி, பொற்குளம், கொரால்பாக்கம், மல்லியாளமங்கலம், சரியானக்காம்பட்டு, அலங்கா



1983 நவம்பர் 16]

மங்கலம் ஆகிய இடங்களில் பல கட்டடங்கள், ஓட்டுக் கட்டடங்கள், டிஸ்ட்ரிக்ட் போர்டு கட்டடங்களாக இருக்கின்றன. வேறு மாற்றுக் கட்டடங்கள் கட்டாவிட்டால் அவைகள் எல்லாம் இடிந்து விழுகின்ற அபாயகரமான நிலைமை இருக்கிறது. இது போன்ற நிலை 36 ஊராட்சி ஒன்றியங்களிலே நிலவி வருகிறது. இந்த நிலை தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறது. அதைப் போக்க அரசாங்கம் எடுத்து இருக்கிற தீவிர நடவடிக்கை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே. அந்த ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக நம்முடைய தமிழக முதல்வர் அவர்களால் ஆக்கப்பட்டு அவர்கள் எல்லாம் அரசு ஊழியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இருக்கக் கூடிய பள்ளிக் கட்டடங்கள் எல்லாம் ஒன்றியங்களின் மூலமாக ஆணையர்களின் மூலமாக பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொன்னது எல்லாம் அவை இடிந்து விழுகிற நிலையில் இருக்கின்றன என்ற குற்றச் சாட்டைத்தான் கூறியிருக்கிறார்கள். இடிந்து விழுகிற நிலை என்று சொல்கிற நேரத்திலே எந்த எந்தப் பகுதியிலே அந்த நிலை இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு மாண்புமிகு உறுப்பினருக்கு இருக்கிறது. குறிப்பாக மாவட்டத்தை விட்டுவிட்டு இன்று மாநிலம் முழுவதும் அந்த நிலை இருக்கிறது என்ற குற்றச்சாட்டை இப்போது வைத்திருக்கிறார்கள். நான் அவரை பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்வது எல்லாம், 5 ஆண்டு காலமாக என்று சொல்வது சரியாக இருக்கமுடியாது. காரணம் தன்னிறைவுத் திட்டத்தை 1980-லிருந்து நாம் நடைமுறைப்படுத்திக் கொண்டு இருக்கிறோம். ஆகவே கட்டக்கூடிய கட்டிடங்கள் புதிய கட்டிடங்கள் இருக்கின்ற கட்டிடங்களுக்கு பராமரிப்புப் பணிக்கு மெயின்டனன்ஸ்க்கு பணம் தேவை என்றநிலையை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசுக்கு எழுதியிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, பழுதுபடுகின்ற கட்டிடங்கள் எதுவாக இருந்தாலும் அந்தப் பழுதை நீக்க பாங்கான அமைப்பு ஏற்படுத்த, அந்த பள்ளிக்கூடங்களை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறது. நீங்கள் சொல்வது ஒரு குற்றச்சாட்டு. எந்தக் கட்டிடமும் விழுகின்ற நிலையிலோ அல்லது விழுந்துவிட்ட நிலையிலோ கண்டிப்பாக இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 நவம்பர் 16

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடிந்து விழுகின்ற நிலையில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் இந்த கேள்வியை போட்டதற்குப் பின்னால் கட்டிடங்கள் இடிந்து விழுந்ததாக தகவல் வந்து இருக்கின்றன. நீங்கள் வேண்டுமானால் இப்பொழுது என்னை உடன் அழைத்துச் சென்றால் நான் நேரில் காண்பிப்பேன். அதில் பிள்ளைகளை உட்கார வைக்காதீர்கள் என்று நீங்கள் கண்டிப்பாக சொல்வீர்கள். அந்தக் கட்டிடங்கள் பகலில் இடிந்து விழுந்தால் மாணவர்கள் இறக்கக் கூடிய நிலை கட்டாயம் ஏற்பட்டுவிடும். இவைகளைப் போக்குவதற்கு நிதி ஒதுக்கி ஆணையாளர்களிடத்தில் கொடுத்து அல்லது பொது நிதியை செலவு செய்ய ஆணையாளர்களுக்கு, தனி அதிகாரிகளான டி. டி. ஓ.-க்களுக்கு அதிகாரத்தை வழங்கி உடனடியாக பழுதுபட்டுள்ள கட்டிடங்களை பழுது பார்க்க வேண்டும். தன்னிறைவுத் திட்டத்தில் கட்டப்பட்ட கட்டிடங்கள் வேறு. நான் சொல்வது ஏற்கனவே இருக்கின்ற பழைய கால கட்டிடங்கள். அதில் பாடசாலைகள் நடைபெற்று வருகின்றன. அதை அமைச்சர் அவர்கள் உணரவேண்டும். அந்தக் கட்டிடங்களை பழுதுபார்க்க வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக நிதி ஒதுக்கி ஆணையாளர்கள் மூலமாகவோ, தனி அதிகாரிகள் மூலமாகவோ எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய குற்றச்சாட்டை நான் மறுப்பதாக இல்லை. ஆனால், அதே நேரத்தில் உங்களுடைய கருத்துக்களுக்கு என்னிடத்தில் சந்தேகம் இல்லை. ஆனால் உங்களை கேட்டுக் கொள்வது எந்த இடத்தில் என்று குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். அதற்காகத்தான் இவ்வளவு தூரம் நான் பன்னி பன்னி கேட்கிறேன். நீங்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிற நேரத்தில் குறிப்பிட்டு, கோடிட்டு, சொன்னால், உடனடியாக இப்பொழுதே நாங்கள் நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கிறோம். எங்களைப் பொறுத்தவரையில் குற்றச்சாட்டு வரக்கூடாது என்பது மட்டும் அல்ல இருக்கக் கூடிய கட்டிடங்கள் பழுதுபட்டு விடாமல் இருக்க வேண்டும் என்பது தான் இந்த அரசினுடைய நோக்கம். ஆகவே தான் நீங்கள் எங்களுக்கு ஆதரவு தருகின்ற வகையில் உதவி செய்கின்ற வகையில் அந்த குற்றச்சாட்டை சரியான முறையில் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று நான் உங்களை கேட்டுக் கொள்கிறேன். எந்த ஊர்கள் என்று ஏதாவது பட்டியல் இருந்தால் தயவு செய்து கொடுங்கள். அந்தப் பட்டியலின்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக நாங்கள் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.



1983 நவம்பர் 16]

(ஆ) மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் டி. மணி, ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கதர்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

*திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே '' கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் லட்சக்கணக்கான டன்கள் தேனீ தேங்கியுள்ளதாலும் கடனாக கொள்முதல் செய்த தேனுக்கு ரூபாய் 13 இலட்சம் உறுப்பினர்களுக்கு வழங்கப் பெறாதது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கதர்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கி வருகிறது. இதில் 1,024 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் செலுத்தியுள்ள பங்குத் தொகை மொத்தம் ரூபாய் 1,33,684 ஆகும்.

தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இச்சங்கத்திற்கு மூலதனக் கடனாக ரூபாய் 13.84 இலட்சம் வழங்கியுள்ளது. பொதுவாக, வாரியம் கூட்டுறவு சங்கங்களுக்கு கொள்முதல் செய்வதற்கு முன் பணம், கொடுப்பதில்லை. என்றாலும், இந்தச் சங்க உறுப்பினர்களிடமிருந்து தேன் கொள் முதல் செய்த வகையில் சங்க உறுப்பினர்களுக்கு அவ்வப்போது பணம் பட்டுவாடா செய்ய வேண்டுமென்பதை கருத்தில் கொண்டு வாரியம் சங்கத்திற்கு முன் பணம் வழங்கியுள்ளது 1981-82 மற்றும் 1982-83-ம் ஆண்டுகளில் இச்சங்கத்திற்கு கொள் முதல் முன் பணமாக ரூபாய் 10.00 இலட்சம் வாரியம் கொடுத்துள்ளது. இதில், ரூபாய் 4.50 இலட்சம் சங்கம், வாரியத்திற்குத் திருப்பிச் செலுத்தியுள்ளது. மேலும் 1982-83ம் ஆண்டில், வாரியம் சங்கத்திற்கு மார்த்தாண்டம் கனரா வங்கி மூலம் ரூபாய் 9 இலட்சம் பெற்றுத் தந்துள்ளது.

[திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி] [1983 நவம்பர் 16

இச்சங்கத்தில் கடந்த மூன்றாண்டுகளில் (அதாவது 1980-81, 1981-82 மற்றும் 1982-83) தேனி வளர்ப்புக்கு பருவநிலை மிகவும் சாதகமாக இருந்தமையால் தேன் உற்பத்தி பெருமளவு உயர்ந்தது.

ஆனால் அதற்கேற்ப விற்பனை அதிகரிக்கவில்லை. இதன் காரணமாக தேன் இருப்பு கூடியது.

மேற்கண்ட சங்கத்தில் 31—3—1983 அன்று ரூபாய் 40.32 இலட்சம் பெருமானமுள்ள தேன் இருப்பில் இருந்தது.

தேன் உற்பத்தியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், மற்றும் இந்த கிராமத் தொழில் வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டும், சங்கத்தில் தேன் இருப்பில் இருந்தாலும் சங்கம் தேன் உற்பத்தியாளர்களிடமிருந்து தொடர்ந்து கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது.

1983ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் முதல் 9—11—1983 வரை சுமார் ரூபாய் 8.07 இலட்சம் பெருமானமுள்ள தேன் கொள் முதல் செய்யப்பட்டது. ஆக இருப்பு மற்றும் கொள் முதல் செய்த மொத்த தேனின் மதிப்பு (ரூபாய் 40.32 இலட்சம்+ 8.07 இலட்சம்) ரூபாய் 48.39 இலட்சமாகும்.

கடந்த (1983ஆம் ஆண்டு) மே திங்களில் மார்த்தாண்டம் தேன் தங்கி விடுவதைத் தவிர்க்க பிற மாநிலங்களுக்குச் சென்று தேன் மற்றும் கதர் கிராமத் தொழில் பொருட்கள் தேவையினைக் கண்டறிய, தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அலுவலர் குழுக்களை அமைத்தது.

இக்குழுக்கள் 1983-ஆம் ஆண்டு மே திங்களில், மேற்கு வங்கம், மகாராட்டிரம், குஜராத், அரியானா, டெல்லி, ஆந்திரம், கர்நாடகம் மற்றும் கேரள மாநிலங்களுக்குச் சென்று சுமார் ரூபாய் 22.00 இலட்சம் பெருமானமுள்ள தேன் தேவைகளை அறிந்து வந்துள்ளன.

இதன் தொடர்பாக இதுவரை ரூபாய் 7.00 இலட்சம் பெருமானமுள்ள தேனினை மார்த்தாண்டம் தேன் வளர்ப்பு கூட்டுறவு சங்கம் வெளி மாநிலங்களில் விற்றுள்ளது. (9—11—1983ல் மீதி ரூபாய் 41.39 இலட்சம் மதிப்புள்ள தேன் கையிருப்பு இருந்தது).

இம்மாதத்திற்குள் (நவம்பர்) ரூபாய் 3.00 இலட்சம் பெருமானமுள்ள தேனை பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவிற்கும் மற்றும் டெல்லி கதர் கிராமத் தொழில் விற்பனை நிலையத்திற்கும் அனுப்பப்படும்.



1983 நவம்பர் 16] [திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி]

மொத்த " ஆர்டர் " பெறப்பட்ட ரூபாய் 22.00 இலட்சம் பெருமான தேனில் மீதமுள்ள ரூபாய் 12.00 இலட்சம் (ரூபாய் 22.00—10.00 இலட்சம்) பெருமானமுள்ள தேனை வெளி மாநிலங்களுக்கு அனுப்ப கதர் வாரியம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தேன் கொள்முதல் செய்தவகையில் சங்க உறுப்பினர் களுக்கு கொடுக்க வேண்டிய தொகை ரூபாய் 35.13 இலட்சமாக இருந்தது. இதில் 22.13 இலட்சம் கொடுக்கப்பட்டு விட்டது. 9—11—1983 அன்றைய தேதியில் சங்க உறுப்பினர்களிடமிருந்து தேன் கடனாகக் கொள் முதல் செய்த வகையில் சங்க உறுப்பினர் களுக்கு கொடுக்க வேண்டிய தொகை ரூபாய் 13.00 இலட்ச மாகும். இதை அவர்களுக்கு வழங்க சங்கம் நடவடிக்கை மேற் கொண்டுள்ளது.

மார்த்தாண்டம் தேனீ வளர்ப்பு சங்கத்தில் உள்ள இருப்பினைக் குறைக்கவும், விற்பனையை அதிகரிக்கவும் தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

(1) 1983ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் மகாராட்டிரம் மற்றும் குஜராத் மாநிலங்களிலிருந்து வெளியாகும் முக்கிய நாளேடுகளில் விளம்பரம் கொடுப்பதற்கு மார்த்தாண்டம் தேனீ வளர்ப்பு சங்கத்திற்கு வாரியம் அனுமதி அளித்துள்ளது.

(2) கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் மூலமும் தேனை விற்பனை செய்ய வாரியம் ஏற்பாடு செய்துள்ளது.

(3) சென்னை மாநகரில் கிராமப் பொருட்கள் விற்பனையை விரிவாக்கவும், சிறப்பாக தேன் விற்பனையைப் பெருக்கவும் 20 விற்பனை நிலையங்கள் ( Banks ) குடியிருப்பு பகுதிகளில் வாரியம் அண்மையில் நிறுவியுள்ளது.

(4) வாரியம் பம்பாய், கதர் கிராமத்தொழில் ஆணைக் குழுவினையும் அணுகி மார்த்தாண்டம் தேனினை கொள்முதல் செய்யக் கோரியுள்ளது.

மேலும் கையிருப்பிலுள்ள தேனை விரைவாக விற்பனை செய்து உறுப்பினர்களின் கடனை தீர்க்கும் பொருட்டு இலாபம் ஏற்படாவிட்டாலும், நட்டமில்லாமல் விற்பனை செய்ய சங்கத் திற்கு வாரியம் அனுமதி வழங்கியுள்ளது.

இவ்வாறு தேனீ வளர்ப்புத் தொழிலும் அதில் ஈடுபட் டுள்ள தேனீத் தொழிலாளர்களும் பாதிக்கப்படா வண்ணம் உரிய நடவடிக்கைகளை, வாரியம் மேற் கொண்டுள்ளது.

[1983 நவம்பர் 16

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் அந்த விவர அறிக்கையை மிகத் தெளிவாகப் படித்தேன். ஏற்கெனவே இந்தப் பிரச்சினையை நான் இங்கே குறிப்பிட்டு இருக்கிறேன். கடந்த 25—6—1983-ல் முன்னாள் பொறுப்பில் இருந்த கதர் கிராமத் துறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பு கடையான்மூட்டில் ஒரு நிகழ்ச்சிக்கு வந்து இருக்கிற போது இந்த தேன் தேங்கி இருப்பது சம்பந்தமாக ஒரு மனு கொடுத்தேன். அதற்கு பதில் கூறுகின்ற நேரத்தில் அதிகாரிகள் தவறான பல்வேறு தகவல்களை தந்தார்கள். ஆகவே, தொடர்ந்து பல்வேறு காரியங்களை அவர்களுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டு வந்தும் இருக்கிறேன். அந்த மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் 1—1—83-லிருந்து 31—10—83 வரை கொள்முதல் செய்த தேன் 2 இலட்சத்து 21 ஆயிரத்து 845 கிலோ தேன் ஆகும். கடந்த ஆண்டு அவர்களுடைய கையிருப்பு என்பது சுமார் 70,000 கிலோ தேன். இந்த இரண்டும் சேர்த்து இந்த ஆண்டு கையிருப்பு இருந்த 230976—920 இந்த தேனை இந்த டிசம்பர் மாதத்திற்குள்ளாக முழுவதுமாக விற்பனை செய்யாமல் இருந்தால் அடுத்த சனவரி, பிப்ரவரி மாதங்களிலே தேனை எடுக்கின்ற நேரம் வருகின்ற பொழுது, அந்த உறுப்பினர்களுக்கு ஒன்றும் செய்ய முடியாது. ஏற்கெனவே கொள்முதல் செய்த தேனில் 13 இலட்சத்திற்கு அதிகமான ரூபாயை அந்த உற்பத்தியாளர்களுக்கு அந்தக் கூட்டுறவுச் சங்கம் கொடுத்தாக வேண்டிய நிலையிருக்கிறது. ஆகவே, இந்த 10 மாதக் காலமாக, இந்தக் கதர் கிராம வாரியத்தில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், இந்தத் தேனை விற்பனை செய்ய போதுமான, தகுதியான நடவடிக்கை மேற்கொள்ளாததன் விளைவாக 1,100-க்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட, அதன் பின்னாலே பதினாயிரத்திற்கு மேற்பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட, அதன் பின்னாலே வேலை செய்கின்றவர்களைக் கொண்ட அந்த மிகப் பெரிய ஸ்தாபனத்திலே அடுத்த கட்ட தேனை வாங்க முடியாத நிலைமை உருவாகியிருக்கிறது. ஆகவே, அந்த தேன் முழுவதையும் அவசரமாக விற்பனை செய்வதற்காக........

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பிரசங்கம் செய்கிறார்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரூபாய் 13 இலட்சம் மதிப்புள்ள தேனை வாங்க வேண்டுமென்று விளக்கமாகச் சொல்கிறார். அதைச் சுருக்கமாக கேட்க வேண்டும்.

திரு. டி. மணி : அந்தத் தேனை விற்பனை செய்வதற்குக் கதர் கிராம வாரியம் தகுதியான நடவடிக்கையை மிகத் துரிதமாக மேற்கொள்ளுமா என்பதுதான் என்னுடைய கேள்வி.



1983 நவம்பர் 16]

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்களை அரசு பரிசீலனை செய்து, இந்தத் தேனை விற்பனை செய்ய துரித நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் வலியுறுத்துவதெல்லாம் இந்த இரண்டு மாதத்திற்குள்ளே அந்தத் தேனை விற்பனை செய்ய ஏற்பாடு செய்தால்தான் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் கொள்முதல் செய்ய முடியும். ஆக, இந்த இடைப்பட்ட காலத்திலே அந்த தேனை விற்பனை செய்வதற்காக, துரிதமான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். மேற்கொள்ளுமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : அரசு தீவிர பரிசீலனை செய்து அதற்கு வேண்டிய நடவடிக்கையை உடனடியாக எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையை தெரிவிக்கும் தீர்மானம் —(தொடர்ச்சி)

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முடிக்கப்பட வேண்டிய என் பேச்சையும் இது சம்பந்தப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த திரு. உமாநாத் அவர்கள் கூற வேண்டிய கருத்துக்களையும் அதற்கு நான் பதில் சொல்ல வேண்டியதையும் முடிக்க முடியாமல் இன்று தொடர்வதற்கு அனுமதித்ததற்காக பேரவைத் தலைவருக்கும் அவையிலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

முதலில் சில தனிப்பட்ட குற்றச் சாட்டுகள் போல, தங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை, விவரங்களை, செய்திகளை, உண்மை என நம்பி எடுத்துக் கூறிய பலவற்றிற்கு நான் எழுத்து மூலமாகவே படித்து, பதிலைச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாவட்டத் தொழில் மையங்கள் சரியாக வேலை செய்யவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு ஹாஜா செரீப் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாவட்டத் தொழில் மையங்கள் 1978—79-ல் செயல்படத் தொடங்கின. கடந்த மூன்று

மூன்று ஆண்டுகளாகக் கருத்தரங்குகள் தொழில் முன்னவர்களுக்கு நடத்தப்பட்டன. கடந்த 4 ஆண்டுகளில் சுமார் 15,000 சிறு தொழில்களுக்கு மட்டும் ரூ. 30 கோடி அளவுக்கு கடன் உதவி தரப்பட்டுள்ளது. 1978ஆம் ஆண்டு மார்ச் திங்களில் 18,000 ஆக இருந்த சிறு தொழில் பிரிவுகள் 46,000 ஆக உயர்ந்துள்ளன.

மாவட்டத் தொழில் மைய அமைப்புகளை ஆய்வு செய்ய உயர்மட்ட அளவில் முதல் அமைச்சர் அவர்கள் தலைமையில் மாநில அளவிலும், தலைமைச் செயலக அளவில் தலைமைச் செயலரின் தலைமையிலும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலும் குழுக்கள் உள்ளன. தலைமைச் செயலாளர் தலைமையில் உள்ள குழு 8 முறை கூடி மாவட்டத் தொழில் மையப் பணிகளை ஆய்வு செய்துள்ளது. எனவே அது கூடவில்லையென்பது சரியான தகவல் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நியாய விலைக் கடைகளைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பொது வினியோகத்தில் சரியாக உணவுப் பொருள்கள் கிடைப்பதற்கு ஏதுவாக உணவுத் துறையின்கீழ் 14—8—1983 அன்று விழிப்புப் பணிக்குக் குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

(முற்பகல் 10—20)

இந்தத் திட்டத்தின்கீழ் தமிழகத்திலே உள்ள 17,844 நியாய விலைக் கடைகளுக்கு குழுக்கள் அமைக்கப்பட்டன. தமிழகத்திலே உள்ள நியாய விலைக் கடைகள் எப்படி சரியாக வேலை செய்கின்றன என்பதைப் பற்றி டெல்லியில் 8—11—1983 அன்று நடந்த மத்திய பொது விநியோக ஆலோசனைக் குழுக் கூட்டம் தமிழகப் பொது விநியோக முறையை பாராட்டியுள்ளது. (இந்து நாள் இதழ் 9—11—1983.) எல்லாப் பொருள்களும் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் நியாயவிலைக் கடைகள் மூலமாக வழங்கப்படும் பொருள்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். இதன் தொடர்பாக தமிழ் நாடு மற்றும் மேற்கு வங்காள அரசுகள் எடுத்த நடவடிக்கைகள் பாராட்டப்படுவதோடு, மற்ற மாநிலங்களும் இதை செயல்படுத்த வேண்டுமென்று அவர்கள் பாராட்டி இருக்கிறார்கள். இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். தினமலர் வார இதழில் வங்காளத்தில் குறைந்த விலையில் உணவுப் பொருள்கள் விற்கப்படுவதாக செய்தி வந்துள்ளது. அது சரியில்லை என்று எனக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருள் இணை ஆணையாளர் அவர்கள் மார்க்கெட் நிலவரப்படி கொடுத்த தகவல்கள் நிறைய





இருக்கின்றன. இருந்தாலும்; குறிப்பாக இந்தப் பொருள்களின் விலையின் விளைவாக பம்பாயில் 567 ; டெல்லியில் 483 ; கல்கத்தாவில் 465 ; தமிழ் நாட்டில் 424 என்ற புள்ளி விவரம் தரப்பட்டிருக்கிறது. ஆகவே சென்னையில் விலை குறைவு என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

திரு . சாகுல் ஹமீது அவர்கள் வக்ப் வாரியம் செயலற்று கிடக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். 19—10—1981 அன்று திரு. எஸ். எஸ். சையது யூசுப் அவர்களுடன் பதினொன்று உறுப்பினர்கள் கொண்ட ஒரு புதிய வக்ப் வாரியம் ஐந்து ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளது. திரு. சையது யூசப் அவர்கள் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 17—2—1983-ல் இவர் தன்னுடைய பதவியை இராஜினாமா செய்தார் 2-7-1983 அன்று அவருடைய இராஜினாமாவை அரசு ஏற்றுக் கொண்டது. அவருக்கு பதிலாக உறுப்பினர் நியமனம் செய்யப்படாததால் வக்ப் சட்டத்தின்படி அவரே தலைவர் பொறுப்பிலே இருந்து தொடர்ந்து பணியாற்றி வருகிறார். வக்ப் வாரியத்தின் பணிகளில் எந்தவிதமான தேக்கமும் இல்லை. சென்னை, மதுரை, திருச்சி, சேலம், கோவை ஆகிய இடங்களில் வக்ப் வாரியம் உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு, விசாரணைக்காக வாரியத்திற்கு வரும் மனுக்கள் மீதான விசாரணை நடத்தப்படுகின்றன. 1981—82-ல் விசாரணைக்கு வந்த வழக்குகளின் எண்ணிக்கை 61 ; தீர்க்கப்பட்டவை 38; 1982—83-ல் விசாரணைக்கு வந்த வழக்குகள் 54 ; தீர்க்கப்பட்டவை 25 ;1983-84 விசாரணைக்கு வந்த வழக்குகள் 12 ; தீர்க்கப்பட்டவை 10 ; இதுமாதிரியான முறை தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெறவில்லை. வக்ப் வாரியம் ஆரம்பிக்கப்பட்டு 24, 25 ஆண்டுகள் ஆகியும் சொந்த கட்டிடம் இல்லாமல் வாடகைக் கட்டிடத்தில் இருந்து வருகிறார்கள. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 3.07 இலட்சம் செலவில் வக்ப் வாரியத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு ஜார்ஜ் டவுன் பகுதியில் 5½ கிரவுண்ட் மத்திய பாதுகாப்பு துறையிடமிருந்து வாங்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையை அரசு வாரியத்திற்கு கடனாக வழங்கியிருக்கிறது. வக்ப்பிற்கு சொந்தமான இடங்களில் கட்டிடங்கள் கட்டி வருமானத்தைப் பெருக்குகிற திட்டத்திற்காக 1980—81 முதல் 1983—84 வரையில் நான்கு ஆண்டுகளில் 28 வக்புகளுக்கு ரூபாய் 17.95 இலட்சம் அரசு கடனாக வழங்கியுள்ளது. முந்தைய ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற கடன்கள் வழங்கப்படவில்லை. மேற்படித் திட்டத்திற்காக மத்திய வக்ப் வாரியத்திலிருந்து நான்கு ஆண்டுகளில் கடனாகப் பெற்று தமிழ் நாடு வாரியத்திற்கு வழங்கியுள்ள தொகை ரூபாய் 29.75 இலட்சம். முந்தைய ஆட்சிக் காலத்தில் இவ்வாறு கடனாகப் பெறப்பட்டு வழங்கப்பட்ட தொகை ரூபாய் ஒரு லட்சம். பழுதடைந்த வக்ப்களின் பள்ளிவாசல், மசூதி போன்றவைகள் புதுப்பிக்கும் நிர்மாணப் பணிகளுக்கு 1980 முதல்

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 16

1983 வரையில் அரசு வழங்கியுள்ள மானியம் ரூபாய் 16.30 லட்சம். முந்தைய அரசு இதுபோன்ற மூன்று ஆண்டுகளிலே வழங்கிய தொகை ரூ. 7 லட்சம். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 1982-ல் உலாமாக்கள் என்ற மார்க் அறிஞர்களுக்கு மாத ஒய்வூதியமாக ரூபாய் 250 வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரையில் 500 உலாமாக்கள் 12 லட்சம் ஒய்வூதியமாக பெற்று வருகிறார்கள். இதுபோன்ற திட்டம் இதற்கு முன்னால் இல்லை.

மாணவ மாணவியரின் கல்வி மேம்பாட்டுக்காக நிதியுதவி செய் யும் திட்டமும், முஸ்லீம் ஏழை விதைவைகளுக்குத் தையல் இயந் திரம் வழங்கும் திட்டமும், ஏழைச் சிறார்களுக்குச் சுன்னத் என்னும் மார்க்க கல்யாணம் செய்து வைக்கும் திட்டமும், தொழுநோயால் பீடிக்கப்பட்ட முஸ்லீம்களுக்கு ரம்ஜான் துணிகள் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை முஸ்லீம் மகளிர் உதவிச் சங்கத்தின் மூலம் 300 முஸ்லீம் விதவைப்பெண்களுக்கு இச்சங்கம் மாதம் ரூபாய் 15 வழங்கி வருகிறது. அத்துடன் அவர்களுக்கு அந்த விதிகளைத் தளர்த்தி மாதம் ஒன்றுக்கு ரூபாய் 35 உதவித் தொகையாகவும், இலவச அரிசி மற்றும் சேலையும் 31–5–1983 முதல் அரசு வழங்கி வருகிறது. இதனால் அரசுக்கு ஆகும் செலவு 1.79 இலட்சம்.

தாம்பரத்திற்கு அருகாமையிலுள்ள ராஜகீழ்ப்பாக்கம் கிராமத் தில் 12.85 ஏக்கர் நிலத்தை வாரிய ஊழியர்களுக்கு ஒரு கிரவுண்ட் நிலம் வீதம் 99 வருட குத்தகைக்குக் குறைந்த விலையில் விட பட்டுள்ளது. மாதக் குத்தகை ரூபாய் ஐந்துதான்.

வக்ப் வாரியத்தின் கீழ் மதுரையிலும், உத்தமபாளையத்திலும் இரண்டு கல்லூரிகள் இயங்கி வருகின்றன. எனவே, வக்ப் வாரி யம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. உறுப்பினரின் புகாருக்கு ஆதாரம் இல்லை.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஹாஜா செரீப் அவர்கள் ஒரு குறையைச் சொல்லியிருக்கிறார்கள். இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு மத்திய அரசின் முதலீடு மிகவும் அவசியம். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசின் முதலீடு ஆண் டுக்காண்டு குறைந்து வந்திருக்கிறது. 69-ல் 8 சதவீதம், 79-இல் 4 சதவீதம், 1982-ல் 4 சதவீதம். தமிழகத்தின் மக்கள் தொகை இந்தியாவின் மக்கள் தொகையில் 7.07 ஆகும். ஆகவே, மத்திய அரசின் முதலீடு தமிழகத்தில் குறைந்தபட்சம் 7.07 சதவீதம் இருக்க வேண்டும். அது இல்லை என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள வேண்டியவனாக இருக்கின்றேன்.



1983 நவம்பர் 16] [டாக்டர் எம். ஜி. ராமச்சந்திரன்]

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்த நண்பர் மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்ட இரண்டு கோடி மைய அரசு ஒதுக்கியது; அதில் செலவு செய்தது மூன்று சதவீதம் தான், பொதுவாகவே ஆதிதிராவிடர்களின் நன்மைக்காக ஒதுக்கப் படும் தொகையில் 35 சதவீதம் செலவிடப்படாமல் திருப்பித் தரப்படுவதாகச் சொல்லப்படுகிறது என்று சொன்னார்கள்.

நான் நன்றி கூறுகிறேன், நல்ல வேளையாக, சொல்லப்படு கிறது என்றுதான் சொன்னார்கள், அவர்கள் தந்த தகவலைப் பற்றி. அப்படி இருக்கிறது என்று அவர்கள் சொல்லவில்லை என்பதற்காக நான் மகிழ்ச்சி அடைவதோடு நான் விளக்கம் கொடுக்க விரும்புகிறேன்.

இதேபோல மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள், 1980 ஆம் ஆண்டுக்குப் பின் ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வீடு கட்டும் திட்டம் செயல்படுத்தப்படவில்லை என்று குற்றச் சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். இருவருக்குமாக இந்தப் பதிலைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

ஆதி திராவிடர்கள் வீட்டு வசதித் திட்டத்திற்கென மைய அரசு நிதி ஒதுக்குவது இல்லை. இன்னொரு முறை படிக்கிறேன், ஆதிதிராவிடர்களின் வீட்டு வசதித் திட்டத்திற்கென மைய அரசு நிதி ஒதுக்குவதில்லை. இத்திட்டம் மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டி லிருந்து செயல்படுத்தப்படுவதாகும்.

அகில இந்திய அண்ணா தி.மு.க. அரசு 1977 இல் பொறுப் பேற்றுக்கொண்டபின் 11,385 வீடுகளை ஆதிதிராவிடர்களுக்குக் கட்டிக் கொடுத்துள்ளது. கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வினால் மதிப்பீட்டுத் தொகை அதிகரித்தது. எனவே, கட்டப்படும் வீடுகளின் வடிவமைப்பைக் கிராமப்புறக் கூட்டுறவு வீட்டு வசதித் திட்டத்தைப் பின்பற்றி 4,000 மதிப்பீட்டுச் செல வில், 210 சதுர அடி பரப்பளவில் கட்ட அரசு முடிவு செய்தது. இதில் மானியம் ரூபாய் 3,250. பயன்பெறுவோர் உழைப்பின் பங்கு ரூ. 750 ஆகும். அவர்களே வீடு கட்டிக் கொள்வார்களே யானால், பணத்தைக் கொடுத்து அதற்கு வேண்டிய பொருட் களை வாங்கிக் கொடுத்துவிட்டோமானால் அல்லது வாங்கி னார்களானால் உறுதியாக, தங்களுக்குத் தேவையான வகையில் பல ஆண்டுக்காலம் நீண்டு நிலைத்து இருக்கும் வகையில் செய் வார்கள் என்ற நம்பிக்கையில் அதை அவர்கள் உழைப்பிலே எடுத்துக் கொள்ளட்டும் என்று 750 ரூபாயைக் கையிலே கொடுத் தோம்.

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 16

வீடுகளின் மதிப்பீட்டுத் தொகை அதிகரித்ததாலும், கிராமப் புற வீட்டு வசதித் திட்டமாக அதைப் பின்பற்ற ஆராய்ந்ததாலும் 1979-80 மற்றும் 1980-81இல் விடுபட்ட திட்டங்களையும் உள்ள டக்கி, பத்தாயிரம் வீடுகள் கட்ட வகை செய்யப்பட்டது. 1983 செப்டம்பர் திங்கள் முடிய 5,125 வீடுகள் கட்டுமானப் பணி யிலும் 463 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டும் உள்ளன.

கூட்டுக் கிராமங்கள் திட்டத்தின்கீழ் 1,430 வீடுகள் கட்டு மானப் பணியில் உள்ளன; 55 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன.

கிராமப்புற வீட்டு வசதித் திட்டம் 1978-79ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 94,526 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்குக் கட்டித் தரப்பட்டுள்ளன.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரண்டு இலட்சம் வீடு களை இம்மாதிரி கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத் தின் மூலம் ஆதிதிராவிடர்கள் வீடு கட்டிக்கொள்ள 'ஹட்கோ' மூலம் ரூ. 3,000 கடன் உதவியும், மானியமாக ரூபாய் ஆயிரமும், அரசுக் கடன் உதவியாக ரூபாய் ஐநூறும் பெறுகின்றனர். பயன் பெறுவோர் உழைப்புக்காக ரூ. 1,500-ஐ ஈடு செய்ய வேண்டும்.

(முற்பகல் 10 —30)

இந்தத் திட்டத்தின் மூலம் ஆதி திராவிடர்களுக்கு 1978-79ல் 9,488 வீடுகளும், 1980-81ல் 34,238 வீடுகளும், 1981-82ல் 31,835 வீடுகளும், 1982-83ல் 32,745 வீடுகளும் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. தற்போது 31-8-1983 வரை அதாவது ஜூன், ஜூலை, ஆகஸ்ட் வரை 21,080 வீடுகள் கட்டுமானப் பணியில் உள்ளன. ஆதிதிராவிடர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட தொகைக் கும் கூடுதலாகத்தான் ஒவ்வொரு ஆண்டும் செலவழிக்கப்பட்டு வருகின்றது. 1980-81ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை லட் சத்தில் சொல்கிறேன். 1,199.84 இலட்சம். செலவு செய்யப் பட்டது 1,356.10 இலட்சம். 1981-82ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 1,617.48 இலட்சம். செலவு செய்யப்பட்டது 1,686.31 இலட்சம். 1982-83ல் இன்னும் இந்த ஆண்டு முடியவில்லை -- 1910.37 இலட்சம் என்று திட்டமிடப்பட்டது. ஆனால் செலவு செய்யப்பட்டது 1967.17 இலட்சம்.

எனவே உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல் ஆதிராவிடர் நலனுக்காக ஒதுக்கப்படும் தொகையில் 35 விழுக்காடு திருப்பித் தரப்படுவதாகச் சொல்லப்படுவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.



1983 நவம்பர் 16] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட வேறு சலுகைகள். வீட்டுமனைப் பட்டா. 1977 மார்ச் திங்கள் வரை ஆதி திராவிடர் களுக்கு வழங்கப்பட்ட மனைப்பட்டாக்களின் எண்ணிக்கை 42,548. ஆனால் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக்கொண்ட பின் 1977 முதல் 1982 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட மனைப்பட்டாக்களின் எண்ணிக்கை 1,28,203.

அடுத்து ஆதி திராவிடர் நலப்பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டு தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். 1980-81, 1981-82 ஆகிய ஆண்டுகளில் இதற்காக ஒரு கோடி ரூபாய் செலவிடப்பட்டது. 1982-83, 1983-84 ஆகிய ஆண்டுகளுக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

ஆதி திராவிடர் நலத்துறை நடத்தும் பள்ளிகளில்—சத்துணவுத் திட்டம் கொடுத்தோமே அதுவல்ல, ஆதி திராவிட நலத்துறை நடத்துகின்ற பள்ளிகளில் 1,72,636 மாணவர்களுக்கு முதலமைச் சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவு வழங்கப் படுகின்றது.

கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்கு உதவித் தொகை அளிக்கும் திட்டம் 18-9-1978 முதல் செயல்படுத்தப் படுகின்றது. இந்தச் சலுகை பெற விண்ணப்பிப்பதற்கான கால அளவு திருமணம் நடந்த நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள் என நீட்டிக்கப்பட்டுள்ளது.

இது தவிர ஆதி திராவிடர்களுக்கு சிறு தொழில் கடன் வசதி அளித்தல்; ஆடு வளர்ப்பு, குடிசைத் தொழில், பால் உற்பத்திச் சங்கங்கள் அமைத்துத் தருதல்; உழவு மாடுகள் வாங்க கடன் வசதி; மூன்றில் ஒரு பங்கு மானிய வசதியில் பாசனக் குழாய் கிணறுகள் அமைத்தல்; ஆதிதிராவிடர் மயானத்திற்கு இணைப்புச் சாலை வசதி; ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு தருதல்; சமுதாயக் கூடங்கள் கட்டித் தருதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

ஆதி திராவிடர் குடும்பத்தில் யாரேனும் இறந்துவிட்டால் இறுதிச் சடங்குக்கு ரூபாய் 50 அளிக்கும் திட்டம் 1979-ல் துவக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் 5 இலட்சம் இதற்காக ஒதுக்கப்படுகின்றது.

நண்பர் திரு. உமாநாத் அவர்கள் ஆதி திராவிட மாணவர்களுக்கு இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுவதில் கடந்த ஆண்டுகளில் 30 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்களுக்குத் தரப்படவில்லை என்ற தகவலை இந்த அவையிலே வைத்தார்கள். 1977 78-ஆம் ஆண்டிலே இருந்து பொதுப் பள்ளிகளில் 4-வது வகுப்பு முதல் 10-வது வகுப்பு வரை பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பிள்ளைகளுக்கு அவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமானத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் மூலமாகப் பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்கி வருகின்றது. 1977-78 ஆம் ஆண்டு முதல் இந்தத் திட்டத்தின் கீழ் தகுதியுள்ள மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

இதேபோல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத் துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் 1-வது முதல் 10-வது வகுப்புவரை பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1977–78 ஆம் ஆண்டு முதல் பாடப் புத்தகங்கள் பெறத் தகுதியுடையவர்கள் அனைவரும் பாடப்புத்தகங்கள் பெற்று பயன் அடைந்துள்ளனர். 1977–78-ல் பாடப்புத்தகம் பெறத் தகுதி பெற்றவர்கள் 7.50 லட்சம் பேர். 1978–79-ல் 8.40 லட்சம் பேர். 1979–80-ல் 9.11 லட்சம் பேர். 1980–81-ல் 9.42 லட்சம் பேர். 1981–82-ல் 9.55 லட்சம் பேர். 1982–83-ல் 9.89 லட்சம் பேர். இவர்கள் அனைவருக்கும் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டு விட்டன. எனவே 30,000 ஆதி திராவிடர் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் வழங்கப்படவில்லை என்று திரு. உமாநாத் அவர்களின் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை என்று என்னுடைய குறிப்புகள் கூறுகின்றன. இதிலே ஏதாவது அவர் குறிப்பிட்டு எடுத்து வைப்பார்களானால் அவருடைய பதிலில், நிச்சயமாக அதற்குக் காரணமானவர்கள் மீது தகுந்த நடவடிக்கை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. நெடுமாறன் அவர்கள் ஆதி திராவிடர்களுக்குச் சிறப்பு ஐந்தாண்டுத் திட்டம் வகுத்து, ஐந்தாண்டு காலத்தில் செயல்படுத்தப்படும் என்று 1980 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் குறிப்பிட்டது என்ன ஆயிற்று என்று கேட்டு இருக்கிறார்கள். எங்களுடைய தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடியும், ஆளுநர் உரையில் குறிப்பிட்டபடியும் இந்த அரசு ஆதி திராவிடர்களுக்குத் தேவையான ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தை, வேறொரு பெயரில் சிறப்பு உதவி அளிக்கும் திட்டம் என்ற திட்டத்தை தயாரித்து 1980–81 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



இதன்மூலம் ஆறாவதுஐந்தாண்டு திட்டகாலத்தில்சுமார் 9லட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் பொருளாதார ரீதியில் மேம்படுத்தவும், ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு குடிநீர், சாலை வசதி, மின் வசதி, மருத்துவம், கல்வி போன்ற வசதிகள் செய்து தரவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள சிறப்பு அம்சங்கள் விதைகள், உரம், பூச்சிமருந்து போன்றவை வழங்கும் திட்டம். மண்வளத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியத் தொகையில் 33 3/4 சத விகிதம் ஆதி திராவிடர்களுக்குக் கிடைக்கும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் ஆதி திராவிடர்களை அதிகம் பங்கு கொள்ள அவர்கள் எண்ணிக்கை உயர்த்தப்படும். பட்டுப் பூச்சி வளர்ப்பில் ஈடுபடுத்தப்படுவர். சிறு தொழில் கடன், கிணறு வெட்ட மானியம். கிராமத் தொழில்களுக்குக் கருவிகள் வழங்குதல். எல்லா குடியிருப்புகளுக்கும் குடிநீர் வசதி, மின்சார வசதி அளித்தல், இலவச புத்தகம் வழங்குதல், கல்வி உதவித் தொகை மற்றும் வீட்டு வசதி தருதல், மைய அரசின் சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதியை ஆதி திராவிடர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காகச் செலவிடப்படுகிறது. ஆதிதிராவிடர்களுக்கு நூற்பாலைகளில் வேலை வாய்ப்பு அளிக்க கூட்டுறவு நூற்பாலைகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. 7 இடங்களில் விசைத் தறிகள் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. காலணி தொழிலாளர்களுக்கு பெட்டிக்கடைகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன. மோட்டார் சைக்கிள் ரிக்ஷா வாங்க ஆதிதிராவிடர்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. பாசனத்திற்கு குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. 15 மாவட்டங்களில் மிகவும் பின்தங்கிய மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பல்வேறு சிறுதொழில்கள் தொடங்கப்படும். இச்சிறப்பு ஐந்தாண்டு திட்டங்கள் மூலமாக, ஆதி திராவிடர்கள் நிரந்தரமாக வருமானம் பெற்று பொருளாதார சமூக மேம்பாடு அடைந்து வருகின்றனர்.

இது எங்கே என்று கேட்டார்கள். எதற்காக என்று கேட்டார்கள். இன்னொரு பெயரில் இதே திட்டத்தை, சிறப்புத் திட்டமாக நிறைவேற்றி வருகிறோம் என்பதை எடுத்துக் காட்டத்தான், தேர்தல் அறிக்கையில் சொன்னதை நாங்கள் விட்டுவிடவில்லை என்பதை எடுத்துக்காட்டத்தான் இவற்றையெல்லாம் இங்கே குறிப்பிட்டுக் காட்டினேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சமுதாய காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஹைபிரிட் யூகலிப்டஸ் மரங்களை உற்பத்தி செய்ய ஒரு டன்னுக்கு உற்பத்தி செலவு ரூ. 640 ஆகும். ஆனால் திரு. விஸ்வநாதன் என்ற முதலாளிக்கு ஒரு டன் 80 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அவர் முதல்வர் இதயத்தில் இடம் பெற்றவர்.

என்ற நற்சாட்சிப் பத்திரத்தையும் கொடுத்து இருக்கிறார்கள். (குறுக்கீடு) நான் அந்த மேடையில் அப்படி சொன்னதற்குக் காரணம், தமிழ் நாட்டிற்கு ஏறத்தாழ 200 கோடி அளவில் புதிதாக காகித ஆலை கொண்டு வருவதற்கு முயற்சித்து, நடத்திக்கொண்டு இருக்கிற அந்த மனிதர். ஆகவே அதைப் பற்றி பேசும்போது இத்தகைய பெரும் திட்டத்தை நடத்திக் கொண்டு இருக்கின்றவர்கள் என் இதயத்தில் இடம் பெறுகிறார்கள் என்று சொன்னேன். ஆகவே, இதையும் சொல்லி, அதையும் சொல்லி இருந்தால், பொருத்தமாக இருந்து இருக்கும். நான் பதில் சொல்லி இருக்கமாட்டேன்.

(முற்பகல் 10–40.)

திருவாளர் சேஷசாயி காகித ஆலை நிறுவனத்திற்கு இது வரை அரசுக்குச் சொந்தமான காடுகளிலிருந்து யூக்கலிப்டஸ் மரங்கள வழங்கப்படுவது அரசு கொள்கையளவில் எடுத்த முடிவின்படி செயலாக்கப்பட்டு வருகிறது. இம்முடிவினை அரசு எடுத்ததற்கான காரணங்கள் பின்வருமாறு :

இக்காகித ஆலை நிறுவனத்தில் தமிழக அரசுக்கு 28 சதவீதம் பங்கு உண்டு. இன்னும் ஒரு கால் பங்குக்கு மேல் மைய அரசின் சார்பு கொண்ட நிதி அமைப்புகளுக்கும் வங்கிகளுக்கும் (எல்.ஐ.சி., ஐ.டி.பி.ஐ., இன்டஸ்டிரியல் கிரடிட் அன்ட் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா, ஹவுசிங் டெவலப்மென்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்) பங்கு உண்டு. பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தனிப்பட்ட பங்குதாரர்களுக்கு மொத்தமாக இந்த நிறுவனத்திலுள்ள பங்கு 50 சதவீதத்திற்கும் குறைவான தொகையாக இருக்கிறது. ஆகவே இதை ஒரு தனியார் நிறுவனமாகக் கருதமுடியாது. அதனால் தனிப்பட்ட விஸ்வநாதனுக்கு மரங்கள் விற்பதாக எவ்வாறு உறுப்பினர்கள் கூறுகிறார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவேளை இதையெல்லாம் பார்த்தால் இது ஒரு கூட்டுறவு அமைப்பு என்கின்ற வகையில் நாம் அவர்களுக்குக் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் அந்த இலாபம் அரசுக்கும் அந்த பங்குதாரர்களுக்கும் இருக்கிறது என்பதை கவனத்தில் வைத்து, செய்யப்படுகிறதே தவிர இதில் எந்த சுயநல நோக்கமோ அல்லது நண்பர்களுக்கு சில சலுகைகள் காண்பிக்கப்படுகிறது என்ற நோக்கமோ இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.



காகித நெருக்கடி கடுமையாக இருந்த நேரத்தில் இந்நிறுவனம் மிகுந்த பொறுப்போடு இருந்து நடந்து, மத்திய மாநில அரசுகளுக்கு தாள் தருவதாக வாக்களித்து, வாக்களித்த அளவு காகிதத்தை குறிப்பிட்ட விலையில் கொடுத்தார்கள். நாம் என்ன விலை குறிப்பிட்டோமோ அந்த விலைக்குக் கொடுத்தார்கள். மேலும் ஒவ்வொரு ஆண்டும் எழுதுபொருள் அச்சுத் துறை, தமிழக அரசு பாட நூல் நிறுவனம் மற்றும் தமிழக அரசு அச்சுத் துறைக்கு குறிப்பிட்ட சலுகை விலையில் கேட்கும்போது அச்சுத்தாள் வழங்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது.

இந்நிறுவனம் 1980–81 ஆம் ஆண்டில் 1,73,00,000 ரூபாய் நேரடியாக மாநிலத்திற்கு விற்பனை வரியாகவும், 1982–83 ஆம் ஆண்டில் 7,90,44,556 ரூபாய் எக்சைஸ் கட்டணகமாவும் செலுத்தியுள்ளது. மேலும் இந்நிறுவனத்திற்கு யூக்கலிப்டஸ், ஹைபிரிட் டன் ஒன்றுக்கு 100 ரூபாய் என்ற விலையில் வழங்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக இந்நிறுவனம் அரசுக்குக் கட்டிய வருவாய் ரூ. 28 இலட்சம் ஆகும்.

மேலும் தென் மாநிலங்களில் காகிதம் உற்பத்தி செய்யும் பல ஆலைகளுடன் இந்நிறுவனம் போட்டியிட வேண்டியிருப்பதால் இதன் மீது அதிக சுமையை விதித்து செயல்திறனை முடக்கிவிடுவது இந்த மாநிலத்தின் தொழிலாளர் நலனுக்கும் தொழில்துறை பொருளாதார நலனுக்கும் உற்பத்திக்கும் உகந்ததல்ல, என்பதைக் கவனத்தில் கொண்டே இந்நிறுவனத்திற்கு அரசு காடுகளிலிருந்து யூக்கலிப்டஸ், ஹைபிரிட் சலுகை விலையில் வழங்குவது பற்றிய கொள்கை முடிவு எடுக்கப்பட்டது.

மேலும் இந்நிறுவனத்தார் அதிக தொழிலாளர்களுக்கு வாய்ப்பு அளிக்கவும் பல தொழில்களை வளர்ப்பதற்கான சாத்தியக்கூறுகளும் இருப்பதால் இந்நிறுவனத்தை ஊக்குவிப்பது அரசின் கடமையாகும். இவ்வாறு வழங்கப்படும் மரங்களும் ஓர்க்கிங் பிளான்ட் பிரஸ்கிரிப்ஷன் படியான,வெட்டும், விதிகளின் படியும் பழைய முறைகளின்படியும் வேருடன் அகற்றமல் மற்றும் சுழற்சி முறைப்படியும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றனவே அன்றி காடுகளை அழிக்கும் எண்ணத்துடன் அரசு செயல்படவில்லை. அதை அனுமதிக்கவும் அனுமதிக்காது.

சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் ஒரு மக்கள் திட்டமாகும். இத்திட்டம் மரங்களை மக்கள் வளர்த்து பயனடையும் திட்டமாகும். இது தொழிற்சாலைகளுக்கு மரங்களை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம் அல்ல. இத்திட்டம் 1981–82-லிருந்து சுவீடன் நாட்டு நிதி உதவியுடன் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் கிராமப்புறங்களை வளமாக்கும் திட்டம். இதுவரை

சமூக காடு வளர்ப்புத் திட்டம் கிராமப் புறங்களில் அமுல்படுத் தப்பட்டு வந்திருப்பினும் பஞ்சாயத்துக்கள் அல்லது கிராம மக் களின் ஈடுபாடு அதிகமாக இல்லை. இதுவரை ஏறத்தாழ ஒரு தொழிலைச் சார்ந்த திட்டமாகவே இருந்தது. தற்போது அமு லாக்கப்படும் திட்டம் கிராமப்புற மக்களையும் பஞ்சாயத்துக் களையும் முழு அளவில் பங்கேற்க வகை செய்கிறது.

இத்திட்டம் அமுலாக்கப்படும் கிராமங்களில் பஞ்சாயத்து உறுப்பினர்களையும் மற்ற கிராம சமுதாய உறுப்பினர்களையும் கொண்ட கிராம சமூக காட்டியல் குழு ஒன்று அமைக்கப்பட் டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட மரங்களாக கருவேலம், வாகை, வேம்பு, செல்வேலம், புங்கன், கடம்பை முதலிய மரங்கள் நடப்படுகின்றன. நீலகிரி தைல மரங்களும் நடப்படுகின்றன. ஆனால் நீலகிரி தைல மரங்கள் நடப்படுவது திட்ட இலக்கில் சிறிய பகுதியாகும். இம்மரங்கள் திட்ட இலக் கில் 6 சதவீதம்தான். இத்திட்டத்தின்கீழ் நடப்படும் நீலகிரி தைல மரங்களிலிருந்து சேஷசாயி காகித ஆலைக்கு கொடுக்கப்படும் மரங்களின் வீதம் சிறிதளவே ஆகும். மேற்படி ஆலைக்கு வழங்கப்படும் மரங்களில் பெரும் பகுதி வனப்பகுதிகளிலிருந்து திட்டமிட்டு எழுப்பப்பட்டு குறிப்பிட்ட கால அளவின்படி வெட்டப்படும் தோட்டங்களில் இருந்ததாகும். சமூக காடு வளர்ப்புத் திட்டத்தின் முக்கிய குறிக் கோள் மக்கள் தங்கள் தேவைக்குத் தேவைப்படும் மரம், விறகு போன்றவைகளுக்கு தாங்களே அதைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய தகுதி உடையவர்களாக ஆக்கிக்கொள்ள, வருவாயைத் தேடித்தரும் அளவுக்கு மரங்களை வளர்க்க அவர்களை இத் திட்டத்தில் ஈடுபடச் செய்து கொள்வதற்காக, இந்த மரங் களை வளர்த்து வருகிறார்களே தவிர, அவைகளைப் பெரிய ஆலைகளுக்குக் கொடுப்பதற்காக அல்ல. இதை நான் இந்த அளவிற்குக் குறிப்பிட்டால் போதும் என்று நினைக்கிறேன்.

திரு. உமாநாத் அவர்கள் இன்னொரு குற்றச்சாட்டை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒப்பந்த வேலை முடிவு பெறாமலேயே ஒப்பந்தக்காரர் 3.5 இலட்சம் பெற்றுச் சென்றுவிட்டார் என்பது குற்றச்சாட்டு. வேலை எதுவும் முடிவுபெறாமல், பணம் ஒப் பந்தக்காரர்களுக்குத் தரப்பட்டதாக கூறுவது சரியல்ல. திரு. பச்சிமுத்து, திரு. தமிழ்ச் செல்வன், திரு. மகான்ராஜ் ஆகிய மூன்று ஒப்பந்தக்காரர்களும் 1981 ஆம் ஆண்டில் ஒப்பந்தக் காரர்களாக பதிவு செய்துள்ளார்கள். இவர்களுக்கு அந்தப் பணிகள், ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு, விதிகளின்படி குறைந்த ஒப்பந்தப் புள்ளி கொடுத்ததற்கு கொடுக்கப்பட்டுள்ளது. பணி



கள் செய்து முடிக்கப்பட்டபிறகு தான் பணம் பட்டுவாடா செய் யப்பட்டது. 13–9–1983 அன்று பொதுப்பணித் துறை அமைச் சர் அவர்கள் ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவ மனையில் நடக் கும் பராமரிப்பு வேலையைப் பார்வையிட்டு ஆய்வு செய்த போது காணப்பட்ட குறைகளுக்கு ஆர். சிதம்பரம், உதவி செயற் பொறி யாளர், திரு. ஏ. சங்கரன், இளநிலை பொறியாளர் ஆகியோர் கள் தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கப்பட்டனர். தலைமை பொறியாளர் (கட்டிடம்) இதுவரையில் நடந்து முடிந்த பரா மரிப்புப் பணிகளை ஆய்வு செய்து அறிக்கை கொடுக்கும்படி கேட் கப்பட்டுள்ளார். அறிக்கை இன்னும் அரசிற்கு வரவில்லை. தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட இரண்டு பொறியாளர் களும் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டு தொலைதூர இடங் களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

தஞ்சை மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணியில், சில வேலைகள் செய்யப்படாமலேயே பணம் பெறப்பட்டன. செயற் பொறியாளர்களுக்கு ஆதரவாக ஆளும் கட்சிக்காரர்களாக இருந்தார்கள் என்று சொன்னார்கள். எனக்கு நேரடியாக அதில் பங்குபெற வாய்ப்பில்லை என்றாலும், என்னுடைய நெருங்கிய நண்பர் மாண்புமிகு உமாநாத் அவர்கள் சொல்வதில் ஓரளவாவது உண்மை இருக்கும் என்று எண்ணி நான் விசாரித்த போது எனக்குத் தந்த பதிலை இங்கே தெரிவிக்க இருக்கிறேன்.

27–7–1983 அன்று மாவட்ட அளவில் நடந்த வறட்சி நிவாரணக் கூட்டத்தில் எலனப்ப ஏரி கால்வாய்ப் பணி செய்யா மலேயே பணம் பெறப்பட்டுவிட்டது என்று குற்றம் சாட்டினார். கூட்டத்தில் விளக்கம் கோரப்பட்டது. 'இரண்டு பகுதி பணிகள் நடந்துள்ளது. ஒரு பகுதி நடந்து வருகிறது. இத்தகவல் மாவட்ட ஆட்சித் தலைவரால் உமாநாத் அவர்களுக்குக் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தகவல் வந்து இருக்கிறது. கடிதத்தின் நகலை இங்கே வைத்திருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியிருக்கிறார். உமாநாத் அவர்களுக்கு எழுதியதாக குறிப்பிடுகின்ற அந்த சிறு கடிதத்தை மட்டும் படிக்கிறேன்.

"27–7–83-ந் தேதி அன்று நடைபெற்ற வறட்சி நிவாரண கமிட்டி கூட்டத்தில் நாகப்பட்டினம் பகுதியில், எலனப்ப ஏரியில் மண் வாரி எடுக்கும் பணி செய்து முடிவடையவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. தற்போது வேலை முடிந்து விட்டது என்று தஞ்சாவூர் பொதுப்பணித் துறை செயற் பொறியாளர் தெரிவித்து உள்ளார்.

தங்கள் நம்பிக்கையுள்ள,
இரா. சத்பதி,
மாவட்ட ஆட்சித் தலைவர்
25–8–83".

குறுக்கிடு எனக்கு ஒரு மகிழ்ச்சி. திரு உமாநாத் அவர்கள் ஏதாவது குற்றச்சாட்டை சொல்லி, உண்மையான தகவல் அளித்தால் அதை ஏற்றுக்கொள்ள அவர் தயங்குவதே இல்லை. அந்த வகையில் அவரை நான் பாராட்டுகிறேன். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று சொல்லாமல் நியாயத்தை நியாயம் என்று சொல்லி, கடிதம் வந்திருக்கிறது என்று சொன்னவுடன் அது பொய்க் கடிதம் இல்லை என்பதை அவர் ஏற்றுக் கொண்டதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : எனக்கு கடிதம் கிடைக்கவில்லை எனக்கு எழுதியதாகச் சொல்லப்படுகிற கடிதத்தின் காப்பி உங்களுக்கு வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அதனை ஐ அக்செப்ட். ஆனால் கண்டண்ட்ஸை பற்றி எனக்குத் தெரியாது.

(முற்பகல் 10-50).

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : Thark You. மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் பெரியார் அணையின் நீர் அளவை 136 அடியாகக் குறைத்ததன் காரணமாக 80 ஆயிரம் ஏக்கர் சாகுபடியை இழந்தது என்று சொன்னார்கள். 152 அடி உயரம் அளவுக்கு இருக்கும் பெரியார் அணை 1885 முதல் 1895 வரையில் உள்ள காலத்தில் அன்றைய தொழில் நுட்ப முறைக்கு ஏற்ப கட்டப்பட்டது. ''அன்றைய தொழில் நுட்ப முறைக்கு ஏற்ப'' அதைக் கவனிக்க வேண்டும். 1976 ஆம் ஆண்டில் அணையின் வடிவமைப்பு குறித்து மறு பரிசீலனை செய்யப்பட்டது. அப்போது தமிழகத்தில் எந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசும் இல்லை என்பதை நாம் நினைவில் வைத்துக் சொள்ளவேண்டும். அப்போது நீர்மட்டம் 145 அடிக்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ள முடிவு எடுக்கப்பட்டது. எனினும் மத்திய நீர் வழங்கு குழுத் துறைத் தலைவர் டாச்டர் கே. சி. தாமஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நீர் மட்டத்தை 136 அடியாகக் குறைக்கவும் அந்த அணையைப் பலப்படுத்த நடவடிக்கையை மேற்கொள்ளவும் முடிவு எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அணையின் நீர் மட்டத்தை தற்காலிக நடவடிக்கையாக மட்டுமே 136 அடிக்கு குறைப்பதற்கு தமிழகம் ஒப்புக் கொண்டிருக்கிறதே தவிர, வேறு வகையில் விட்டுக் கொடுப்பதற்கு அல்ல. பலப்படுத்தும் பணிகள் முடிவுற்றதும், 152 அடிக்கு நீர் மட்டம் உயர்த்தப்படும். பலப்படுத்தும் பணி முடிவுற்ற பின்னரும். அந்த நீர் மட்டத்தை 136 அடிக்கு மேல் உயர்த்தக் கூடாது என்ற கேரள அரசின் ஆலோசனையை இந்த அரசு ஒத்துக்கொள்ள இயலாது என்று தெரிவிக்கப்பட்டது



பெரியார் அணையின் நீர் மட்டமானது 152 அடியிலிருந்து 136 அடிக்குக் குறைக்கப்பட்டிருந்தாலும் பெரியார் நீர்த் தேக்கத்தில் இருந்து 136 அடிக்கு மேல் இருக்கிற நீர் முழுவதும் வீணாகச் செல்லாமல் வைகை நீர்த் தேக்கத்தில் தேக்கி வைக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியா சிமென்ட்ஸ் விவகாரத்தைப் பற்றி நெடுமாறன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதை அவர்சள் கொஞ்சம் வேகமாகவே சொன்னார்கள். அந்த உணர்வு எல்லோருக்கும் தேவை தான். எங்களுக்குக் கடிதம் எழுதியதற்கு நாங்கள் பதில் கூட எழுதவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். இங்கே தான் அவர்களுக்குத் தவறான தகவல் கிடைத்திருக்கிறது. 1981 ஆம் ஆண்டில் இந்திய ஆயுள் காப்பீட்டுக் சழகம் மற்றும் யூனிட் டிரஸ்ட் நிறுவனம் ஆகியவை இந்தியா சிமென்ட்ஸ் நிறுவனம் வைத்துள்ள பங்குகளை வாங்க அரசு ஆராய்ந்தது. 17—2—1981-ல் மத்திய நிதி அமைச்சருக்கு இது சம்பந்தமாக கடிதம் எழுதி, பங்குகளை அரசுக்கு அளிக்குமாறு கோரப்பட்டது. ஒரு பங்கின் விலை 15.40 ரூபாய் என்று கூறப்பட்டது. வெளிச் சந்தை விலையைவிட 3.90 ரூபாய் அதிகமாக இருந்ததால் பங்குகள் வாங்க மேல் நடவடிக்கைகள் எடுக்கவில்லை. இதற்கிடையில் ஐ.டி.பி.ஐ.யை பங்குகள் வாங்க அரசு முயற்சித்து மத்திய நிதி அமைச்சரிடம் இது சம்பந்தமாக 1—9—1983-ல் தொடர்பு கொண்டது. 13—10—1983-ல் ஐ.டி.பி.ஐ.யின் தலைவர் திரு. பூஞ்சா, இந்தியா சிமென்ட்ஸ் பங்குகளை விற்பதான யோசனை இல்லை என்று தெரிவித்துள்ளார். பங்குகளை விற்பதாக இருந்தால் தமிழக அரசுக்குத் தெரிவிக்குமாறு ஐ.டி.பி.ஐ.த் தலைவருக்குகடிதம் எழுதப்பட்டது. ஆகவே நாங்சள் எதையும் விட்டுச் கொடுக்கவில்லை என்றும், அதை தமிழக அரசே வாங்க வேண்டும் எங்களுக்குக் கொடுங்கள் என்று டெலக்ஸ் மூலம் தகவல் கொடுத்தோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கர்நாடகத்தில் வாழ்கின்ற தமிழக மக்கள் இரண்டாவது
மொழியாக தமிழை வைக்க வேண்டுமென்று கேட்டார்சள். இதன்
காரணமாக கோலார் பகுதியிலே தமிழ் மக்கள் 10 பேர்களுக்கு
மேலே சுட்டுக் கொல்லப்பட்டார்கள். எண்ணிக்கையை எல்
லாம் அதிகமாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த உணர்வு
வேண்டியது தான். ஆனால் நான் கொஞ்சம் பணிவோடு
தெரிவித்துக்கொள்ளவிழைகிறேன். அங்கே அந்த மாநிலத்தில்
உள்ள மக்களில் எத்தனை சதவீதம் தமிழக மக்கள் இருக்கிறார்
கள் என்ற புள்ளி விவரம் என்னிடம் இல்லை. அவர்களிடம்
இருந்தால் கொடுத்து உதவலாம். எனவே எந்தப் பிரச்சினை
மீது இரண்டாவது மொழியாக தமிழைக் கேட்கிறார்கள் என்
பதற்கு நமக்கு விளக்கம் இல்லை. நான் நேற்றே இந்தக்
கருத்தைச் சொல்லி இருக்கிறேன். அங்கே உள்ளவர்கள்

போராட்டம் நடத்தும் போது இந்த அரசு எச்சரிக்கையோடு, அந்த உயிர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று, அவர்களுடைய போராட்டங்களைத் தடுக்க வேண்டுமென்று நாம் கேட்டுக் கொள்வோமே தவிர இங்கேயிருந்து நாம் உத்தரவிட்டு, அதைச் செய்யுங்கள், அவர்களது எண்ணத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கூறும்படியான நிலைமையை நாம் உருவாக்கினால் மற்ற மாநிலங்கள் இதே பிரச்சினையை நம் மீது சுமத்துவதற்கு முன் வருவார்கள் என்ற அச்சத்தை நான் கொண்டிருக்கிறேன். எந்தக் காரணத்தை முன்னிட்டும் வேறு மாநிலங்கள் எங்கள் மொழியை இரண்டாவது மொழியாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்று நமக்குக் கட்டளையிடவோ சொல்லவோ, எதற்கும் இடம் கொடுக்கக் கூடாது என்று நான் கருதுகிறேன். ஆகவே நாம் இந்த விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும். ஆகவே நாங்கள் தலையிடவில்லை, அதற்காக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்லக் கூடாது. குண்டுராவுக்கு நாங்கள் தந்தி அடித்தோம். கடிதம் அனுப்பினோம். ஆட்களை இங்கேயிருந்து அனுப்பினோம். அங்கேயிருந்து எங்கள் கட்சிக்காரர்கள் நேராகப் போய், நடையாக நடந்து, கால்நடையாகச் சென்று பார்த்தார்கள். அவர் அங்கே சம்பவம் நடந்த இடத்திற்குப் போனார். அவர்களுக்கு ஆறுதல் கூறினார். நடவடிக்கை எடுக்கிறேன் என்றார். எங்களுடைய கட்சி அந்தத் துப்பாக்கிச் சூட்டிலே இறந்தவர்களுக்கு நிதியும் அளித்தது என்பதை இங்கே நான் சொல்கிற வகையில், நீங்கள் புரிந்துக் கொள்ளலாம். வேறு யாரும் அந்தப் பிணத்தைக் கூடப் போய் பார்க்கவில்லை, அங்கே இருக்கிற எந்தக் கட்சியும் போனதாக எந்தப் பத்திரிகையிலும் தகவல் வரவில்லை. அங்கே இருப்பவர்களும் சொல்லவில்லை. அங்கே போய் அதிலே பங்கு எடுத்துக் கொண்டு உழைத்தவர்கள், கேள்வி கேட்டவர்கள் எல்லாம் பெரும்பாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தாம் என்பதை நான் இங்கே மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, எந்த வகையிலும் நாம், எங்கே தமிழர்கள் இருந்தாலும், நம்மால் சட்டப்படி, நமக்கிருக்கிற உரிமைப்படி எப்படி தலையிடுவோமோ அந்த வகையில் தலையிடுவோம் என்பதையும் அதற்காக, முயற்சிப்போம் என்பதையும் நான் இங்கே தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். யாரும் அந்த நிலைமையை, எங்களுடைய எண்ணத்தைத் தவறாகக் கருதிவிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.



நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் அணுமின் நிலையம் நிறுவப்படும் என்று 1983-ஆம் ஆண்டு, ஆண்டு முதலில் கூறப்பட்டது, அது என்னவாயிற்று என்று கேட்டிருந்தார்கள் மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள். மத்திய அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு, இரண்டாவது அணுமின் நிலையத்தை, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கூடங்குளத்தில் நிறுவ இடம் தேர்வு செய்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களை மறு பரிசீலனை செய்ய, ஏற்படுத்தப்பட்ட வல்லுநர் குழுவின் பரிந்துரையைப் பெற்று பரிசீலனைக்குப் பின் முடிவு செய்யப்படும் என்று பிரதமர் அவர்கள் கடிதம் எழுதினார்கள். வல்லுநர்களின் குழுவோடு தமிழக மின் வாரியம் இணைந்து செயல்பட்டு வருகிறது. இறுதியான அறிக்கை தயாரிக்கப்படவில்லை. கூடங்குளத்தில் அணுமின் நிலையம் அமைக்க குழுவிற்கு ஒதுக்கீடு செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. அணுமின் நிலையத்திற்கு தேவையான தண்ணீரை பெருஞ்சாணி அணைக்கட்டிலிருந்து குழாய் மூலம் பம்ப் செய்து வழங்க, பாசனத் தலைமைப் பொறியாளரின் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உளளது. பரிசீலனை முடிந்தபின் பிரதமருக்கு கடிதம் எழுத முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, நாங்கள் அதில் அக்கறை காட்டவில்லை ; பிரதம அமைச்சருக்கு எந்தக் கடிதமும் எழுதவில்லை ; நாங்கள் அலட்சியமாக இருக்கிறோம் என்ற எண்ணத்தை தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் மாற்றிக் கொள்ளவேண்டும். இலங்கை அகதிகளுக்காக மத்திய அரசு ரூபாய் 26 கோடியை தமிழக அரசுக்கு கொடுத்தும், அதில் ரூபாய் 25 லட்சம் கூட செலவழிக்கவில்லை என்று திரு. எம். பி. சுப்பிரமணியம் கூறியுள்ளார். அதேமாதிரி அகதிகள் முகாமில் அங்கே படாத பாடு படுகிறார்கள் என்று அவர் சொல்லியிருக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். அதற்கு நான் விளக்கம் கூற வேண்டியவனாக இருக்கிறேன். மேலவை இருந்திருந்தால், அந்த நேரத்தில் அப்பொழுதே பதில் சொல்லியிருப்பேன். ஆனால், அவர் பேசுவார் என்று தெரியாது.

கடந்த 3 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு ஒதுக்கீடு செய்த தொகையை விட மாநில அரசு அதிகமாகவே, தாயகம் திரும்புவோருக்கு மறுவாழ்வுக்காக செலவழித்திருக்கிறது. எந்த ஆண்டிலும் ஒதுக்கீடு தொகையை முழுமையாக செலவு செய்யாத நிலைமை இல்லை. மாண்புமிகு திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நம்முடைய ஒதுக்கீடு 25 கோடி அல்ல. 1980–81-ல் ஒதுக்கீடு 3.95 கோடிதான். இன்னொன்று அதில் இந்த அரசு செலவழித்தது 4.62 கோடி, 1982-ல் ஒதுக்கீடு 4.91 கோடி ; செலவழித்தது 5.15 கோடி ; 1982–83-ல் ஒதுக்கீடு 5.51 கோடி, செலவழித்தது 5.63 கோடி,

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 16

1983–84-ல் ஒதுக்கீடு 7.19 கோடி, இதுவரையில் செலவழித்தது இந்த ஆண்டில் குறைவாக இருப்பதற்குக் காரணம் கடந்த 2 மாதங்களாக, தாயகம் திரும்பும் தமிழர்களை ஏற்றிக் கொண்டு கப்பல்கள் எதுவும் வராததால் வரும், டிசம்பர் திங்களிலிருந்து மீண்டும் கப்பல் போக்குவரத்து தொடங்கியதும், தாயகம் திரும்புவோர் எண்ணிக்கை அதிகரிக்கும். இதற்கிடையில் தாயகம் திரும்புவோர் மறுவாழ்விற்காக 5.72 கோடியில் முழுமையாக திட்டம் தயாரிக்கப் பெற்று, மைய அரசின் அனுமதியும் பெறப்படும்.

இதிலே நமக்கெல்லாம் – அரசுக்குக் கூட சில சமயத்தில் தவறான புள்ளி விவரம் வந்து விடக்கூடும். நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் எனது மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு தரப்படுகிற தகவல்கள் அவ்வளவு சரியான தகவல்கள் என்று நினைத்துவிடக் கூடாது. நாங்களும் அதேபோல் தவறான தகவல்களைத்தான் கொடுக்கிறர்கள் என்றும் அலட்சியப்படுத்திவிடக் கூடாது என்ற நினைப்பில் நாம் பணியாற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

(முற்பகல் 11–00)

மாண்புமிகு நண்பர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னார்கள். சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி திரு. கே. எம். நடராஜன் அவர்களுக்கு வாடகைக்கு வீடு ஏற்பாடு செய்வதில் நிர்வாகம் சரியாக நடைபெறவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். திரு. கே. எம். நடராஜன் அவர்கள் சென்னை உயர் மன்ற நீதிபதியாக 24–7–1983 இல் பதவியேற்றார்கள். அவர்கள் வசிப்பதற்கென்று தகுந்த வீடு ஒன்றை ஏற்பாடு செய்து தருமாறு உயர்நீதிமன்றப் பதிவாளர் அரசைக் கேட்டுக்கொண்டார். உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு ரூபாய் 2000-க்கு மிகாமல் உள்ள வீடுகளை மாத வாடைகைக்கு எடுத்துக் கொடுக்க வேண்டுமென்று அரசு கொள்கையாகக் கொண்டுள்ளது. இருப்பினும் தனிச் சலுகையாக அவர்களுக்கு சேத்துப்பட்டு நவ்ரோஜி சாலையிலுள்ள வீட்டு எண் ஐந்தின் கீழ் ஒன்றை 4 ஆயிரம் ரூபாய்க்கு வாடகைக்கு எடுத்தது. இத்தொகையில் ரூபாய் 2500 மாத வாடகையாகவும் 1,500 வீட்டு வசதிக்காகவும் பிரித்துத் தர வேண்டுமென்று வீட்டுச் சொந்தக்காரர் கேட்டிருக்கிறார், காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக இதையும் தனிச் சலுகையாக அரசு ஏற்றுக் கொண்டது. ஆனால் வீட்டுச் சொந்தக்காரரின் எல்லா நிபந்தனைகளையும் ஏற்று அரசு ஆணை பிறப்பிப்பதற்கு முன்பே, வீட்டை அதன் சொந்தக்காரர் வேறு ஒருவருக்கு வாட



1983 நவம்பர் 16] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

கைக்குக் கொடுத்துவிட்டார். அரசுக்குக் கொடுத்தால் திரும்ப வருமோ, வராதோ; தருவார்களோ, என்னவோ என்ற அச்சம் இருக்குமா என்பது தெரியாது. அந்தநிலை இந்த அரசுக்கு இல்லையென்றாலும் அதைக் கொடுக்கவில்லை, அரசின் நோக்கம் நீதிபதி திரு. கே. எம். நடராஜன் அவர்களுக்கு விரைவாக வீடு வழங்க வேண்டும் என்பதுதான். தனிப்பட்டவரை நிர்பந்தித்து அவர் வீட்டைப் பெற அரசுக்கு அதிகாரம் இல்லை. உறுப்பினர் குற்றச்சாட்டுக் கூறியிருப்பது சரியான தகவல் இல்லை என்பதை நான் விளக்கிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இன்னொரு கருத்தை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். குற்றச்சாட்டுத்தான். சென்னை துறைமுகம் கட்டப்பட்டதிலிருந்து வடக்கில் நில அரிப்பும் துறைமுகத்திற்குத் தெற்கில் மணல் சேருவதும் நடைபெற்று வந்தது. 1982-ஆம் ஆண்டு கிலோமீட்டர் 450 முதல் கிலோமீட்டர் 520 வரை கடற்கரை பாதுகாப்பு வேலைகளுக்காக 17.50 லட்சம் மதிப்பீட்டிலே ஒப்புதல் வழங்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது. அந்த எல்லைக்கு அப்பாலும் கடல் அரிப்பு ஏற்படுவதால் மேலும் 600 மீட்டர் நீளத்திற்கு பாதுகாப்புப் பணிகள் அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில் 8–11–1983, 9–11–1983 ஆகிய தேதிகளில் 100 மீட்டர் நீளத்திற்கு கடல் அரிப்பு ஏற்பட்டதால் உடனடியாகப் பாதுகாப்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர்தான் கடல் அரிப்பைத் தடுக்க முறையாகத் திட்டம் தீட்டி செயல்பட்டு வருகிறது என்பதைச் சொல்வதோடு, அரசிடம் உள்ள திட்டத்தையும் எண்ணத்தையும் இங்கே நான் வெளியிட விரும்புகிறேன்.

ஹாங்காங்கிலே அவர்கள் கடல்நீரைப் பின்னுக்குத் தள்ளி நிலமாக்கி அங்கே வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். அதைப் போலவே சிங்கப்பூரிலும் செய்திருக்கிறார்கள். நான் சென்ற போது பார்த்த முறையை திரைப்படத்தின் மூலமாக எப்படி அந்தப் பணியைச் செய்தார்கள் என்பதைப் படத்தைப் போட்டு அவர்கள் காண்பித்தார்கள். அந்த முறையைப் பின்பற்றி நாமும் இங்கே செய்ய வேண்டுமென்ற அவாவில் திட்டங்கள் போடப்படும். மிக விரைவில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களும் பொறியியல் நிபுணர்களும் அங்கே சென்று எந்த முறையில் அவைகளை நிறைவேற்றுகிறார்கள், எப்படிச் செலவாகிறது என்பதையும் இன்னும் நூதன முறைகள் வந்திருக்கின்றனவா என்பதையும் அறிந்து வருவார்கள், வரவேண்டும் என்பது என்னுடைய ஆசை. இதை மன்ற உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். அந்த நிலைமை வந்தாக வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி).

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 16

நான் படகோட்டி படத்தில் நடிப்பதற்காக கேரள கடற்கரைக்குச் சென்றபோது அங்கேயும் இப்படிப்பட்ட குறைபாடு இருந்தது. கடல் கொண்டது, கடல் நீர் அரிப்பு இருக்கிறது என்றெல்லாம் இருந்தது. அப்போது அதைப்பற்றி எனக்குத் தெரியாது. நான் சென்னைக்கு வந்தபிறகு எனக்கு வாய்ப்புக் கிடைத்தபோது —1974 என்று நான் கருதுகிறேன், 1973 ஆகவும் இருக்கலாம், —நான் அமெரிக்காவுக்கு சென்றபோது அவைகளைப் பார்த்தேன். அன்று முதல் இந்த ஆர்வம் என்னிடம் மேலிட்டிருக்கிறது. அதைச் செய்து நம்முடைய இடத்தை இன்னும் நிலப் பகுதியை அதிகமாக்க வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. இப்போது கோவளம் அருகில் சென்று பார்த்தால் எவ்வளவு நிலப் பரப்பு தண்ணீரில் சென்று இருக்கிறது என்பதை 10 வருடங்களுக்கு முன்னால் சென்றிருந்தவர்கள் இப்போது பார்த்தால் தெரிந்துகொள்வார்கள்.

அதுபோலவே மாமல்லபுர பயணிகள் தங்கும் விடுதி இருக்கிறதே அதற்கு அருகில் தான் என்னுடைய நாடோடிமன்னன் படத்ினுடைய கடற்கரை சண்டைக்காட்சியை எடுத்தேன். அப்போது அந்த இடத்திலிருந்து நீர் உள்ள இடத்திற்கு நடந்து போகவேண்டும் என்றால் ஏறத்தாழ 1 பர்லாங்கு 2 பர்லாங்குக்கு மேல் நடந்து போகவேண்டும். இப்போது அருகில் தண்ணீர் வந்து இருக்கிறது. அந்த அளவுக்கு கடல் நீர் அந்த இடத்தை ஆட்கொண்டுவிட்டது. இவைகளை எல்லாம் நிச்சயமாக தடுத்து கடல் நீரை பின்னுக்குத் தள்ளி நம்முடைய நிலப் பகுதியை அதிகமாக்க வேண்டும் என்பது என்னுடைய —இந்த அரசினுடைய — ஆசை என்று சொல்வதோடு, இங்கே திரு. குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார்கள், அதை நானும் அவரும் வென்று அங்கே 2 ஆண்டுகளுக்கு முன்னால் பார்த்தபோது நடந்த நிகழ்ச்சியை சொல்கின்றேன். அங்குள்ளவர்கள் சொன்னார்கள், சங்கு துறைமுகம் கட்டிய பிறகுதான் இந்த ஆபத்துகள் எல்லாம் இருகிறது என்று. அலை அடிக்கும்போது அந்தக் காற்று எப்படி போகின்றதோ அந்த அளவுக்கு கடல் அலைகள் உள்ளே வருகின்றன. எங்கேயாவது தடுத்து விட்டால் அந்தப் பக்கத்திலோ, எதிர்புறத்திலோ அந்தப் பக்கம் போய்விடுகிறது. அப்படியே அடிக்க ஆரம்பித்துவிடுகிறது. இதுபோல் கன்னியாகுமரியிலும் சில தகராறுகள் இருக்கின்றன. ஆகவே இந்த பகுதிகளை எல்லாம் ஒழுங்குப்படுத்த திட்டங்கள் வகுக்கவேண்டும் என்பதையும் அதை ஒழுங்காக சீராக செய்ய வேண்டும் என்ற அந்த ஆசை இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்கள் (குறுக்கீடு) இந்த ஒரு ஒலிபெருக்கித்தான் ஆன் ஆகியிருக்கிறது. அந்த ஒலிபெருக்கி ஆன் ஆகவில்லை அதனால் கேட்கவில்லை. ஒன்றை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டு என் நன்றியை தெரிவித்துக் கொள்ள வேண்டும். ஏதோ நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவு



1983 நவம்பர் 16] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

தருகின்றவர்கள் அதை விட்டுவிட்டு எங்களோடு எங்களுக்கு சாதகமாக அவர்களுடைய வாக்குகளை அளிக்கவேண்டும் என்ற எண்ணத்திற்காக அல்ல என்பதை முதலில் தெரிவித்துக் கொண்டு இந்த ஆட்சியின் மேல் நம்பிக்கை இல்லை என்று சொல்கின்ற தீர்மானத்தின் மீது மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்கள் ஒரு குற்றச்சாட்டை சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏன் நன்றி சொல்லவேண்டும் என்று கூறுகிறேன் என்றால், இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய போது முதலில் ஒரே ஒரு கட்சி தான் எங்களை ஆதரித்தது, அது சி.பி.ஐ. அதன் தலைவரும், கே. டி. ராஜூ போன்றவர்களும்தான் எங்களை ஆதரித்தார்கள். ஆகவே, அவர்கள் எங்களுக்கு எதிராக இருந்தாலும் நன்றியோடு தான் நாங்கள் இருப்போம் என்பதை மட்டும் சொல்லிக் கொண்டு இந்த பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் பகுதியில் கருப்பண்ண கவுண்டர், காளிமுத்து கவுண்டர் போன்ற சிறு விவசாயிகள் அதிக மின் கட்டணம் பாக்கி என திடீர் என்று நோட்டீஸ் கொடுத்து மின் துண்டிப்பு செய்யப்பட்டது என்று சொன்னார்கள். எனக்கு வந்து இருக்கிற குறிப்பு விவசாயிகள் தங்களுடைய மின் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புகளுக்கு மின் வாரியத்தில் செலுத்தியிருந்த பிணை வைப்புத் தொகை —டெபாசிட் தொகை அவர்கள் உபயோகிக்கும் மின்சார அளவை ஒட்டி அவ்வப்போது மாறுதல் செய்யப்படுகின்றது. அவ்வாறு செய்யப்படும்போது உயர்மின் அழுத்தத்தின் கீழ் மின் இணைப்பு பெறும் பம்பு செட்டுகளுக்கு அவர்கள் $1\frac{1}{2}$ மாதங்கள் பயன்படுத்திய மின்சாரத்தை கணக்கில் கொண்டும், குறைந்த மின் அழுத்தத்தின் கீழ் மின் இணைப்பு பெறும் பம்பு செட்டுகளுக்கு அவர்கள் 3 மாதங்கள் பயன்படுத்திய மின்சாரத்தை கணக்கில் கொண்டும், கூடுதல் பிணை வைப்புத் தொகை டெபாசிட் தொகை வசூலிக்கப்படுகிறது. இக் கூடுதல் பிணை வைப்புத் தொகை விவசாயிகளிடமிருந்து 3 தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. பெரியார் மாவட்டத்தில் இது போன்று விதிக்கப்பட்ட கூடுதல் பிணை வைப்புத் தொகையை செலுத்தாத விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்கு உரிய முறையில் முன் அறிவிப்பு செய்து, பின்னர் தான் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய தகவல் எந்த அடிப்படையில் என்பது எனக்குத் தெரியாது. அதை அவர்கள் தெளிவாக கூறினால் (குறுக்கீடு) மன்னிக்கவும், இப்படி குறுக்கிட்டுக் கொண்டே இருந்தால் இன்று ரொம்ப நேரத்திற்குப் போகும். (குறுக்கீடு).

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக இதற்கு முன்பு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வந்திருக்கிறது. எதிர்கட்சித் தலைவ்ராக இருந்தாலும் சரி, மற்றவர்களாக இருந்தாலும் சரி, தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் பேசுவார்கள், முதலமைச்சராக இருக்கின்றவர்கள் பதில் சொல்வார்கள். அதற்குப் பிறகு தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், சொன்னால், அதற்குப் பிறகு முதலமைச்சர் பதில் சொல்வார். இதுதான் நடைமுறை, இதுவரை நடந்திருக்கிறது, நானும் பேசியிருக்கிறேன், மற்றவர்கள் பேசுவதில்லை. அப்படி ஒரு மரபு இருக்கிறது. (குறுக்கீடு) சந்தேகம் கேட்பதற்கு அல்ல, நம்பிக்கையோடு கொண்டு வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடு)

[முற்பகல் 11 —10]

மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே, அப்படி அல்ல. மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்கள் 3-10-83ல் பார்வை அற்றோர் உண்ணாவிரதம் இருந்தனர்; 5-10-1983 அன்று அவர்களை இராயப்பேட்டை மருத்துவ மனையில் சேர்த்தனர்; கண்டித்து மருத்துவ மனையில் ஆர்பாட்டம் செய்த பார்வை அற்றவர்களைக் காவலர்கள் அடித்து கைது செய்து பின்னர் மாலையில் விட்டு விட்டார்கள் என்று அறிக்கை விடுத்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நானே சாட்சியாக இருக்கின்ற காரணத்தால் நடந்ததைச் சொல்ல நான் க்டமைப்பட்டிருக்கிறேன். எனக்கு அந்தத் தகவல் வந்தது. நாடாளுமன்ற துணைத் தலைவர் மாண்புமிகு இலட்சுமணன் அவர்கள் எனக்குத் தகவல் தந்து இப்படி இருக்கின்றார்கள், நீங்கள் வந்து உத்தரவாதம் கொடுத்தால் அவர்கள் உண்ணாநோன்பைக் கைவிடுவார்கள் என்று சொன்னார்கள். நான் உடனே, இங்கிருந்து சென்றேன். அவர்களைப் பார்த்து, அவர்கள் கோரிக்கையை எந்த அளவு நிறைவேற்ற முடியுமோ அந்த அளவு நிறைவேற்றுவேன் என்று உறுதி கொடுத்தேன். அதை நடைமுறைப்படுத்தவும் முயல்கிறேன், நடைமுறைப்படுத்துகிறேன். அவர்கள் அன்று பழரசம் குடித்து, குருடர்களாக இருந்தாலும் கண்திறந்த உள்ளத்தோடு மனமாரப் பாராட்டி இந்த நடவடிக்கைக்கு ஆதரவு தந்தார்கள். நான் குறிப்பிட்டதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதற்குப் பிறகு அங்கே உண்ணாவிரதம் இருந்தார்கள்; அவர்களை அடித்தார்கள் என்று சொல்வது நியாயம் அல்ல. அவர்களைக் கைது செய்வது என்கிற பழக்கத்தில், முறையில் செய்து, பிடித்து மாலையில் விட்டு விட்டார்களே தவிர, அவர்கள் யார் மீதும் எந்த அடியும் விழவில்லை; கையால் கூட அவர்களைப் பிடித்துத் தள்ளி இழுத்துக் கொண்டு போகவில்லையென்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1983 நவம்பர் 16] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

மாண்புமிகு பெரியவர் சங்கரய்யா அவர்கள் உடுமலைப்பேட்டையில் பொதுக் கழிப்பிடங்கள் கட்டுவதற்காகக் கொண்டு வந்த சிமென்டை சில பொறியாளர்கள் அப்படியே வெளியே விற்றுவிட்டனர் என்று சொல்லி இருக்கிறார். அதற்குத் தகுந்த ஆதாரம் இருந்தால் அவர்கள் என்னிடம் கொடுக்கவேண்டும். என்னை நேரிலே கண்டு கொடுக்கலாம். நான் அது குறித்து நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லி எனக்குக் கிடைத்த பதிலை சொல்ல விரும்புகிறேன்.

13-10-1982-ல் தமிழக அரசு மைய அரசின் உதவியுடன் உடுமலைப்பேட்டை நகராட்சியில் நகரசுத்தி தொழிலாளர்கள் இன்றி பராமரிக்கப்படும் திட்டத்தினை ரூ. 54,74,070 மதிப்பீட்டில் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கி முதல் கட்டமாக ரூ. 10,88,436 வழங்கியுள்ளது. கழிப்பிடங்களை மாற்றச் செலவாகும் தொகையில் 50 சதவீதம் மத்திய அரசு மானியமாகவும் 50 சதவீதம் மத்திய அரசு கடனாகவும் வழங்கப்படும். 50 ஆர்.சி.ஏ.பி. கழிப்பிடங்களை நகராட்சி நிதியிலிருந்து கட்ட உடுமலைப்பேட்டை நகராட்சி ஆணையாளருக்குக் கட்டளையிடப்பட்டது. அதற்கிணங்க 41 ஆயிரத்து 300 செலவில், 50 கழிப்பிடங்கள் நகராட்சிக்கு கட்டப்பட்டன. ஆர்.சி.ஏ.பி. கழிப்பிடங்கள் ஆக மாற்றப்பட எடுத்துக்கொண்ட முதல் கழிப்பிடங்களின் எண்ணிக்கை 2,403. நகராட்சியில் ஆர்.சி.ஏ.பி. கழிப்பிடங்களாக மாற்றப்பட்ட எண்ணிக்கை 50. 31-10-1983 வரையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆர்.சி.ஏ.பி. கழிப்பிடங்களாக மாற்றப்பட்ட கழிப்பிடங்களின் எண்ணிக்கை 2203. தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆர்.சி.ஏ.பி. கழிப்பிடங்களாக மாற்றப்பட வேண்டிய கழிப்பிடங்களின் எண்ணிக்கை 150; 50 கழிப்பிடங்களை நகராட்சி கட்டிமுடிக்க செலவான தொகை ரூபாய் 41 ஆயிரத்து 300. 2,203 கழிப்பிடங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கட்டி முடிக்க செலவான தொகை ரூபாய் 18 லட்சத்து 21 ஆயிரத்து 600. மொத்தம் 18 லட்சத்து 62 ஆயிரத்து 900. நகராட்சியால் கட்டப்பட்ட 50 கழிப்பிடங்களுக்கு மொத்தம் 150 மூட்டை சிமென்ட் செலவழிக்கப்பட்டது. மேற்கண்ட மூட்டைகள் நகராட்சி அலுவலகத்தின் கையிருப்பிலிருந்து வழங்கப்பட்டன. தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கட்ட வேண்டிய 2,353 கழிப்பிடங்களுக்கு 7,794 சிமென்ட் மூட்டைகள் அரசு நிர்ணயித்த விலையில் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வாங்கப்பட்டு, அதிலே 6,794 சிமென்ட் மூட்டைகள் இதுவரையில் உபயோகப் படுத்தப்பட்டுள்ளன. நகராட்சியால் விநியோகிக்கப்பட்ட சிமென்ட் மூட்டைகளிலோ, குடிநீர் வடிகால் வாரியத்தால் வாங்கி உபயோகப்படுத்தப்பட்ட சிமென்ட் மூட்டைகளிலோ எந்தவிதமான முறைகேடும் நடைபெறவில்லை என்று எனக்கு செய்தி வந்திருக்கிறது. அதற்கு மேலாக அவர்களிடம் ஆதாரம் இருக்குமானால் என்னை

நேரில் சந்தித்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மன்றத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் காப்பாற்றப் படவில்லை ; ஆறு மாதங்களில் ஊராட்சித் தேர்தல்கள் வருமென்றும், ஜுலையில் நகராட்சித் தேர்தல்கள் தடை வந்தாலும் கூட பழைய முறைப்படியே நடத்துவோம் என்றும் சொல்லப் பட்டன. அவை காப்பாற்றப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஊராட்சி மன்றங்களுக்கு கடைசியாக தேர்தல் 1970 ஆம் ஆண்டு ஜுன் மாதம் நடைபெற்றது. அவற்றின் பதவிக்காலம் 1—8—1975-ல் முடிவடைந்தது. ஊராட்சி ஒன்றியங்கள் 1976 ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டன. ஊராட்சி மன்றங்கள் சரிவர இயங்காததாலும், பலமுறைகேடுகள் நடந்தமையாலும் ஊராட்சி மன்றங்கள் 1979-ல் கலைக்கப்பட்டன. அவைகள் தனி அதிகாரிகளின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன. அதற்கு பிறகு ஊராட்சி மன்றங்களுக்கான தேர்தல் முறையில் சில மாற்றங்களை செய்ய இந்த அரசு முடிவெடுத்து கீழ்க்கண்ட ஆணையை பிறப்பித்தது.

ஊராட்சி ஒன்றியங்களுக்கும், நகராட்சிகளுக்கும் தலைவர் பதவிக்கு நேரடி தேர்தல் வைத்தல் ; உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வாக்காளர்களின் குறைந்தபட்ச வயது வரம்பை 21-லிருந்து 18 ஆகக் குறைத்தல் ; ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் 18 சதவீத இடத்தை தாழ்த்தப்பட்டவர்களுக்கும், 15 சதவீத இடத்தை பெண்களுக்கும் ஒதுக்கி இந்த நடைமுறையை மேற்கொண்டதால் ஊராட்சி ஒன்றியங்களுக்கும், நகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்த இடமில்லாமல் நீதிமன்றத்திற்கு வழக்கு போயிற்று. மேற்கண்ட ஆணையை வழங்க வாக்காளர் பட்டியலை இறுதி செய்த பின் 1982 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தல் நடத்த அரசு வழி செய்தது. அதைத்தான் முதலில் சொல்லிவிட்டேன். பெண்களுக்கும் ஆண்களுக்கும் என்று ஒதுக்குவதை பற்றி தடை. எனவே திட்டமிட்டபடி தேர்தலை நடத்த இயலவில்லை. 14—4—1982 நாளிட்ட உயர்நீதிமன்ற தீர்ப்பிலே இந்த இட ஒதுக்கீடு செய்த முறை நியாயமென்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. அது எப்போது முடியும் என்று தெரியவில்லை. இதற்கு பின்னாலே தான் உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல் வைப்போம் என்று நாங்கள் முடிவெடுத்தோம். பேசினோம் ; தேதியை குறிப்பிடலாம் என்று எண்ணினோம். ஆனால் வறட்சி, தமிழர்கள் இலங்கையில் அவதிப்பட்டதன் விளைவாக நடைபெற்ற நிகழ்ச்சிகள், நாமும், அரசும் சேர்ந்து எடுத்துக்கொண்ட முயற்சிகள், இதன் விளைவாக நாங்கள் இதைப்பற்றி தெரிவிக்க முடியவில்லை என்றாலும், ஒரு முடிவை நான் சொல்லியிருந்தேன் ; எடுத்திருந்தேன் : அதை



வெளியிட்டிருந்தேன். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். வழக்கு மன்றத்திலே தீர்ப்பு அளிக்கப் படாவிட்டாலும் விரைவில் பழைய முறையிலே, அதாவது பெண்களுக்கு 15 சதவீதம் என்பது இல்லையென்றும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதம் இல்லையென்றும், அந்த முறையில் எல்லோரும் எங்கே வேண்டுமானாலும் நின்று தேர்தல் நடக்கட்டும் என்ற வகையில் கொண்டு வருவோம் என்று இந்த அவையில் சொன்னேன். உண்மை. இப்பொழுதும் சொல்கிறேன். பிப்ரவரி மாதக் கடைசிக்குள், உங்கள் அனுமதியோடு தேதி குறித்து உள்ளாட்சி மன்றங்களுக்கும், நகராட்சிகளுக்கும் தேர்தல் நடக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாமன்ற உறுப்பினர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சரோடு பேசி, பிப்ரவரி மாதத்தில் எந்தத் தேதியில் வைத்துக் கொள்ளலாம் என்பதை நீங்கள் சொன்னால் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.

(முற்பகல் 11-20)

திரு. அ. ரகுமான்கான் : தேதியை அறிவியுங்கள், எங்களுக்குச் சம்மதம்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : நான் சொல்வது, எதெல்லாம் நின்று போயிற்றோ அவை முதலில் நடத்தப்படும் என்பதற்காக நான் சொல்கிறேன்.

இதற்கிடையிலே சுப்ரீம் கோர்ட் நம்முடைய எண்ணத்தை நியாயம் என்று ஏற்றுக்கொண்டால் — நம்முடைய எண்ணம் நியாயம் என்று நினைக்கிறேன், இங்கே நீதிபதி சொல்லியிருக்கின்றார்—சுப்ரீம் கோர்ட் அதை நியாயம் என்று ஏற்றுக்கொண்டால் அந்த அடிப்படையிலே இவைகளை நடத்தலாம் என்பது என்னுடைய எண்ணம்.

ஆகவே, நாங்கள் நீட்டிக்கொண்டு போய், யாரையும் ஏமாற்ற வேண்டுமென்ற ஆசை இல்லை. நாங்கள் எங்கெங்கோ பார்க்கிறோம். ஆட்சியிலே இருக்கும்பொழுது பலபேர் தோற்று விடுகிறார்கள் ; ஆட்சியில் இல்லாதவர்கள் பெரும்பாலோர் ஊராட்சி மன்றங்களிலே வருகிறார்கள், நகராட்சிகளிலே வருகிறார்கள், ஆட்சியிலே இருக்கின்றவர்கள் திரும்பவும் வருகிறார்கள். இதைப்பற்றி நாமொன்றும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. மக்கள் கையில்தான் இருக்கிறது. ஆகையால் பயமோ, அதில் நாங்கள் எதையோ எதிர்பார்க்கிறோம் என்றோ சொல்லி விடக் கூடாது.

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 16

இங்கே, தன்னிறைவுத் திட்டத்தில் நாங்கள், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் தன்னிறைவு பெற்று விட்டோம் என்று சொன்னார்கள். இந்தப் பிரச்னை மிகப் பெரிய முக்கியமான பிரச்னை என்பதால் தன்னிறைவு யார் யாருக்கு என்று இப்பொழுது நான் குறிப்பிடவில்லை. எந்தெந்தக் கட்சிகளுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒப்பந்தக்காரர்களின் எண்ணிக்கை 673, செங்கல்பட்டு மாவட்டத்திலே, வேலைகளின் எண்ணிக்கை 1,526. இதில் அகில இந்திய அண்ணா தி.மு.க.விற்கு 300.10 இலட்சத்தில். தி.மு.க. 351, வேலைவாய்ப்புகள் 921, 202.18 இலட்சம். இந்திரா காங்கிரஸ் 291, வேலைகளின் எண்ணிக்கை 678, 146.33 இலட்சம். ஜனதா 63, 72 பணிகள், 22.13 இலட்சம். கம்யூனிஸ்ட் 2, 12 எண்ணிக்கைகள், 2.56 இலட்சம், மற்றவர்கள் 785. மொத்தம் வேலைகளின் எண்ணிக்கை 1,611. மதிப்பு 346.32 இலட்சம். இதில் ஒப்பந்தக்காரர்களின் எண்ணிக்கை 2,535. வேலைகளின் எண்ணிக்கை 4,20. செலவு செய்தது 1,019.62. இலட்சம்

திரு. துரைமுருகன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். இத்தனை கட்சிகளில் இவ்வளவு பேர்களுக்குக் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அதைப்பற்றி நான் விவரம் கேட்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, அவர்கள் இதைப்பற்றித் தனி கேள்வி போட்டு என்னிடத்தில் பதில் பெற்றுக் கொள்ளலாம். அது தான் முறை.

திரு. துரைமுருகன் : எங்கள் பார்ட்டியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்..........(கூச்சல் - குழப்பம்).

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டமாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த வேலையாக இருந்தாலும் சரி, அவற்றிலே தவறுகள் நடைபெறக் கூடாது என்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் அந்த வேலைகள் எல்லாம் இன்னின்னாருக்குத்தான் கொடுக்கப்பட்டன. இந்த இந்த கட்சிக்காரர்களுக்கு கொடுத்தார்கள் என்ற புள்ளிவிவரம் எப்படி உங்களுக்குக் கிடைத்தது. அப்ளிகேஷன் ஃபாரமிலேயே இன்னின்ன கட்சிக்காரர்கள் என்று இருக்கின்றதா? சர்டிஃபிகேட் ஏதாவது கொடுக்கப்படுகின்றதா? (கூச்சல், குழப்பம்).



1983 நவம்பர் 16]

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டம் பற்றியும், தமிழகம் தழுவிய அளவிலே நடந்த வேலைகளைப் பற்றியும் கிட்டதட்ட அனைத்துக் கட்சிக்காரர்களும் சொல்லி இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது சில புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் புள்ளிவிவரங்கள் எல்லாம் அவருக்கு எப்படி வந்தன என்பது தெரியவில்லை, அதை நாங்கள் எப்படி சரிபார்ப்பது?........(கூச்சல், குழப்பம்).

[முற்பகல் 11-30].

Mr. SPEAKER : A member shall not raise a point of order—(*a*) to ask for information; or (*b*) to explain his position; or (*c*) when a question on any motion is being put to the House; or (*d*) which may be hypothetical; or (*e*) to seek clarification and introduce new points under the pre-text of raising a point of order.

This is the rule. (கூச்சல் குழப்பம்) எல்லாப் பாராளுமன்றத்திலும் இந்த மாதிரி செய்து இருக்கிறார்கள். நேற்று ராஜ்ய சபையில் கூட நடந்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஆங்கிலம் நன்றாகத் தெரியும். பத்திரிகைகளில் வந்து இருக்கிறது. (குறுக்கீடு). நான் உங்களுடைய தகவலுக்காகச் சொல்கிறேன். நான் எந்த அளவிற்கு ஜனநாயக வாதியாக நடந்து வந்து இருக்கிறேன் என்பதற்காகச் சொல்கிறேன். ராஜ்ய சபையில் அமைச்சர், சபைத் தலைவரைப் பார்த்துக் கேட்கிறார், ''இவ்வளவு தூரம் நடந்ததே, இது சபைக் குறிப்பிலே இருக்கிறதா?'' என்று. சபைத் தலைவர் சொல்கிறார், ''எதுவுமே சபைக் குறிப்பிலே இல்லை''. ஒரே வார்த்தையில் முடித்து விட்டார். (குறுக்கீடு). இது நேற்று ராஜ்ய சபையில் நடைபெற்ற ப்ரோசீடிங்ஸ். ஆனால் நான் இங்கே எல்லாவற்றையும் அனுமதித்துக் கொண்டு வருகிறேன். நான் அனுமதித்த அளவிற்கு வேறு எந்தச் சபையிலும் அனுமதிக்கவில்லை. பெருமைக்காகச் சொல்லவில்லை. உண்மையைத் தான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்). நான் அனுமதித்தால்தான் பேச முடியும். திரு. என். சங்கரய்யா, நீங்கள் பேசுங்கள்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, இது வரையில் உள்ள பிரச்னையைச் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னொரு விவாதத்திலே சொல்லி இருக்கிறார்கள். இது வரைக்கும் அவர் சொன்ன விவரங்களை

[திரு. என். சங்கரய்யா] [1983 நவம்பர் 16

நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இப்போது சொன்னார்கள். எங்கள் கட்சியில் இருப்பவர்களுக்கு இரண்டு கான்ட்ராக்ட் போட்டார்கள் என்று. அதைப் பற்றிக் கவலையில்லை. முன்னாலேயே கூட சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மற்றவர்கள் எல்லாம் அரசாங்க அதிகாரத்தில் உள்ள புள்ளி விவரங்களைச் சொல்கிறார்கள். இப்போது அவர் இன்னின்ன கட்சிக்காரர்களுக்கு கொடுக்கப்பட்டது என்று அவருக்கு அந்த அதிகாரிகள் கொடுத்த தகவலை வைத்துச் சொல்கிறார்கள். மற்ற கட்சிக்காரர்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. உதாரணமாக அவர்கள் சொன்னார்கள். 300 பேர் தி.மு.க.வைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுத்ததாக. அவர்கள் அ.தி.மு.க. அனுதாபியாக இருக்கலாம். ஆனால் அதிகாரிகள் அவருக்கு இப்படி தகவல் கொடுத்து இருக்கலாம். அவர்கள் தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் என்று ஒரு மினிமம் ஆதாரத்தின் அடிப்படையில் இன்னின்ன கட்சிக்காரர்கள், 'இன்னின்ன இடத்தில் டெண்டர் பெற்றார்கள் என்று' மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது ஆதார பூர்வமாகச் சொல்லி, இது பூராவும் ரிக்கார்டில் ஏறுவது பொருத்தம் அல்ல. ஆகவே, ஆட்சேபிக்கிறோம். பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறதா இல்லையா என்பது அல்ல பிரச்னை. ஆட்சேபிக்கக் கூடிய விஷயம் இது. இது அரசாங்க புள்ளி விவரங்களைச் சொல்வது போல் ஆகாது. (குறுக்கீடுகள்). இன்னின்ன கான்ட்ராக்ட்டுகள் இன்னின்ன கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டன என்று சொன்னால், நாங்கள் திருப்பிச் சொல்லலாம், அவர்கள் எல்லாம் உங்களுடைய அனுதாபிகள் தான். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் முதல் பக்கத்திலே செங்கற்பட்டு தாண்டவில்லை. அதற்குள்ளே இவ்வளவு பிரச்சனைகள் என்றால் இன்னும் முழுவதும் படித்தால் (குறுக்கீடு) எனக்குப் புரிகிறது. நான் ஒன்று சொல்லிக்கொள்வேன். எனக்குத் தருகிற புள்ளி விவரங்களைத் தவறாகத் தருபவர்கள் மீது நான் நடவடிக்கை எடுப்பேன் என்று நேற்றைய தினம் சொல்லியிருக்கிறேன். ஆகவே, அந்தந்தக் கட்சித் தலைவர்களுக்கு, இங்கே இருக்கிறவர்களுக்கு, அந்தக் குறிப்புகளை நான் கொடுக்கிறேன். அதற்கு பதில், நீங்கள் கேள்வியாகக் கேளுங்கள். இங்கேபதில் தரப்படும். ஆகவே, தன்னிறைவுத் திட்டம் என்பது உங்கள் தன்னிறைவுத் திட்டம் என்று சொன்னதால் தான் இந்த நிலைமை ஏற்பட்டது, இந்த விளக்கம் தரும் நிலைமை ஏற்பட்டது. இல்லாவிட்டால் ஏற்படாது. (மேசையைத் தட்டும் ஒலி).



1983 நவம்பர் 16] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

தன்னிறைவுத் திட்டத்தில் குறை இருக்கிறது என்று சொல்லுங்கள். தன்னிறைவுத் திட்டத்தில் எங்கே ஊழல் நடந்தது, யார் செய்தார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லுங்கள். நடவடிக்கை எடுக்கவோ அல்லது நாங்களே எங்களை தண்டித்துக் கொள்ளவோ நியாயம் உண்டு. ஆனால் ஒட்டுமொத்தமாக பேசும்போது இந்தத் தன்னிறைவுத் திட்டம் என்பது மக்கள் திட்டம் அல்ல. தங்களுக்காக தன்னிறைவுத் திட்டம் செய்து கொண்டார்கள் என்று சொல்வது ஆட்சியிலே இருக்கிறவர்களைச் சொல்வதாகத் தான் பொருள். அப்படியானால் சில சமயங்களில் சில புள்ளி விவரங்களைத் தரவேண்டி இருக்கிறது. ஆதாரங்கள் எப்படிக் கிடைத்தது என்று முழுமையாகச் சொல்ல நான் இந்த நேரத்தைப் பயன்படுத்தப்போவது இல்லை. ஆகவே, இதைச் சொல்லவில்லை. ஒவ்வொரு இடத்திலும் பழைய கான்ட்ராக்டர்கள் என்று உண்டு. அது நாடறிந்த உண்மை. அது சில சமயம் குறிப்புகளிலும் இருக்கும். இன்னின்ன பெயர் என்று இருக்கும். எந்தக் கட்சியிலே பங்குக் கொண்டு இருக்கிறார்கள், எந்தக் கட்சியிலே மேடையில் பேசி இருக்கிறார்கள் என்பது எல்லாம் இருக்கும். அவற்றை எல்லாம் பார்த்து தான் சொல்கிறேன். அது உண்மை இல்லை என்று நீங்கள் சொல்வீர்களானால் வாதத்திற்கு ஏற்றுக்கொண்டாலும், தந்திருக்கிறவர்கள் சில நம்பிக்கையிலும் ஆதாரத்திலும் தருகின்றார்கள். நான் முன்னமே சொன்னதைப் போல உங்களுக்கு நான் அனுப்பி வைக்கிறேன். தலைவர்கள் அதைப்பற்றி எது தவறு என்று எடுத்துச் சொல்கிறார்களோ அந்த தவறைத் திருத்துவதற்கும் அந்த தவறை இங்கே செய்தியாக சொல்ல எனக்கு வாய்ப்பு தந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் நான் ஏற்பாடு செய்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : நீங்கள் அப்படி தரும்போது அவர்களுடைய பெயர்களை எல்லாம் கொடுக்க வேண்டும். அப்படித் தந்தால் தான் அவர்கள் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களா இல்லையா என்று மறுக்க முடியும். இது முதல் பிரச்சனை. இரண்டாவது பிரச்சனை, எந்தக் கட்சியாக இருந்தால் என்ன ? ஊழல் செய்தார்கள் என்று அரசாங்கத்திற்குத் தெரிந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டியது தானே. (குறுக்கீடுகள்). தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கை தட்டுவதும் மேசையிலே தட்டுவதும் மட்டும் ஏற்கனவே உணர்ச்சி என்று சொன்னேனே, அதற்கு தான் அடையாளம்; உணர்வுகளுக்கு அடையாளம் அல்ல.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். படிப்பதற்கு முன்பே சொன்னேன். இதில் தவறு இருந்தால் அவர்களை டிஸ்மிஸ் செய்வேன், பதவியிலிருந்து நீக்குவேன் என்று. இங்கே நான் பேசுகின்றபோது குறிப்பிடுகின்ற இந்தக் குறிப்புகளுக்கும் அது தொடரும். எந்த நம்பிக்கையில் தருகிறார்கள், எப்படித் தருகிறார்கள், விளக்கம் எல்லாம் தரவேண்டும் என்றால் நிச்சயமாக அவர்களுடைய பெயர்கள் எப்படி வந்தன, அந்த டெண்டரை எப்படிப் பெற்றார்கள், எந்த அளவுக்கு அவர்களுக்கு ஆதாயம் கிடைத்தது என்பதை எல்லாம் நீங்கள் அறியும்போது, எல்லாவற்றையும் நீங்கள் பார்ப்பதற்கு உங்களுக்கு வாய்ப்பு கொடுப்பதற்குக் கூட நான் அதிகாரிகளை அழைத்து அல்லது அந்தந்த இடத்தில் உங்களுடைய பிரதிநிதிகளை அழைத்து பேச வாய்ப்பு கொடுப்பேன். எனக்கு இதிலே அச்சமும் இல்லை. எந்தவிதமான ஒரு அதிர்ச்சியும் இல்லை.

நாங்கள் கோபித்துக் கொள்கிறோம் என்று சொல்கிறீர்கள். ஆனால் உண்மையில் கோபம் உங்களுக்குத் தான் அதிகமாக வருகிறது. காரணம் என்ன வென்றால் ஒரு குறிப்பைப் படித்தேன். படித்த பிறகு, பேசி முடிந்த பிறகு, மாண்புமிகு உமாநாத் அவர்களிடம் சொல்லி கேள்வி கேட்கலாம். அது இல்லாமல் எல்லோரும் சேர்ந்து பேசி, இதைத் தடுக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் என்கின்ற எண்ணத்தை வெளிப்படுத்துகிறபோது (குறுக்கீடு) கொஞ்சம் பொறுமையாக இருங்கள். வேண்டாம் என்றால் எனக்கு கவலை இல்லை. நீங்கள் சொல்லுங்கள். ஆனால் மக்கள் நம்ப மாட்டார்கள். நான் ஒன்றைச் சொல்கிறேன். நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். மற்றவர்கள் 755 என்று சொன்னேன். இதை தயவு செய்து கண்காணித்துப் பார்க்க வேண்டும். மற்றவர்கள் யார், யார் என்பது தெரியாது. தனிப்பட்டவர்கள். ஆகவே இது எப்படித் தெரியும் என்பது நான் முன் சொன்னபடியும் மாண்புமிகு திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னதையும் பரிசீலித்து ஏற்பாடு செய்யச் சொல்கிறேன்.

ஆனால் தன்னிறைவுத் திட்டம் என்பது எங்களுடைய தன்னிறைவு திட்டம் அல்ல. இதை எடுத்துக் கொண்டவர்கள் யார், யாராவது பயன்படுத்திக் கொண்டிருந்தால், அதிலே இருக்கின்ற அதிகரிகளே முன் அனுபவத்தில் இருப்பவர்களை பயன்படுத்திக் கொண்டிருந்நால் பழைய தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு அவர்களிடமிருந்து சலுகை பெற்றிருந்தால், அவர்கள் தான் தங்களுக்கு தன்னிறைவு ஏற்படுத்திக் கொண்டவர்களாக இருப்பார்களே தவிர நாங்கள் யாரும் இதிலே தன்னிறைவு பெறவில்லை என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இந்தப் பிரச்சனையை இதோடு விட்டுவிட்டு அடுத்த பிரச்சனைக்கு வருகிறேன்.





(முற்பகல் 11–40).

காவல்துறையைப் பொறுத்தவரையில் தமிழகக் காவல் துறை சரியாக இல்லை. ஆங்காங்கே கொள்ளைகள் எல்லாம் நடைபெறுகின்றன. அவர்களுக்குத் திறமையில்லை, கவனிப்பு இல்லை. என்றெல்லாம் சொல்லப்பட்டது. அண்மையாக ஒரு 3, 4 தினங்கள் அல்லது ஒரு வாரத்திற்குள் காவல் துறையினர் எப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதும், பாகிஸ்தானில் இருந்து வந்த அதிபர், தமிழ் அதிகாரிகளை, தமிழ் காவலர்களை எப்படி பாராட்டி எழுதி இருக்கிறார்கள் என்பதையும் முன்பே நான் கூறி இருக்கிறேன்.

பெங்களூரில் களவு போன ஒரு திருட்டை அவர்கள் கொடுத்த சில நாட்களிலேயே வேலூரில் அந்தக் குற்றவாளிகளைக் கண்டு பிடித்துக் கொடுத்தவர்கள் தமிழ்நாட்டிலுள்ள காவலர்கள். அதுமட்டுமல்ல. கூடுமானவரையில் சிறையில் அதிக ஆட்களை உள்ளே தள்ளி, பொய் வழக்கு போடாத நிலையில் இன்றைய காவல் துறை இருக்கிறது என்பதை துணிவோடு சொல்ல விரும்புகிறேன். அதாவது மற்ற மாநிலங்களில் அப்படி இல்லை. படங்கள் எல்லாம் பத்திரிகையில் வந்தன. அதை எல்லாம் இங்கே வைத்திருக்கிறேன். அதைக் காட்ட நான் விரும்பவில்லை. அப்படிப்பட்ட நிலையில் இங்கே தமிழகக் காவல்துறை இல்லை என்பதும் அவர்கள் தங்கள் கடமைகளைச் செய்தார்கள் என்பதும், எந்த அரசு வந்தாலும் அவர்கள் கொள்கையை மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கையை-சட்டத்தின்படி எதை நிறைவேற்ற வேண்டுமோ அதை நிறைவேற்றுகிறார்கள் என்பதை நாங்கள் பதவியை விட்டுப் போன போதும் அதை உணர்ந்தோம், பதவிக்கு வராத போதும் உணர்ந்தோம், வந்த பிறகும் அதை உணர்கிறோம். என்பதைச் சொல்லி அதைப் பெரிய விளக்கமாகத் தரவில்லை. அப்படி ஏதாவது குற்றச்சாட்டை தொடர்ந்து மாண்புமிகு உமாநாத் அவர்கள் சொல்வார்களானால் அதற்கு என்னுடைய பதிலையும், மற்ற மாநிலங்களிலே எப்படி இருக்கின்றது, நம்முடைய மாநிலத்திலே எப்படி இருக்கிறது என்பதை எல்லாம் சொல்லி, படங்கள் கூட இருக்கின்றன பத்திரிகையிலே வந்தவை—அதை எல்லாம் எடுத்துக் காண்பிக்க நான் தயாராக இருக்கிறேன் என்று சொல்லி இப்போது வேறு பிரச்சினைகளுக்குப் போகாமல், இந்தப் பேச்சை இத்தோடு முடித்து, பேரவை முடிவு என்ன என்பதை பேரவைத் தலைவர் கேட்டறிந்து தீர்ப்புக் கூற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, (குறுக்கீடு) என்னை மட்டும் சுருக்கமாக முடித்துவிடு என்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே உங்களுக்கு ஒன்றேமுக்கால் மணி நேரம் கொடுத்தாகிவிட்டது. நீங்கள் கேட்டதற்கு மேலேயே 3/4 மணி நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) அந்த நம்பிக்கையை வரவேற்கிறேன். அவையை நடத்துவதற்கு தாங்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும். எனவே சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, கவர்னர் அட்ரஸ் மீது ரிப்ளை பண்ணுவதற்கு வேண்டிய பொறுப்பு முதலமைச்சருக்கு உண்டு. அப்படி பேசும்போது முதலமைச்சரைப் பார்த்து எவ்வளவு நேரம் வேண்டும் என்று கேட்பீர்கள். அவர் 8 மணி நேரம், 6 மணி நேரம் வேண்டும் என்று கேட்பார்கள். நேற்றையதினம்கூட 3/4 மணி நேரம் முன்னதாகவே முடித்து விட்டீர்கள். He was tired. We don't deey that. அந்த நேரமும் போய்விட்டது. He was freely allowed என்னை மட்டும் சுருக்கமாகப் பேசுங்கள் என்று சொல்லுகிறீர்கள். யார் யார் சப்போர்ட் பண்ணுகிறார்களோ அவர்களும் பேசலாம் என்று சொல்கிறீர்கள். நான் என்னுடைய மொழியிலே பேச முடியாது. எனக்கு உள்ள டிபெக்ட் அது—முதல் அமைச்சர் அவர் பேசக்கூடிய தமிழில் எனக்குப் பேச வராது. அவர் ப்ளுயண்டாகப் பேசுவார். இதையெல்லாம் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு தலைவரவர்களே, இந்த விவாதத்தில் நடந்ததெற்கெல்லாம் பல்வேறு விமர்சனங்களை முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலிலே கூறி யிருக்கிறார்கள். விவாதம் ஹெல்தியாக நடந்தது பற்றி ரொம்ப சந்தோஷம். நான் மெயின் பாயிண்டிற்கு போவதற்கு முன்னால், விட்டுப் போய் விடக்கூடாது என்பதற்காக சில வார்த்தைகளை முதலிலேயே சொல்லிக் கொள்ளுகிறேன்.

தஞ்சையில் வறட்சி நிவாரண மாவட்டக் கமிட்டியிலே வேலை முடிந்து விட்டது என்று ரெக்கார்டு பண்ணினார்கள். 3-ல், 2 பங்கு வேலை முடிக்கவில்லை, நானே நேரில் போய் பார்த்துவிட்டு, குறிப்பிட்டதைப் பற்றி கலெக்டர் எழுதின லெட்டரைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே கலெக்டர் எனக்கு அனுப்பியிருக்கிறார் என்று சொன்னார். இதுவரையில் கிடைக்கவில்லை. அதற்குள்ளே நான் போகவில்லை. நான் நடந்தே போய் பார்த்து, முக்கால் பங்கு வேலை முடிக்கப்படவில்லை, என்பதும் உண்மை. முதலமைச்சர் நம்புவார் என்று நினைக்கிறேன்.



I am making a solemn statement.

மறுநாள் அந்தக் கமிட்டிக் கூட்டத்திலே இந்த மாதிரி முடிக்கவில்லை. ஆனால் 30,000 ரூபாய் செலவாகிவிட்டது. வேலை பூர்த்தியாகிவிட்டது என்று ரெக்கார்டை காட்டியதும் உண்மை. கலெக்டர் பார்த்து ஏற்றுக் கொண்டதும் உண்மை.

you have made a false report.

என்று எக்சிகியூட்டிவ் இன்ஜினியரிடம் சொல்லி நான் சீப் இன்ஜினியருக்கு சொல்லப் போகிறேன் என்று சொன்னதும் உண்மை.

Direct evidence

இதோடு விஷயம் முடிந்தது. அதற்குப் பிறகுதான் ஏ.டி.எம்.கே. உறுப்பினர் எழுந்து அந்த இ.இ.-யை சப்போர்ட் பண்ணினார் என்று நான் சொன்னேன். இவ்வளவும் உண்மை. இது எல்லாம் முடிந்த பிறகு அவர்கள் ரிப்போர்ட் அனுப்புகிறோம் என்று சொன்னதற்குப் பிறகு, 2 நாள் கழித்து அந்த வேலையைப் போய் முடித்திருக்கிறார்கள். ஏன் என்றால், இங்கே ரெயிஸ் பண்ணியாச்சு அல்லவா ? முடிந்து விட்டது என்று ரிக்கார்டு. முடிக்கவில்லை என்பது என்னுடைய டைரக்ட் எவிடென்ஸ்.

You have given a false report.

என்று வந்தாச்சு. இதற்குப் பிறகு நான் சொன்னேன். பிறகு அவர்கள் '' ஆமாம் '' கொஞ்சம் வேலை பாக்கியிருக்கு, என்று அந்த என்ஜினியர் சொன்னதும் உண்மை.

You have given a false report.

என்று அந்த இ.இ.-யைப் பார்த்துச் சொன்னது உண்மை. அதனாலே நான் கலெக்டரின் லெட்டரில் உள்ள வார்த்தையை முதல் அமைச்சர் அவர்கள் பார்க்க வேண்டும். '' தற்போது '' அந்த வேலை முடிக்கப்பட்டது. இந்த '' தற்போது '' என்ற வார்த்தை தான் ''வெரி இம்ப்பார்ட்டென்ட்.'' இந்த பாயிண்டை முதல்வர் அவர்கள் இத்தோடு விட்டுவிடக்கூடாது என்று நான் சொல்கிறேன்.

அதே மாதிரி பி. டபிள்யூ. விஷயம். நான் பல விஷயங்களை டீட்டெயிலாகச் சொல்லியிருக்கிறேன். அந்த லிமிடெட் கான்ட்ராக்ட் விஷயமாக. அது இனிமேல் கொடுக்கப்படமாட்டாது என்று சொன்ன பிறகும் கொடுத்த விவரத்தை நான் சொல்லியிருக்கிறேன். இதற்கு அந்த பேப்பர் மீது ஏன் கேஸ் போடவில்லை என்று அதையும் நான் கேட்டிருக்கிறேன். கான்ட்ராக்ட் ஏன் பண்ணவில்லை என்பதை நான் கேட்டிருக்கிறேன். அது மட்டுமல்லாமல், இரண்டாவது பெயர் தமிழ்ச் செல்வன்,

ரிஜிஸ்ட்டர்ட் கான்ட்ராக்டர் அல்ல என்பதும் எனக்குத் தகவல். மாண்புமிகு முதல்வர் வேண்டுமானால் வெரிபை பண்ணட்டும். ஆகவே இதற்கு சரியான பதில் வரவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

கர்நாடகா மொழிப் பிரச்சினை சம்பந்தமாக அங்கே நடந்த பையரிங்கிலே ஒரு தமிழ் மகன் இறந்து விட்டார் என்பது உண்மை. அங்கேயிருக்கிற வேறு எந்தக் கட்சியும் அதைப்பற்றி கவனிக்கவில்லை என்று முதல்வர் அவர்கள் சொல்வது சரியல்ல இதிலே ஜாயின்ட் ஆக்ஷன் கமிட்டி, நம்முடைய மைனாரிட்டி மொழியை பாதுகாக்க வேண்டுமென்று அதிலே உண்மையி லேயே லீடிங் பொசிசன் எடுத்தது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி. (குறுக்கீடு). பெரும்பாலும், முதலிலே சொல்கிறபோது லோகலி யாரும் இல்லை என்று (குறுக்கீடு) சொல்லும்போது அங்கு பைரிங் நடந்ததைக் கண்டித்து அங்கேயிருக்கக் கூடிய கோல்ட் மைன்ஸ், பெம்மல், பெரிய பேக்டரியிலே எல்லாம் ஸ்ட்ரைக் நடத்துவதற்கு நாங்கள் அன்றைக்கு கால் கொடுத் தோம். எனவே இதிலே ஒரு கரெக்ஷன்.

இன்றைக்கு செல்ப்-சபிசியன்சி ஸ்கீம் விஷயமாக என்ன வாதம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் என்றால் இது விஷயமாக சில விளக்கங்கள் கொடுத்திருக்கிறேன். என் னென்ன சார்ஜஸ் என்று கொடுத்திருக்கிறேன். அதை மறுபடி யும் சொல்லப் போவதில்லை. ஆனால் நீங்கள் எப்படி உண்மை அல்ல என்பதைத்தான் நீங்கள் காட்ச் எண்ண வேண்டும். நான் சொல்லிக் கேட்பதாகச் சொல்லவில்லை. எப்படி நான் எதிர் பார்க்கிறது என்றால், எப்படி கொடுத்தார் அந்த பேக்ட்சை என்று நான் கொடுத்ததை உண்மையா என்பதை நீங்கள் கேட்ச் பண்ண வேண்டும். நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றால், யார் யாருக்குக் கொடுத்தோம் என்று பார்ட்டி லிஸ்ட் எல்லாம் கொடுக்கிறார்கள். அதனால் இம்ப்பிளிகேஷன் என்ன வரும் என்றால், நடந்தது உண்மைதான். சரி, லஞ்சம். ஆனால் எங்களுக்கு மட்டுமல்ல பங்கு, உங்களுக்கும் இருக்கிறது என்ற மாதிரிதான் அந்த வாதம் போகிறது. அதனாலேதான் சங்க ரய்யா கேட்டார். பார்ட்டி அல்ல பிரச்சினை. எந்தப் பார்ட்டி யானாலும் நீங்கள் சுட்டிக் காட்டுங்கள், ஆளும் கட்சியானால், மறுத்து விடுங்கள். பேக்ட்ஸ் கொடுங்கள், எந்தப் பார்ட்டி யானாலும், எங்கள் பார்ட்டியை உட்பட்டு இருக்கிற ஆளானாலும், அபிசியல் ட்யூட்டி, கான்ட்ராக்ட் வயலேட் பண்ணினால். நான் என்ன சொல்கிறேன் என்றால், ஆக்ஷன் எடுக்கவில்லை. எடுக்க வேண்டிய அதிகாரி பேசாமல் இருக் கிறார்கள். இதிலிருந்து என்ன நாம் பார்க்க வேண்டும். That means there is Collusion ஆகவே அப்படிச் சொல்வது சரியல்ல.





இப்போது நான் நோ-கான்பிடென்ஸ் மோஷன் விஷயத் தைப்பற்றிச் சொல்கிறேன். இந்த நோ-கான்பீடன்ஸ் மோச னைப் பொறுத்த வரைக்கும் எதற்காகக் கொண்டு வரப்பட்டது என்பதைப் பற்றி, தேர்தல் நோக்கத்திற்காக இந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டு வந்ததாக முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இது இல்லை என்று நான் மறுக்கிறேன். அதற்காக என்றால் இல்லை என்று தான் நாங்கள் சொல்வோம். அதற்கு ஒன்றும் நாங்கள் தயங்கக் கூடியவர்கள் அல்ல. இதற்கு முன்பாக இந்த அவையிலே 2 முறைகள் நோ- கான்பீடன்ஸ் மோசன் வந்திருக்கிறது. நாங்கள் சப்போர்ட் பண்ணவில்லை. எங்களுக்கு ஒன்றும் ஒளிவு மறைவு இல்லை. நாங்கள் சப்போர்ட் பண்ணவில்லை. அதை ஏன் ஆதரிக்க வில்லை என்று சொன்னால், ஒரு தரம் கன்டம்நேசன், அதாவது சென்சர் கொண்டு வந்தோம். அது தொழிலாளர் பிரச்சினை யிலே. நோ-கான்பிபீடன்ஸ் மோசனை நாங்கள் சப்போர்ட் பண்ணவில்லை. நாங்கள் ஒரு கோட்பாடு வைத்திருக்கிறோம். ஜனங்கள் ஒரு புதிய கட்சியைத் தேர்ந்தெடுத்தால் அது அதிகாரத் திற்கு வந்தவுடனே அவர்கள் செயல்படுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்காமலேயே நோ-கான்பிடன்ஸ் என்று திடீரென்று கொண்டு வருவது சரியல்ல என்பது எங்களுடைய கருத்து. Allow it to function சில ஆண்டுகளாவது ஆட்சி நடத்தட்டும். தவறு செய்தால் கிரிட்டிசைஸ் பண்ணுவோம். கடைசியில் சில ஆண்டு கள் வரையிலும் நாங்கள் விமர்சனம் பண்ணியும் திருந்தவில்லை என்று சொன்னால்.

Then the No-Confidence motion comes

அந்தக் கோட்பாட்டின் அடிப்படையிலேதான் நாங்கள் தேர்தல் பிளட்ஜை அமல்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கொடுத்து, விமர்சனம் பண்ணி கரெக்டாக இல்லை என்று சொன்னால், பிறகு நோ-கான்பீடன்ஸ் என்ற பிரின்சிபலை ஒட்டித்தான் முன்னாலே வந்ததை ஆதரிக்கவில்லை. இடையிலே ஒரு விஷ யத்திலே மட்டும் கண்டம்நேசன் கொடுத்தோம்.

(முற்பகல் 11–50)

ஆகவே, இப்போது நீங்கள் ஆட்சிக்கு வந்து 6 ஆண்டுகள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) இரண்டு டெர்ம்ஸ்ஸையும் சேர்த்துத் தான் சொல்கிறேன். 3 வருஷம் ஆட்சி, இடையிலே டிஸ்மிஸ் ஸல், சில மாதங்கள் இடைவெளிவிட்டு அகெய்ன் வந்தீர்கள். மொத்தம் 6 ஆண்டுகள். ஆகவே, நாங்கள் பார்த்தோம். திருத்த முடியவில்லை, பல விமர்சனங்கள் செய்தோம். மாறாக கூடிய முறையில் போவதாகத்தான் எங்களுடைய கருத்து.

You may not agree but we are feeling that

[திரு. ரா. உமாநாத்] [1983 நவம்பர் 16

அதனாலே, இப்படிப்பட்ட நிலைமை. நாங்கள் கொண்டு வந்த தீர்மானத்திலே தொழிலாளர் பிரச்னையைத்தான் முக்கிய மாகக் கொண்டு வந்திருக்கிறோம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். அனால் அது இல்லை. நானும் எங் களுடைய தலைவர் சங்கரய்யா அவர்களும் சேர்ந்து பேசியதில் ஜனநாயக விரோதக் கொள்கை, தொழிலாளர் நல விரோதக் கொள்கை, விவசாயிகள் சம்பந்தமாகவும், ஊழல்கள் சம்பந்த மாகவும், ஆதி திராவிட திட்டங்கள், சமூக நலத் திட்டங்கள் சம்பந்தமாகவும் பேசியிருக்கிறோம். இந்த கடைசி இரண்டு விஷ யங்களிலே ஒன்றை நான் முக்கியமாக இப்பொழுதே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த இரண்டு பிரச்னைகளில், அதாவது ஆதித் திராவிட நலத் திட்டங்கள், சமூக நலத் திட்டங்கள் ஆகிய இவைகளில், நான் கொடுத்த புள்ளி விவரங்களை ஆராய்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால், நான் அவைகளை எதிலிருந்து கொடுத்தேன் என்று சொன்னால், Report of the Comptroller and Auditor General of India. அதாவது அரசாங்கத்தினுடைய கணக்குகளை சரி பார்க்கக்கூடிய அந்த ரிப்போர்ட்டிலிருந்து செலக்டட்டாக எடுத்துத்தான் இந்தச் சபையிலே வைத்தேன். யாரோ சொன்னதை வைத்து, இங்கே நான் வைக்க வில்லை. அது மட்டும் அல்ல, கல்வி, உணவுப் பிரச்னை, வேலை வாய்ப்பு இன்மை போன்ற பல முனைகளிலும் எங்களுடைய குற்றச்சாட்டுகளைத் தந்திருக்கிறோமே தவிர, தொழிலாளர் பிரச்னையில் மட்டும் அல்ல.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

அடுத்து, அரசியல் தான் அதிகம் பேசினேன் என்று மாண்பு மிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். தேர்தலிலே சர்க்கார் அல்ல வாக்குறுதி கொடுப்பது It is the party which gives the pledge கட்சிதான் வாக்குறுதி கொடுக்கிறது. கொடுத்து பிறகு அது சர்க்காராக ஆகிறது. அந்தப் பாயின்டை வைத்துத்தான், அந் தப் பேச்சை நான் கொண்டு வந்தேன். அதாவது கொடுத்த அரசியல் பிளட்ஜில் authoritarianism ஐ எதிர்த்து போராட் டம் பண்ணுவது என்று அரசியல் கட்சியாக வாக்குறுதி கொடுத் ததை, அரசாங்கமாக வந்த பிறகு. அமுல் படுத்தவில்லை. you are going against it. அப்படித்தான் வந்தது. ஆகவே, இது பொதுவாக அரசியலாக வந்த பிரச்னை அல்ல, எலக்ஷனோடு இணைந்து வந்ததுதான்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பேசியதுதான், குறிப்பிட்டது தான் மீண்டும் இங்கே பேசப்பட்டது என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய ஸ்பீச்சை எடுத்துப் பார்த்தால் நீங்கள் தெரிந்து கொள்ள முடியும்; எல்லா வற்றிலும் லேட்டஸ்ட் எக்ஸாம்பில்ஸ் கொடுத்திருக்கிறேன் என் பதைச் சொல்ல விரும்புகிறேன்.



1983 நவம்பர் 16] [திரு. இரா. உமாநாத்]

அடுத்தபடியாக பதில் சொல்கிறபோது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் காஷ்மீர் கான்பிரன்ஸில் ஏன் அட்டெண்ட் பண்ணவில்லை என்பதைப் பற்றி சொல்ல வேண்டும். கடிதப் போக்குவரத்தைப் பற்றிச் சொன்னார். அவர் பேசுகிறபோது அதையும் பப்ளிஷ் பண்ண வேண்டும் என்று நான் டிமாண்ட் பண்ணினேன். அதற்கு இணங்கி அவர் ரெஸ்பான்ஸ் பண்ணி அதை வெளியிட்டதற்கு ரொம்பநன்றி. வெளியிட்டதிலே, அந்தக் கடிதப் போக்குவரத்திலேயிருந்து என்னபுரிந்திருக்கிறோம் என்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறுவதாக என்ன புரிந்திருக்கிறோம் என்று சொன்னால், என்ன விவாதிக் கப்போகிறீர்கள் என்பது தெரிய வேண்டும் என்று கேட்டிருக் கிறார்கள்.

பரூக் அப்துல்லா அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கி றார்கள். அதில் மைய மாநில உறவுகள் பற்றி விவாதிக்கப்படும் என்று, அது அவர் படித்த கடிதத்திலேயே தெளிவாக இருக்கிறது. ஈ. எம். எஸ். அறிக்கையிலேயும் கூறியுள்ளார்கள். ஈ. எம். எஸ். என்ன அத்தாரிட்டியா என்று கேட்பார்கள். அத்தாரிட்டி அல்ல. அதுவும் இணைந்த ஒரு பார்ட்டி தான். பருக் அப்துல்லா எப்படி எழுதினார்களோ அப்படியே அவர்கள் அறிக்கையில் தெரிவித் திருக்கிறார்கள். என்ன அறிக்கை விட்டிருக்கிறார்கள். இந்த மாநாட்டில் மைய மாநில உறவு பிரச்னைகள் மட்டும் தான் விவாதிக்கப்படும். தேர்தல் பிரச்னைகளோ, மற்றப் பிரச்னை களோ விவாதிக்கப்பட மாட்டாது என்று அறிக்கை விட்டார். அதுதான் உண்மையான நோக்கம் என்ற காரணத்தாலே, அதை மாநாட்டில் நிறைவேற்றிய ஏகமனதான தீர்மானம் ஊர்ஜிதம் செய்கிறது. வேறு எதுவும் மிக்ஸ் அப் பண்ணவில்லை.

நீங்கள் என்ன சொல்லியிருக்கிறீர்கள். அரசாங்கத் தரப்பிலே அனைத்து முதல்வர்களையும் அழைத்து இருக்க வேண்டும், எல்லாக் கட்சிக் காரர்களையும் அழைத்திருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அனைத்து முதல்வர்களையும் என்றால், காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து மாநில முதல்வர்களும் என்று தானே பொருள். ஆனால், இந்த மாநாடு மைய மாநில உறவு கள் சம்பந்தமாக எதிர்க்கட்சிகள் கூட்டுகிற ஒரு மாநாடு. It is an opposition meeting oppositiong meetinto discuss the Centre-state relationship அந்த முறையில் காங்கிரஸ் அல்லாத மற்றவர்கள் அங்கே வந்தனர். Opposition meet on Centre state Relationship ஆப்போசிஷனிலே இருக்கிற சீஃப் மினிஸ்டர்கள் அங்கே வந் தார்கள். எதிர்க்கட்சிகள் கூடி, மைய மாநில உறவுகள் சம்பந்த மாக விவாதிக்கிற அந்த மாநாட்டுக்கு, காங்கிரஸ் கட்சியினரை, காங்கிரஸ் முதல்வர்களை எப்படி அழைக்க முடியும். பெங்க ளூரிலே கூடிய தென்னக முதல்வர்கள் மாநாட்டின் அனுபவத் தைக்கொண்டே அவர்கள் அழைக்கப்படவில்லை என்றுதான் நான்

சொல்வேன். என் அனுபவம். கேரள முதலமைச்சர் திரு. கருணாகரன் அவர்களை அழைத்தீர்கள், அதன் விளைவு என்ன? அவர் வர மறுத்தது மட்டுமல்ல, 4 மாநில முதல்வர்கள் எடுத்த முடிவுகளை நாட்டை சீர்குலைக்கும் தன்மை வாய்ந்தது என்று சொன்னார். He openly attacked the decision அந்த முடிவுகளைப் பற்றி ஏ. ஐ. சி. சி. ஜெனரல் செக்ரட்டரி திரு. ஸ்டீபன் என்ன சொன்னார்? அந்த முடிவுகள் தேசத் துரோகம் விளைவிக்கும் என்று நீங்கள் எடுத்த அந்த முடிவு களைப்பற்றிக் கூறினார்கள். அதிக அதிகாரங்களைக் கோரும் தங்களின் முடிவுகளை தேசத் துரோகம் என்றும் தேசத்தைப் பிளவு படுத்தும் என்றும் சொல்லியிருக்கிறார். காங்கிரஸ் கட்சி யைச் சேர்ந்த முதலமைச்சர்களையும் அழைத்து இருக்க வேண்டு மென்று கூறுகிறீர்கள். எப்படி அது நியாயம ஆகும்? தென்னக முதல்வர்கள் மாநாட்டில் கலந்து கொண்டதற்காக புதுச்சேரி டி. எம. கே. அமைச்சரவையில் அதுவரைக்கும் கலந்து கொண்டு ஆதரவு கொடுத்து வந்தார்கள், அவர் போய்விட்டு வந்தார், அதற்கப்புறம் அந்த ஆதரவை வாபஸ் பெற்று கடைசியில் டிஸ்மிஸ் செய்யப்பட்டது. எப்படி அந்த காங்கிரஸ் கட்சியை அழைத்திருக்க முடியும்? காஷ்மீருக்கு காங்கிரஸ் கட்சியையும் காங்கிரஸ் முதலமைச்சர்களையும் அழைக்காதது எவ்வளவு சரி யானது என்பது பிறகு நடந்திருக்கக்கூடிய சம்பவங்கள் ஊர் ஜிதம் செய்கின்றன என்பதுதான் என்னுடைய வாதம்.

போர்வாள் 16—10—1983, மாண்புமிகு திரு. எஸ்.டி.எஸ். அவர்கள் நடத்துவதாகக் கேள்விப்பட்டேன். அதனுடைய எடிட்டோரியலை நான் படிக்கிறேன். ஐ கோட். 16—10—1983 மத்திய மாநில உறவு பாட்டுக்குத் தப்புத்தாளம் ஏன்? மத்திய அரசுக்குக் கூடுதல் அதிகாரம் வேண்டுமாம், இந்திரா காங்கிரஸின் பொதுச் செயலாளர் திரு. ராஜீவ் காந்தி இப்படியொரு வெடி குண்டை எடுத்து வீசியிருக்கிறார். அண்மையில் காஷ்மீர் தலை நகரில் எதிர்க்கட்சித் தலைவர்களின் கலந்துரையாடல் கூட்ட மொன்று நடைபெற்றது, அதிலே பங்கேற்ற அனைவரும் மத்திய அரசின் அதிகாரக் குவிப்பைக் கண்டிக்கிறார்கள். மாநில அரசு களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படத்தான் வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். அவர்களுக்கு மறுப்புச் சொல்லும் வகையில் ராஜீவ் காந்தி மத்திய அரசுக்கு கூடுதல் அதிகாரம் வேண்டுமென்று 9—10—1983 அன்று பாட்னாவுக்கு பயணம் புரியும்போது கூறியிருக்கிறார். இப்போது மத்திய அரசுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்றுகோரக்கூடிய கட்சியின்General Secretary of th party அந்தப் பார்ட்டியை நாம் எப்படி அழைத்திருக்க முடியும். ஆப் போஷீஸன் மீட்டினுடைய ஆப்போஸிட் கருத்து அது. நீங்கள் அழைத்து இருக்க வேண்டுமென்று கூறக்கூடிய காங்கிரஸ் முதல் அமைச்சர்கள் எப்படி இந்த விஷயத்தில் நடந்து கொண்டார்கள் என்பதும் ஊர்ஜிதம் ஆகிறது. போர்வாள் 16—11—1983 பத் திரிகையிலே மனச்சாட்சியைக் கொன்ற முதலமைச்சர்கள் என் பதுதான் அதனுடைய தலைப்பு. That is an editorial





அதிலே செல்ஸ்டாக்ஸ் சம்பந்தமாக கூடிய சீப்மின்ஸ்டர்ஸ் மீட் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. ஐ கோட். முதலமைச் சர்களுடைய மாநாடு நடப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் பம்பாயில் இந்திரா காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர்கள் அழைக்கப்பட்டார்கள். நடைபெற இருக்கிற முதலமைச்சர்கள் மாநாட்டில் மத்திய நிதியமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி கொண்டுவருகிற தீர்மானத்தை எதிர்க்கக்கூடாது, ஆதரிக்க வேண்டுமென்று கட்டளையிட்டார்கள். விற்பனை வரியை எடுத் துக்கொள்வதை காங்கிரஸ் முதலமைச்சர்களும் விரும்பாமல் அதற் கேற்றாற்போல் தங்கள் மாநாட்டினுடைய பேச்சை அச்சடித்து வைத்து இருந்தார்களாம், முதலில். Speech against Salestax. ஆனால், பிரணாப் முகர்ஜி வந்து இப்படித்தான் பேசவேண்டு மென்று சொன்னார். மேலிடத்தின் கட்டளையை மேற்கொண்டு காங்கிரஸ் முதலமைச்சர்கள் மீறமுடியவில்லை. ஆகவே, அச் சடித்த பேச்சை கிடப்பிலே போட்டுவிட்டு கட்சியின் கட்டளை யின்படியே மத்திய நிதியமைச்சருடைய தீர்மானத்தை ஆதரித்து பேசினார்கள். தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாக தங்கள் ளுடைய மாநில மக்களின் எண்ணங்களுக்கு மாறாக காங்கிரஸ் முதலமைச்சர்கள் மாநாட்டில் பேசினார்கள். It is correct position? ஆகவே நான் கேட்கிறேன். இப்படிப்பட்ட முதலமைச்சர்களை, தங்கள் மாநில மக்களின் எண்ணங்களுக்கு மாறாக நடந்து கொள்ளும் இப்படிப்பட்ட முதலமைச்சர்களை எப்படி அழைத் திருக்க முடியும்? மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற கோரிக்கைக்கு விரோதமான கட்சிகளை அழைக்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் கூறுகிறார் களா? அதற்கு நேர் ஆப்போஸிட்டாக பொஸிஷன் எடுப்ப வர்கள் இதைக் காரணம் காட்டி அதிக அதிகாரம் கோரிய ஒரு பரந்த அளவில் நடந்த மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளாதது தமிழக மக்களுக்கு இழைத்த பெரும் அநீதி என்று நான் குற்றஞ்சாட்டுவேன்.

அதுவும் அந்த மாநாட்டிற்கு தயாரிப்பு எப்படி நடந்தது என்று தோழர் இ.எம்.எஸ். மாநாடு முடிந்த பிறகு எங்களுடைய பத்திரிகைக்கு ஒரு குறிப்பு எழுதினார். ஐ கோட். அதில் கலந்துகொண்டவர்கள் ஒவ்வொருவரும் அதற்கு செய்த தயா ரிப்புகள் பற்றி குறிப்பிடத்தக்கது. அதற்காக விவாதத்திற்கான தஸ்தாவேஜுக்களை சி.பி.ஐ., சி.பி.எம்., டி.எஸ்.பி., காங்கிரஸ்-எஸ் போன்ற கட்சிகள் பல நாட்களுக்கு முன்னதாக அவரவர்கள் தயார் செய்தனர், பிரிப்பேரேட்டரி நோட்ஸ் பலகட்சிகளும் தயார் செய்த குறிப்புகளும் முன்கூட்டியே எல்லா கட்சிகளுக்கும் தயார் செய்த குறிப்புகளும் முன்கூட்டியே எல்லா கட்சிகளுக்கும் சர்க்குலேட் பண்ணப்பட்டது. அதன் காரணமாக மாநாட்டின் விவாதம் மாநாடு எந்த நோக்கத்திற்காக நடத்தப்பட்டதோ

அந்த நோக்கம் கலபமாகவும கூர்மையாகவும் முடிக்க முடிந்தது. அனைத்துக் கட்சிகளும் எழுத்து மூலமாக தங்கள் தங்கள் கருத்துக்களை முன்கூட்டியே எழுதிக் கொடுத்தார்கள். எல்லோரும் ஒன்றுபட்டு ஒரு தஸ்தாவேஜுவை தயாரிக்க செய்ய முடிந்தது என்று திரு. இ.எம்.எஸ். கட்டுரையில் எழுதினார். தமிழகத்தின் காணிக்கையும் அதிலே சேர்க்கவேண்டும் என்பதற்காக உங்கள் கருத்தையும் எழுதியனுப்புங்கள் என்று—நேற்று படித்த கடிதப் போக்குவரத்திலே திரு. பரூக் அவர்கள் எழுதியதிலே—உங்கள் கருத்தை இந்த சப்ஜெக்ட்பற்றி அனுப்புங்கள் என்று கேட்டார்கள்.

[நண் பகல் 12-00]

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கலந்து கொள்வது பற்றி உங்கள் கருத்தை அறிவியுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்து அந்த மாதிரி இதற்கு என்று தெளிவான பிறகு ஒரு ரிப்ளை வந்து இருக்கிறது இது தான் சப்ஜெக்ட் ஆக டிஸ்கஸ் செய்யப்படும் என்று வந்த பிறகு நம்முடைய கருத்தை தமிழகத்தின் சார்பாக அனுப்பி இருக்க வேண்டும். உங்கள் கருத்தை நீங்கள் அனுப்பவில்லை. ஆகவே அந்த காஷ்மீர் பிரச்சனையைப் பொறுத்தவரைக்கும் எங்கள் கருத்து அது. எதிர்ப்பதற்காக மத்திய அரசை எதிர்ப்பது என்பது எங்களது கொள்கை அல்ல என மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். எதிர்ப்பதற்காக எதிர்க்க வேண்டும் என்று யார் சொன்னார்கள். மக்கள் நலன்களுக்காக எதிர்க்க வேண்டிய நேரத்தில் போராட வேண்டிய நேரத்தில் முன் வருவது இல்லை என்பது எங்களுடைய குற்றச்சாட்டு. அப்படி எதிர்க்காமல் இருப்பது அண்ணா கொள்கை என காட்டி நேற்று ஒரு கோட்டேஷனை மாண்புமிகு முதல்வர் அவர்கள் படித்தார்கள். அதில் மார்க்சிஸ்ட்டுகள் எடுத்த நிலை போல் எடுக்கக்கூடாது என்று மறைந்த மதிப்பிற்குரிய சி.என்.ஏ. அவர்கள் கூறியது போல் ஒரு கோட்டேஷனை 'ஹோம் ரூலில் இருந்து படித்தார்கள். அதில் உள்ள வார்த்தை என்ன? இ.எம்.எஸ். எரிச்சல் ஊட்டுவது 'போல் என்ற வார்த்தையுடன் மாண்புமிகு சி.என்.ஏ. அவர்கள் கோட் செய்தார்கள். இ.எம்.எஸ். எரிச்சல் ஊட்டினாரா? அல்லது மோதினாரா? அதேபோல் இந்த சீப் மினிஸ்டர் அந்த வழியில் தான் நாங்கள் போகிறோம் என்று சொல்கிறார்கள். கேரளத்தில் இ.எம்.எஸ். மந்திரி சபை அமைத்த பிறகு சட்டசபையை 28 மாதங்களில் கவிழ்க்க முடியவில்லை. ஆகவே இன்றைய பிரதமர் தலைமையில் மத உணர்ச்சியை தூண்டி, இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்'



மத்திய அரசு அந்த அரசு தலைமையகத்தை கேரோ செய்தார்கள் அப்படியும் இ.எம்.எஸ். அவர்கள் தைரியமாக உள்ளே அங்கே தலைமையகத்தில் உட்கார்ந்தார்கள். தடுப்புக் காவல் சட்டத்தில் யாரையும் பிடிக்கக்கூடாது என்று சொன்னார்கள். தடியடி துப்பாக்கிப் பிரயோகம் செய்யக்கூடாது என்று சொன்னார். போனில் நேரு அவர்கள் கேட்டார்கள். ராணுவம் வேண்டுமா ' சி.ஆர்.பி. வேண்டுமா என்று. இவர் வேண்டாம் என்று மறுத்தார். பிறகு மெஜாரிட்டி எங்களுக்கு இருந்தும் கூட அந்த சர்க்காரை மத்திய அரசு டிஸ்மிஸ் செய்தது. 1967ல் மீண்டும் இ.எம்.எஸ். அவர்கள் முதலமைச்சராக வந்தார்கள். மத்திய அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் நடந்தது. பிடிக்க வேண்டும், அவர்களை அரஸ்டு பண்ண வேண்டும் என்று சொன்னார்கள். 'நோ' என்று இவர் சொன்னார். அரிசி பற்றாக்குறையாக இருப்பதால் 90 ஆயிரம் டன் அரிசி வேண்டும் என்று மத்திய அரசை கேட்டார் இ.எம்.எஸ். அவர்கள். அதை இ.எம்.எஸ். எரிச்சல் ஊட்டினார் என்று சொல்ல முடியுமா? பொசிஷனை நாம் பார்க்கவேண்டும். இது எல்லோருக்கும் பொதுவானது. மத்திய அரசு காங்கிரஸ் அல்லாத சர்க்கார்களோடு மோதியது. அவர்களுடன் மோதியது தன்னை தற்காக்க. இதை இ.எம்.எஸ். டிபண்டு செய்தார். அது தான் நடந்த உண்மை. நான் கேட்கிறேன், 1980 ஆம் ஆண்டில் அ.இ.அ.தி.மு.க. சர்க்காரை மத்திய அரசு—இதே மத்திய அரசு—அன்றைக்கு டிஸ்மிஸ் செய்தார்கள். நீங்கள் என்ன எரிச்சல் ஊட்டினீர்களா? I do not thirk you will agr :. எரிச்சல் ஊட்டியதால் என்று சொல்ல முடியுமா? ஆனால் மறைந்த அண்ணா அவர்கள் காஞ்சி பத்திரிகையில் உயில் எழுதி வைத்துவிட்டுப் போனார் உண்மை தான். அந்த உயில் என்ன என்று சொன்னால் காங்கிரஸ் ஆட்சி என்பது ஏகபோக முதலாளிகளின் கட்சி என்று காஞ்சியில் வந்தது. டாட்டா, பிர்லாக்களின் கட்சி, 1967-ல் அந்த கட்சியை தமிழ்நாட்டில் தோற்கடித்தோம். இனியும் அந்தக் கட்சிக்குத் தமிழ்நாட்டில் இடம் அளிக்கக்கூடாது. அப்படி என்று சொன்னால் Both Parliam nt and Ass mbly, not Stat Gov rnment alone இந்த உயிலுக்கு விரோதமாக நீங்கள் இந்த நிமிடம் வரை செயல்பட்டுக்கொண்டு இருக்கிறீர்கள் என்பது எங்களுடைய குற்றச்சாட்டு.

அடுத்து, இந்த விவாதத்தில் ஆளும் கட்சியிலிருந்து வந்த மிகப் பெரிய பாயின்ட். மத்திய அரசு நல்லதை செய்தால் நீங்கள் ஆதரிக்கிறீர்கள், தப்பு செய்தால் எதிர்க்கிறீர்கள், அதே சமயத்தில் நாங்களும் அதாவது அ.இ.அ.தி.மு.க. அரசும் இங்கே நடந்து கொள்கிறது. பிரச்சனைக்கு பிரச்சனை மத்திய அரசு

நல்லதைச் செய்தால் ஆதரவு, தப்பு செய்தால் தான் எதிர்ப்பு
என்பது தான் எங்களுடைய நிலை என்றார். மாண்புமிகு விஸ்வ
நாதன் அவர்கள். கிட்டத்தட்ட நேற்று பேசுகிறபொழுது
அதே நிலையில்தான் மாண்புமிகு முதல்வர் அவர்களும் சொன்
னார்கள். மைய அரசு நல்லது செய்தால் ஆதரிப்போம் என்று
திரு. ஈ.எம்.எஸ். கூறியதாக மாண்புமிகு திரு. பாலசுப்பிரமணி
யம் அவர்கள் இந்துவை 'கோட்' பண்ணி, அதே பாயின்ட்டை
ஊர்ஜிதம் செய்து சொன்னார்கள். நான் எப்பொழுதும் சொல்
வது உண்டு. ஐயா, முழுவதும் தெரிந்து கொண்டு பேசுங்கள்
என்று. சரி, அது அவருடைய விஷயம். மைய அரசிடம் மார்க்
சிஸ்ட் நிலையும், ஏ.டி.எம்.கே அரசின் நிலையும் ஒரே மாதிரி
என்ற பொருள்படும்படி அவர்கள் கூறினார்கள். இருவர்
எண்ணமும் ஒன்று அல்ல. I am mphatically saying
அவர்கள் 'கோட்' பண்ணிய திரு. ஈ.எம்.எஸ். அவர்களின்
ஃபுல் ஸ்டேட்மென்ட்டை நான் வைத்திருக்கிறேன். 'சைக்
ளோஸ்டைல்ட் ஸ்டேட்மென்ட்' வைத்திருக்கிறேன். அந்த
ஸ்டேட்மென்டில் அவர் என்ன கூறியிருக்கிறார்? 'நாட்டின்
பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியாமல் ஆளுங்கட்சிப் படு
தோல்வி அடைந்தது. மத்தியில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி
களைக் கலக்காமல், பொருளாதார, அரசியல், அயல்நாட்டுக்
கொள்கைகளைத் தாங்களே உருவாக்கி, தங்களுடைய சொந்தக்
கொள்கைகளை நாட்டின் ஒருமித்த கருத்து என்று தேசிய
கொள்கை என்று பொய் கூறுகிறார்கள்'. இது திரு. ஈ.எம்.எஸ்.
ஸ்டேட்மென்ட். 'மைய அரசு ஏதாவது ஒரு பிரச்னையில்
கரெக்ட் நிலை எடுத்தால் அதற்கு ஒத்துழைப்புத் தர தயாராக
இருக்கிறது என்று முன்னமே சொல்லி வந்தோம். ஆனால்
மைய அரசின் அடிப்படையான கொள்கைகளை என்றைக்கும்
எதிர்க்கும் என்பதுதான் மார்க்சிஸ்ட் கட்சியின் நிலை."
"அது மட்டுமல்ல, அந்த அடிப்படையான கொள்கைகளை
எதிர்த்து மற்ற கட்சிகளை உருவாக்கவும், அதற்கான எதிர்ப்பு
சக்திகளை ஒன்றுபடுத்துவதற்கும் மக்களைத் திரட்டுவோம்;
தொடர்ந்து செயல்படுத்துவோம்.' திரு. ஈ எம்.எஸ். ஸ்டேட்
மென்டினுடைய புல் வெர்ஷன் இது. நான் சொல்வது என்ன
வென்றால், திரு. ஈ.எம்.எஸ். அறிக்கையில் உயிரான அம்சத்தை
மறைத்து, அதன் இதயப் பகுதியையே எடுத்துவிட்டு, திரு. பால
சுப்பிரமணியம் இப்படி 'கோட்' பண்ணியது சரியல்ல என்று
மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, மைய அரசுடன்
எங்களுடைய கொள்கைப் பிரச்னைக்குப் பிரச்னை, ஆதரவு,
எதிர்ப்பு என்பது அல்ல. அதன் அடிப்படையான கொள்கை
களை எதிர்த்து மறுப்பது என்பதுதான் ஏ.டி.எம்.கே. அரசின்
கொள்கையா? எங்களுடைய கொள்கை எதிர்த்து மறுப்பது.
இது எங்களுடைய 'பொசிஷன்'. இது ஏ.டி.எம்.கே. சர்க்கா





ரின் கொள்கையா என்பது எனக்குத் தெரிய வேண்டும். இல்லை
யென்பது எங்களுடைய கருத்து. (குறுக்கீடு) நான் அதைச்
சொல்கிறேன். சும்மா சொல்வேனா? 'அத்தாரிட்டேரியனி
சம்' வளர்ப்பது மைய அரசின் கொள்கை —அதை ஆதரிப்பது
இந்த அரசின் கொள்கை —இப்போழுதுநான் தற்பொழுது சொல்
கிறேன். அதை எதிர்ப்பது எங்கள் கொள்கை.

ஏகாதிபத்திய முதலாளித்துவம் வளர்ப்பது என்பது மைய
அரசின் கொள்கை. அதன்படி 20 ஏகாதிபத்திய குடும்பங்களின்
சொத்து, பார்லிமெண்டில் வைத்த கணக்குப்படி —1972-ல் அவர்
களுடைய சொத்து ரூ. 2,902 கோடி; 1981-லே
8,987 கோடி. அதிலே டி.வி.எஸ். 1972-லே ரூ. 60 கோடி;
1981-ல் ரூ. 226 கோடி. அசோக் லேலண்ட், 1972-லே ரூ. 29
கோடி; 1981-லே ரூ. 252 கோடி. இந்த ஏகாதிபத்திய திமிங்கி
லங்களைத்தான் அலிபாபா கதையில் வரும் 40 திருடர்கள் என்று
மறைந்த மதிப்பிற்குரிய சி.என்.ஏ. அவர்கள் நன்றாக வர்ணித்
தார். அந்த ஏகாதிபத்திய திமிங்கிலங்களை வளர்ப்பது என்
பது மைய அரசின் கொள்கை. இந்தக் கொள்கையை மாநில
அரசு ஆதரிக்கிறது என்பது எங்களுடைய கருத்து. இதை
நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

பன்னாட்டு மூலதனத்தை நம் நாட்டிற்கு அழைத்து நாட்
டைச் சுரண்ட வைப்பது மைய அரசின் கொள்கை. அந்தக்
கொள்கையை நீங்கள் ஆதரிக்கிறீர்கள், எதிர்க்கவில்லை; நாங்
கள் எதிர்க்கிறோம்.

நம் நாட்டில் அரசு நிர்ணயிக்கும் விலைகளை உயர்த்த
வேண்டும், ஏழை நடுத்தர மக்களுக்குப் பொது விநியோக முறை
யில் கொடுக்கும் மானியங்களைக் குறைக்க வேண்டும். மைய
பட்ஜெட் யோசனைகளை நாடாளு மன்றத்தில் வைப்பதற்கு
முன் தங்களிடம் காட்ட வேண்டும், தங்களை கன்சல்ட் பண்ண
வேண்டுமென்று நமது சாவரின் உரிமைகளை அடகு வைக்கும்
ஐ.எம்.எப். அக்ரிமென்ட்டை மைய அரசு ஆதரித்து சைன்
பண்ணியது. அதை நீங்கள் ஆதரித்தீர்கள். பார்லிமெண்டில்
புஃல்லாக, இரண்டுதரம் ஆதரித்தீர்கள். நாங்கள் அதைக் கடுமை
யாக அன்றைக்கும் எதிர்த்தோம். இன்றைக்கும் எதிர்ப்போம்.
விளைவு, இன்றைக்கு ஜனங்கள் அனுபவிப்பதைப் பார்த்து உண்
மையிலே, எங்களுக்கு மனம் கொந்தளிக்கிறது.

நிலச் சீர்திருத்தச் சட்டங்களை இயற்றி, அவற்றை அமுல்
படுத்தாமல் நிலப் பிரபுக்களை ஆதரிப்பது மையரசின் கொள்கை.
அதே கொள்கையைக் கையாண்டு நிலப் பிரபுக்களை நீங்களும்
ஆதரிக்கிறீர்கள். சட்டங்களைக் கொண்டு வருகிறார்கள்.
Nothing is implemented. They go on,

[திரு. ரா. உமாநாத்] [1983 நவம்பர் 16

அதனால் நாங்கள் அதை எதிர்க்கிறோம். ஆகவே, நல்ல திட்டங்களை எதிர்ப்பது, ஆதரிப்பது என்பது அல்ல. மைய அரசின் அடிப்படைக் கொள்கைகளை எதிர்ப்பது, எங்கள் கொள்கை. கண்மூடி ஆதரிப்பது உங்களுடைய கொள்கை. நான் சொல்லியிருப்பது அடிப்படை கொள்கைகளைப் பற்றியது.

(பிற்பகல் 12-10)

அரிசனங்களுக்கு உயர்த்தப்பட்ட குறைந்தபட்ச கூலி கிடைப்பதாக ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூறினார்கள். நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட பேசுகிற போது அதைக் குறிப்பிட்டார். என்னிடத்தில் ஒரு டாக்குமென்டை வைத்திருக்கிறேன். அரிசனங்களுக்கும், மலை ஜாதி மக்களுக்கும் இருக்கிற திட்டங்களை ஆய்வு செய்த ரீஜினல் ஷெட்யூல்ட் கேஸ்ட்ஸ் மற்றும் ஷெட்யூல்ட் ட்ரைப் கமிஷனர் அவர்களுடைய ரிப்போர்ட். சென்ட்ரல் கவர்ன்மென்டில ஹோம் மினிஸ்ட்ரியின் கீழ் இருக்கிறார் அந்த கமிஷனர். சென்ட்ரல் ஒன்று இருக்கிறது ரீஜினல் ஒன்று இருக்கிறது. நவம்பர் மாதம் 1982 ஆம் ஆண்டிற்கு தமிழக அரிசனங்களைப் பற்றியது. அந்த ரிப்போர்ட்டிலே தமிழகத்திலே அரிசனங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் பற்றி என்ன கூறுகிறது? பக்கம் 23-ல் இருப்பதை கோட் செய்கிறேன். சில வடக்கத்திய மாநிலங்களோடு ஒப்பிடுகிற போது அரிசனங்கள் மீது நடத்திய கொடுமைகள் எண்ணிக்கை பெரியதாக இல்லாவிட்டாலும் நம்பர் அதை விட ஜாஸ்தியாக இல்லை. அதற்கு அடுத்து சொல்வதுதான் முக்கியம்—கொடுமைகளின் தீவிரத்தன்மை இன்டென்சிட்டி அப்படிப்பட்ட கொடுமைகளின் கோரத்தன்மை, கிராவிட்டி, தமிழகத்திலே மிகவும் பயங்கரமாக அலார்மிங்காக இருக்கிறது என்பது அந்த பெர்மெனென்ட் கமிஷனருடைய ரிப்போர்ட். ஆகவே அவர்கள் சட்டக்கூலி கொடுப்பதாக நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, எங்களிடத்திலே கம்ப்ளெயின்ட் இல்லை; எனக்கு தெரியவில்லை என்று கூறினார். நானே இந்தச் சட்டசபையிலே எத்தனையோ தடவைகள் சொல்லி இருக்கிறேன். உங்களுக்குத் தெரியும். சட்டக்கூலி கொடுப்பதில்லை; கேட்பவர்கள் ஒன்றுபட்டு வேலை நிறுத்தம் நடத்தினால், அதற்கு குறைச்சலான கூலிக்கு ஆட்களை கொண்டு வருகிறபோது போலீசை வைத்து குறைவான கூலியைத்தான் கொடுக்கிறார்கள்; இவர்களை எல்லாம் வெளியேற்றுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறேன். இப்போது நான் கோட் செய்த ரிப்போர்ட் என்ன சொல்கிறது என்றால், அவர்கள் டிஸ்ட்ரிக்ட்களில் போய் பார்த்திருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தில் சட்டக்கூலி கொடுக்காததற்கு எந்த ஒரு கேசும் போடப்படவில்லை என்று வருவாய்த் துறை அதிகாரிகள் கூறினார்கள் அடுத்ததாக திருச்சி மாவட்டத்தில் சட்டக்கூலி கொடுக்கவில்லை என்று



1983 நவம்பர் 16] [திரு. ரா. உமாநாத்]

தூவர கொடுக்கும் கூட—நானே இங்கே சொல்லியிருக்கிறேன். கமிஷனர் கன்பர்ம் செய்கிறார். ஒரு கேஸ் கூட போடவில்லை. அப்படி கம்ப்ளெயின்ட் வந்தால் டிபார்ட்மென்டில் என்ன செய்கிறார்கள் என்றால்—அது என்னுடைய அனுபவமும் கூட—பொதுவாக பிராதுகள் வந்தால் தாசில்தார்கள் அந்த இடத்திற்குப் போய் இருசாராரையும் கூட்டி வைத்து பேசி சட்டக்கூலி கொடு என்று சொல்லிவிட்டு போய் விடுவார்களாம். பிறகு உண்மையில் அந்தச் சட்டக்கூலியை கொடுக்கச் செய்ய எந்த விதமான பின் நடவடிக்கையும் எடுக்கமாட்டார்கள். இதுதான் பொசிஷன்.

அரசு வேலைகளில் 18 பெர்சன்ட் அவர்களுக்கு கொடுக்க வேண்டும். உங்களுக்குத் தெரியும். இட் இஸ் ஏ கான்ஸ்ட்டியூஷனல் புரவிஷன். தமிழ்நாட்டில் என்ன பொசிஷன் என்றால், 31—12—1981 முடிய அந்த ஆண்டில் 'ஏ' குரூப் ஆபிஷியல்ஸ் 10.4 சதவிகிதம் தான்; 'பி' குரூப் அபிஷியல்ஸ் 13.3 சத விகிதம்தான்; 'ஒ' குரூப், அதற்கு கீழே வருகிறவர்கள் 10.4 சத விகிதம்; 'டி' குரூப் 14.8 சத விகிதம் அவ்வளவுதான் ஆகவே 18 சத விகிதம் எங்கே இருக்கிறது? அடுத்து தமிழ்நாடு அரசு நிறுவனங்களுடைய 1980ம் ஆண்டின் பொசிஷன் 'ஏ' குரூப் 3 சத விகிதம், 'பி' குரூப் 6 சத விகிதம்; 'சி' குரூப் 9 சத விகிதம்; 'டி' குரூப் 12 சத விகிதம் ஏ அண்ட் பி ஆபீசர்ஸ் அவர்கள் 9 சத விகிதம் கூட எட்டவில்லை; யாருமே 18 சத விகிதம் எட்டவில்லை: ஆகவே இந்தமாதிரியான நிலைமை தான் இருக்கிறது; நான் ஆத்தென்டிகேடட் டாக்குமென்ட்ஸை வைத்துதான் பேசுகிறேன். இட் இஸ் பார் தி ஸ்டேட் கவர்ன்மென்ட் டு எக்ஸ்ப்ளெயின் தி பொசிஷன்.

அடுத்தபடியாக தொழிலாளர் கொள்கை சம்பந்தமாக நான் கூறியதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டாம்கோ ஒப்பந்தத்தில் டி.சி.எல். போட மறுத்ததற்கு காரணம் சொன்னார்கள். அதாவது பஞ்சப்படி படிப்படியாக குறைந்ததினால் குசேலர் ஆட்சேபித்தார். டி.சி.எல்.,க்கு ஒப்பந்தம் என்று போட்டால்தான் கையெழுத்து போடுவார் லீகல் பொசிஷன் அது அவருக்கு நியாயமாகப்படவில்லை; ஆகவே கையெழுத்து போடவில்லை. ஆனால் குசேலர் அடுத்த ஊதிய ஒப்பந்தத்தில் பஞ்சப்படி உச்சவரம்பை பரிசீலிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த ஒரு ஷரத்து இருக்கிறது. ஆகவே பேச்சுவார்த்தை வந்தபோது, மானேஜ்மென்ட் சீலிங் வைக்க வேண்டுமென்று வாதாடினார்கள். சி.ஐ.டி.யூ. ரெப்யூஸ் பண்ணினார்கள். உங்களுடைய டி.சி.எல். சி.ஐ.டி.யூ. குசேலர் யூனியன் ஸ்டாப் யூனியன் மூன்றையும் அழைத்தார்கள். மூன்றிலே இரண்டு பேர்கள் வரவில்லை. சி.ஐ.டி.யூ. போனது; கோரிக்கை இல்லையென்று இரண்டு சங்கங்கள் எங்களுக்கு

[திரு. ரா. உமாநாத்] [1983 நவம்பர் 16

வரவில்லை. எங்களுக்கு சார்ட்டர் ஆப் டிமான்ஸ்ஸே இல்லை என்று சொல்லிவிட்டது. ஆனால் சி.ஐ.டி.யூ. அங்கே வந்தது. அங்கே வந்தபொழுது செல்லதுரை அவர்கள்தான் டி.சி.எல்., அவர்கள் முன்னால் கன்சிலியேஷன் நடந்தது. நாங்கள், குசேலர் ஷரத்துப்படி பஞ்சப்படி உச்சவரம்பை ஏற்கமுடியாது என்று சொன்னோம். இதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கவனிக்க வேண்டியது. டி.சி.எல்.-க்கு நியாயமாகப் பட்டால்,

He will sign the conciliation it is a legal position அதிலேயும் மெஜாரிட்டி பார்க்க வேண்டுமென்றிருக்கிறது. டி..சி எல். தான் இந்த யோசனையைக் கொடுத்தார். என்ன யோசனை இந்த சீலிங் வேண்டாம். இந்தக் கம்பெனியிலே தற்போதைய பஞ்சப்படி ரேட்டில் குறைந்தபட்சமே பஞ்சப்படி மட்டும், 1,028 ரூபாய் டீயர்னெஸ் அலவன்ஸ் மட்டும். அதிகபட்சம் இப்பொழுது இருக்கக்கூடிய ரேட்டிலே 1,972 ரூபாய். இது சென்னையிலேயே அதிகப்படியான டீயர்னெஸ் அலவன்ஸ் என்று டி.சி.எல். சொன்னார். ஆகவே, உச்சவரம்பு வேண்டாம் ஆனால் அந்தப் புள்ளிக்கு இருக்கக்கூடிய அந்த பைசாக்கணக்கு இருக்கிறதே அதை அப்படியே விட்டுவிட்டுப் போனால் இந்த ரீஜன் பூரா அப்செட் ஆகும். ஆகவே ஒரு குறிப்பிட்ட புள்ளியை எட்டிய பிறகு புள்ளிக்கு ரேட் சற்றுக் குறைப்போம். இதைச் சொன்னது யார்? டி..சி.எல். அவர்கள் அவருக்கு அது நியாயம் என்று பட்டதால்தனே அவர் அந்த யோசனையைச் சொன்னார் இல்லையென்றால் இந்த ரீஜனுடைய ஹையஸ்ட் டி. ஏ நீங்கள் தான் பெறுகிறீர்கள். அப்படி என்று அவர் வைத்த யோசனையை நாங்களும் ஏற்றுக்கொண்டோம். ஏன் என்றால் செட்டில்மென்ட் ஆக வேண்டுமென்று. சீலிங் இல்லையென்றால் ஒரு குறிப்பிட்ட ரேட் பிறகு குறிப்பிட்ட நிலையை அடைந்தவுடன் அந்த ரேட் கொஞ்சம் குறையும். ஆனால் இன்னும் அந்தப் புள்ளி ஏறினால் அந்த ரேட்படி அதிகமான பணம் கிடைத்துக்கொண்டே வரும். அதை இரண்டுபேர்களும் ஏற்றுக்கொண்டவுடனே அவரும் கங்கிராஜுலேட் பண்ணினார். அது நியாயமானது என்பதால் தான் டி.சி.எல். கையெழுத்துப் போடத் தயாராக இருந்தார். ஆனால் அமைச்சர்தான் தடுத்தார். இதனால்தான் கன்சிலியேஷன் மெஷினரி தகர்ந்து விட்டது என்று நான் ஒரு பார்முலேட் பண்ணினேன். அது ஒரு லேட்டஸ்ட் இன்சிடென்ஸ்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதில் உண்மையான நிலையை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 'டாம்கோ' வில் இந்த உண்மையான நிலையைப்பற்றி டி.சி.எல். அவர்கள் 7—11—1983 அன்று திரு. சிந்தன் அவர்களுக்கு எழுதியிருக்கிறார்கள்.



1983 நவம்பர் 16] [திரு எஸ். இராகவானந்தம்]

அங்கேயிருக்கின்ற பிரச்னை, ஒரு யூனியன்தான் இருக்கிறது நான் தலைவர் என்று திரு. குசேலர் சொல்கிறார், நான் தலைவர் என்று திரு. சிந்தன் சொல்கிறார். அங்கே யார் தலைவர் என்று முடிவெடுத்துக் கொள்ள வேண்டியது சிவில் கூட்டே தவிர டிரேட் யூனியன் ரிஜிஸ்தார் அல்ல. அதுவொரு பிரச்சனை.

இரண்டாவது பிரச்னை என்னவென்றால், முதலாளி யாரையும் கூப்பிட்டுப் பேசத் தயாராக இல்லை. ஆனால் கன்சிலியேஷன் ஆபீசருக்கு முன்னால் பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன் என்று சொல்கிறார்கள். எனவே, கன்சிலியேஷன் மெஷினரி யார் விரோதமும் வேண்டாமென்று இருவரையும் கூப்பிட்டார்கள். திரு. குசேலர் அவர்கள் நான் வரமாட்டேன் என்று சொன்னது உண்மை. திரு. சிந்தன் அவர்கள் உட் கார்ந்து பேசினார்கள். டி.சி.எல். சொன்ன யோசனை அல்ல; முதலாளியும் தொழிலாளர் பிரதிநிதிகளும் சேர்ந்து பேசியது, பஞ்சப்படிக்கு ஒரு உச்சவரம்பு 2,100 ரூபாய் என்பதுஎன்னுடைய ஞாபகம், அதற்கு மேல் உச்சவரம்பு வைத்தும் திரு. உமாநாத் அவர்களே சொன்னதைப்போல மேலே போகப்போக பஞ்சப்படி தொகையும், டேப்பரிங்காக குறையும்படியாகப் போட்டிருக்கக் கூடிய ஒரு ஏற்பாட்டை இரண்டு பேரும் ஒத்துக்கொண்டார்கள் திரு. சிந்தன் அவர்களும், முதலாளி அவர்களும்.

இதைத் தெரிந்தபிறகு திரு. குசேலர் அவர்கள் கடிதம் மூலமாக எழுதி அங்கே குறைந்தபட்சம் என்று இருந்தாலும் அதிகபட்சம் 3,500 வரையில் என்று பஞ்சப்படி வருகிறது. பஞ்சப்படிக்கு உச்சவரம்புக்கு நாங்கள் ஒத்துக் கொள்ள மாட் டோம், இந்த ஒப்பந்தத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது அதில் மேலே போகப்போகப் பஞ்சப்படி குறைகிறது என்று ஒரு கடிதம் எழுதி, இந்த ஒப்பந்தத்தில் நாங்கள் கையெழுத்து போட மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள்.

இதைப்போல, ஸ்டாப் யூனியன் தலைவர், அவருடைய பெயர் ஞாபகம் வரவில்லை, அவர் அட்வகேட் என்பது உங்களுக்குத் தெரியும். அவர் எழுதியிருக்கிறார், இதை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம், தொழிலாளர்களைப் பாதிக்கும் என்று.

சி. ஐ. டி. யூ. ஏற்றுக்கொண்டது, பஞ்சப்படிக்கு உச்சவரம்பு வைக்கிறது என்று சொல்லி,

ஆனால் இரண்டு யூனியன்கள் எதிர்த்து விட்ட காரணத்தால் கையெழுத்துப் போட்டு, 12 (3) செட்டில்மெண்டில் கையெழுத்துப் போடுவது என்றால் The Offic:rs should be convinced that it is a fair and reasonable judgement.

என்று சுப்ரீம் கோர்ட் சொல்லியிருப்பதாலும், பஞ்சப்படிக்கு உச்சவரம்பு இருக்கின்ற காரணத்தாலும், போகப்போகக் குறைகிறது என்பதாலும் நாங்கள் இதில் 12 (3) செட்டில் மெண்ட் போட்டுக் கொள்ள முடியாது. ஆனால் நீங்கள் இந்த நியாயம் என்று கருதினால் உங்களில் யார் அதை ஏற்றுக் கொள்ளவில்லையோ அவர்கள் மீது திணிப்பதற்காக 12 (3) செட்டில்மெண்ட் போடுவது என்பது சரியாக வராது.

எனவே, உங்கள் கொள்கையை ஏற்றுக் கொள்ளக் கூடியவர் கள் ஏற்றுக் கொள்ளும்படி 18 (1) செட்டில் மெண்ட்டை நீங் களும் முதலாளியும் நேரடியாகப் போட்டுக் கொள்ளலாம் என்று கடிதமே 1983 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 7 ஆம் நாளில் உங்கள் சங்கத்திற்கு எழுதப்பட்டிருக்கிறது Industrial Disput s Act

எனவே, நான் சொல்வது, நீங்கள் அந்த ஒப்பந்தம் சரி யென்று நினைத்தீர்களானால் சி. ஐ. டி. யூ. சங்கம் என்று சொல்லக்கூடிய திரு. சிந்தன் அவர்கள் தலைமையில் இருக்கக் கூடிய சங்கமும், முதலாளியும் 18 (1) செட்டில்மெண்ட் போட்டுக் கொண்டால் யார் யார் அதில் கையெழுத்துப் போடுகிறார்களோ அது அவர்களுக்குப் பொருந்தும்.

It is binding o: the parties to the contract

(பிற்பகல் 12.20)

அதில் நீங்கள் செய்வதற்குத் தடை இல்லை. ஆனால் யார் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று சொல்கிறார்களோ அவர்கள் மீது இந்த ஒப்பந்தத்தைத் திணிப்பதற்கு டி. சி. எல். கையெழுத்து போடு என்று சொன்னார் என்று அவரே கடிதத்தின் மூலமாக எழுதியிருக்கிறார். அந்த கடிதத்தின் நகல் என்னிடத் தில் இருக்கின்றது என்று எழுதி இருக்கிறார்கள்.

I cannot be a party to it I cannot sign the Settlement becaus : the other two parties have objected to the ceiling and tapering என்று எழுதி இருக்கிறார்கள். இதுதான் உண்மை. கடிதத்தின் நகல் இருக்கிறது. அரசு இதில் தலையிடவில்லை. அமைச் சரோ அல்லது வேறு யாரோ தலையிடவில்லை. சுப்ரீம் கோர்ட் டின் தீர்ப்பின் பிரகாரமே ஃபேர் அண்ட் ரீசனபின் என்று முடிவு எடுக்கக்கூடிய அதிகாரமே கன்சிலியேஷன் அதிகாரிக்குத்தான் இருக்கின்றது. அரசு தலையீடு இதில் இல்லை. பஞ்சப்படிக்கு உச்சவரம்பு வைப்பதை சி. ஐ. டி. யூ. எதிர்த்த காரணத்தால் கன்சிலியேஷன் மெஷினரி, அந்த ஆஃபிஸர் கையெழுத்துப் போடவில்லை.



136064



திரு. ரா. உமாநாத் : லெட்டர் அனுப்பி இருக்கின்றது என்பது சமீபத்தில் வந்தது. ஆனால் இதற்கு முன்பு எல்லாம் மறந்து அதற்குப் பிறகு முன்னூற்றிச் சொச்சம் பேர் களில் 273 ஓர்க்கர்ஸ் கையெழுத்திட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்து இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு தயவுசெய்து இதை 12 (3) ஆக ஆக்க வேண்டும் என்று கேட்டிருக் கிறார்கள். இப்போது டேப்பரிங் என்று சொன்னார்கள். ஆனால் டேப்பரிங் இல்லை. டேப்பரிங் என்றால் என்ன தெரியுமா? டேப் பரிங் என்று சொன்னால் ஒரு அளவிற்கு இருக்கும், அப்புறம் குறை யும், கடைசியிலே மிஞ்சுவது சீரோதான். அதாவது சைஃபர் தான். அப்படித்தான் முடியும். அதுதான் டேப்பரிங். எனவே அது டேப்பரிங் இல்லை. இருந்தது இதுதான். இவ்வளவு ரூபாய் வந்த பிறகு இன்னொரு குறைச்சல் ரேட். தொடர்ந்து எத் தனை புள்ளி ஏறினாலும் அந்த ரேட்படி அதிக ரூபாய் கொடுக்கப் பட்டே வரும். எனவே சீலிங் இல்லை. டேப்பரிங் இல்லை. இது தான் உண்மை. இதுதான் முதலாளியும் தொழிலாளியும் ஒத்துக் கொண்டது. பல கோணங்களில் டிஸ்கஸ் பண்ணப்பட்ட ஃபேக்ட்ஸை எடுத்துத்தான் நான் சொல்கிறேன். கன்சிலி யேஷன்போது மிஸ்டர் செல்லதுரை இந்த மூன்று கேள்வி களைக் கேட்டார்கள் அந்த மேனேஜ்மெண்டிடம். இரண்டு பேர் வரவில்லை. சரி. சி.ஐ.டி.யூ. யூனியனை அங்கீகரிக்கத் தயாரா என்று கேட்டார்கள். எழுத்து மூலமாக இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். சரி. சி.ஐ.டி.யூ. யூனியன்தான் மெஜாரிட்டி என்று ஒப்புக்கொள்கிறீர்களா என்று கேட்டதற்கு, அதற்கும் எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் 'ஆமாம்' என்று. சி.ஐ.டி.யூ யூனியனோடு 12 (3) செட்டில் மெண்ட் போடத் தயாரா என்று கேட்டதற்கும் எழுத்து மூலமாக 'தயார்' என்று கொடுத்திருக்கிறார்கள். ஒருக்கால் திரு. செல்ல துரை உங்களிடம் சொல்லவில்லையோ என்னவோ? ஆனால் ரெக்கார்டைப் பார்த்தால் தெரியும். 12 (3) போடத் தயார் என்று சொல்லிவிட்ட பிறகுதான் இந்த சீலிங்கை ஒப்புக் கொள்ளவில்லை என்கிறபோது இந்த ப்ரப்போஸலை நான் மீண்டும் வலியுறுத்தி இருக்கிறேன்.

The Supreme Courts Judgement has stated as follows :

The Conciliation Officer should sign the proposal which he considers fair and reasonable

என்று கூறியிருப்பது சரிதான். நாங்கள் சொல்வது கன்சிலி யேஷன் ஆபீஸர் கொடுத்த ப்ரப்போஸலை நாங்கள் ஏற்றுக் கொண்டது that is a fact அதற்கு மேலே நான் போகவில்லை. நீங்கள் நிறைவேற்றிய பல சட்டங்கள் பற்றிக் குறிப்பிட்டீர்கள்...(குறுக்கீடு)...... அடிக்கடி குறுக்கிடுவது என்றால்.... (குறுக்கீடு)... சர்க்கார் நிறைவேற்றிய பல சட்டங்களைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்று குறிப்பிட்டார்கள். நானும் அதுபற்றி குறிப் பிட்டேன் என்னுடைய பிரசங்கத்திலே. இவற்றை முதலாளிகள் மட்டுமல்ல. அரசுத் துறையிலே கூட அமல்படுத்துவதில்லை.

that is our chargeலி ஸ்டிலே ஏராளமான சட்டங்களைப் பாஸ் பண்ணிஇருக்கிறீர்கள். அதனால்தான் இந்தச் சட்டம் தப்பு என்று சொல்கிறீர்களா என்று கேட்டவுடன் நாளை சொல்கிறேன் என்று சொன்னீர்கள். நீங்கள் நிறைவேற்றியிருக்கிறீர்கள் என்று நானே லிஸ்ட் கொடுத்தேன். மினிமம் வேஜஸ் ஆக்ட் பற்றி நிறைய சட்டங்களை நிறைவேற்றி இருக்கிறீர்கள். ஆனால் அதன்படி கிடைப்பது இல்லை. அது அமல்படுத்தப்படுவதில்லை. முத லாளிகள் மட்டுமல்ல, நான் பேசுகின்றபோது நிறைய உதா ரணங்களைக் கொடுத்தேன். சர்க்கார் ஃபார்ம்ஸ்ல் கூட அந்த மினிமம் வேஜஸ் இல்லை. எந்தெந்த ஊரில் என்பது பற்றி என்னுடைய ஃபர்ஸ்ட் ஸ்பீசசிலே இருக்கின்றது. அப்படி அரசுத் துறையிலே கூட அது மீறப்படுகின்றது என்று சொல்கின்றபோது அரசு மௌனம் சாதிக்கின்றது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு....

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : இந்த மினிமம் வேஜஸ் என்பதைப் பொறுத்த வரைக்கும்

"The industry which is not in a position to pay the minimum wages has no right to exist"

என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு சொல்லி இருக்கின்றது. குறைந்த பட்சம் ஊதியம் கொடுத்தாக வேண்டும்; அப்படிக் கொடுக்க முடியாத நிறுவனம் இருக்கத் தேவையில்லை என்று சுபரீம் கோர்ட் சொல்லி இருக்கின்றது. என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமேயானால் லேபர் கோர்ட்டிலே செக்ஷன் 20-லே மனு போட்டால் பணம் தானாக வந்துவிடும். பணம் வரவில்லை என்று சொன்னால், கொடுக்க மாட்டேன் என்று சொல் வார்களேயானால், அரியர்ஸ் ஆஃப் லேன்ட் ரெவின்யூ ஆக்டின் கீழ் கலெக்ட் பண்ண முடியும். எனவே இப்படிப்பட்ட சட்டங் களை எல்லாம் அரசு கொண்டு வந்திருக்கின்றது. அவை செயல் படுத்தப்படவில்லை என்றால் மினிமம் வேஜஸ் ஆக்ட் செக்ஷன் 20-ஐ அட்வான்டேஜ் எடுத்துக் கொண்டு தொழிற் சங்கங்கள் இயங்கலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். அதாவது செக்ஷன் 20 ஆஃப் தி மினிமம் வேஜஸ் ஆக்ட்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதன் அர்த் தம் என்ன தெரியுமா? அரசு நிறுவனங்களிலே நாங்கள் மீறு கிறபோது நீங்கள் கோர்ட்டுக்குப் போங்கள். நாங்கள் மீறுவோம். அரசு நிறுவனம் மீறுவோம். அரசு கொண்டு வந்த சட்டத்தை நாங்கள் மீறுவோம், நீங்கள் கோர்ட்டுக்குப் போங்கள் என்பது தான் அர்த்தம். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்





தில் பிராக்டிகல் ஆஸ்பெக்ட் ஒன்றைக் கேட்கிறேன். லட்சக் கணக்கான விவசாயிகள் தொழிலாளிகளாக இருக்கிறார்கள். அவர் சொன்ன மாதிரி லேபர் கோர்ட்டுக்குப் போக முடியுமா? அப்படிப் போனால் பணம் கிடைக்குமா அவர்களுக்கு. இட் ஈஸ் நாட் எ பாயிண்ட். என்னுடைய குற்றச்சாட்டு என்னவென் றால், சட்டம் இருக்கிறது, நாங்கள் இல்லை என்று சொல்ல வில்லை. ஆனால் அது அமல்படுத்தப்படவில்லை. அந்த பெனிபிட்ஸ் தொழிலாளர்களுக்குக் கிடைக்கவில்லை. அதனால் தான் சொன் னேன், இது சர்க்கார் கழுத்தில் இருக்கும் மைனர் சங்கிலி என்று ஹ்யுமரஸ்ஸாகச் சொன்னேன். அதற்கு தாங்கள் பதில் கூற வில்லை. அதற்கு பதிலாக சட்டங்களின் பெயர் பட்டியலைப் படித்து இருக்கிறீர்கள். இது பதில் ஆகுமா என்று நான் கேட்கிறேன்.

அதே மாதிரி இந்த ஆண்டின் பெஸ்ட் ஜோக் திரு. விஸ்வ நாதன் அவர்கள பேசியதுதான். 'போராட்டம் நடத்தும் தொழிலாளர்கள் மீது மேற்கு வங்காளத்தில் ம்பாலீஸ் அடக்கு முறையாம். தமிழக அரசு வேலை நிறுத்தங்களை ஸ்மூத்தாக அனுமதிக்கிறதாம். குண்டாயிசம் இங்கே நடத்தவில்லை என்று' சவால் விட்டார். சவால் விடுகிறார்கள். நான் பழையதற்குப் போகவில்லை. ஏனெனில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள, ஏன் பழையதற்குப் போகிறீர்கள் என்று. ஏன் நான் லேடஸ்ட் 'கோட்' செய்தேனே. பி.டி.சி. பஸ் நெம்பர், ஜீப் நெம்பர் கொடுத்தேனே. டெப்போவில் போய் ஆளும் கட்சியைச் சேர்ந்த யூனியன் ஆட்கள் எங்களுடைய யூனியன் ஆட்களை அடிந்தார்கள். லேடஸ்ட் கொடுத்தேனே? போலீஸ் ஸ்டேஷனில் கம்ப்ளெயின்ட் செய்தபோது அவர்கள் ஸ்டேஷனுக் குள்ளேயே அடித்தார்களே, லேடஸ்ட் கொடுத்தேனே? கோர்ட்டிலே ஜாமீன் எடுக்கப் போனபோது கோர்ட்டிலேயே உதைத்தார்கள். லேடஸ்ட் கொடுத்தேனே? அதனால் தான் சொன்னேன் ஜோக் என்று. வெஸ்ட் பெங்காலில் மோச மாம். அதற்கு அவர் 'கோட்' செய்வதற்கு எடுத்துக்கொண்டது எது தெரியுமா? நியூஸ் டுடே. பரவாயில்லை. நியூஸ் டுடே மதுரை எடிஷன் க்ளோஸ் செய்து எத்தனையோ தொழிலாளர் களை வேலையை விட்டு நீக்கியது தான் இன்றைய நியூஸ் டுடே. ஆகவே தான் அதை அவர் ரிலை செய்வது பொருத்தமானது. ஆனால் வேலை நிறுத்தம் செய்யும் இடத்திற்கு (குறுக்கீடு) போலீஸ் போகக் கூடாது என்ற உத்தரவைப் போட்ட ஒரே அரசு மேற்கு வங்க அரசுதான் என்பதை நான் பெருமையோடு சொல்வேன். 6 ஆண்டுகளாக ஸ்ட்ரைக் எத்தனையோ நடந்தது, அதிலே ஒரு பயரிங் கூட நடக்கவில்லை. 1982 ஜனவரி 19-ம் தேதி இங்கே பயரிங் நடந்தது. அங்கே தொழிலாளர்கள் பாது காக்கப்பட்டார்கள். அந்த ஸ்ட்ரைக்கிலே என்.ஜி.ஒக்களுக்கு இன்டஸ்டிரியல் டிஸ்பியூட் ஆக்டிலே இருக்கும் ஸ்ட்ரைக் உரிமை வழங்கப்பட்டது. மேற்கு வங்க அரசின் பகிரங்க வெளியீட்டில்

[திரு. ரா. உமாநாத்] [1983 நவம்பர் 16

கூறியுள்ளதை நான் இங்கே 'கோட்' செய்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனமாகக் கேட்க வேண்டும். ஐ 'கோட்' 'அறுவடை காலத்தில் போலீஸ் பலமாகத் திரண்டு (போலீஸ் ஷுட் மொபிலைஸ்) குத்தகைதாரர்களுக்கும், விவசாயத் தொழிலாளிகளுக்கும், ஆதரவாகச் செயல்பட வேண்டும் என்று உத்தரவு போட்டுள்ளோம்'. கவர்ன்மென்ட் பப்ளிகேஷனில் வந்ததைச் சொல்கிறேன். அந்த மாதிரி அவர்கள் ஓபனாகப் பிரகடனப்படுத்தி இருக்கிறார்கள். இப்படி ஒரு உத்தரவை இந்த மாநில அரசு போடுமா ? போடாது. ஆகவே, நீங்கள் எங்களைப் பார்த்து சவால் விடாதீர்கள்.

டிஸ்பியூட்டை சால்வ் செய்வது கன்சிலியேஷன் அடிப்படையில் என்று சொன்னால், அதற்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு மீண்டும் கொண்டு வர விரும்புவது —டி.சி.எல். பதவி 4 காலி, பூர்த்தி செய்யவில்லை. ஏ.சி.எல். பதவி 6 காலி. பூர்த்தி செய்யவில்லை. லேபர் ஆபீசர்ஸ் பதவி 6 காலி. பூர்த்தி செய்யவில்லை. இப்படித் தான் இருக்கிறது லேபர் டிபார்ட்மென்ட் பொறுத்தவரைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த பப்ளிக் டிஸ்டிரிபியூஷன் சிஸ்டத்தைப் பொறுத்தவரைக்கும், இந்த வறட்சி நேரத்தில் பொது வினியோகம் முறை இங்கே தகர்ந்து இருக்கிறது என்று நான் இங்கே சொன்ன குற்றச்சாட்டுக்கு, தமிழகத்தில் நன்றாக அது நடைபெறுகிறது என்று சில ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூறினார்கள். அதற்கு அவர்கள் மைய அரசு நிதி அமைச்சர் தமிழக அரசுக்குக் கொடுத்த சர்ட்டிபிகேட்டை சுட்டிக்காட்டிப் பேசினார்கள். அதோடு மேற்கு வங்காளத்தில் முறைகேடாக நடைபெறுகிறது என்றும் திருப்பி விட்டார்கள். மேற்கு வங்கம் பெரிய பற்றாக்குறை மாநிலம். இரண்டு தரம் வெள்ளம், வறட்சி வந்திருக்கிறது. இருப்பினும் 15 ஐயிட்டங்கள் உண்மையிலேயே கொடுக்கிறார்கள். இங்கே கார்டிலேதான் இருக்கிறது. ஆனால் கொடுக்கப்படவில்லை. அங்கே உண்மையிலேயே கொடுக்கிறார்கள். ஃபேர் பிரைஸ் ஷாப்பிலே கொடுக்கிறார்கள். எலெக்ட் பஞ்சாயத்து டிஸ்டிரிபியூஷன் சிஸ்டத்தின் மூலம் கொடுக்கிறார்கள். அதனால் தான் இன்றைக்கு இரண்டு வறட்சி வந்த பிறகும் அங்கே ரைஸ் இலேர் ரூ. 3.40 பைசா என்ற விலைக்கு விற்கிறது.



1983 நவம்பர் 16]

(பிற்பகல் 12.30)

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் : இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்து விடுங்கள்.

திரு. ரா. உமாநாத் : ஐந்து நிமிடத்தில் முடிக்கமுடியாது.

I will finish. I won't take extra time.

ஜஸ்டிஃபிகேஷன் இருக்க வேண்டும் அல்லவா? மேற்கு வங்காளத்தில் வறட்சி நிவாரணம், பொது விநியோகம் செய்வது சரியாக நடைபெற்றிருக்கிறதா என்பதற்கு பிரணாப் முகர்ஜி அதாவது மத்திய சர்க்காரின் சர்ட்டிபிகேட்டை நம்பி நாங்கள் நிற்கவில்லை. அதற்கு பதிலாக நாங்கள் என்ன செய்தோம்? வறட்சி நிவாரணத்தையும் பொது விநியோகம் செய்வதையும் அனுபவிக்கும் மக்களை கேட்பது என்று முடிவு செய்து பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தினோம். அந்தப் பஞ்சாயத்துத் தேர்தலிலே பெட்டியை உடைத்துப் பார்த்த போது பஞ்சாயத்துக்களிலும், பஞ்சாயத்து சமிதிகளிலும், ஜில்லா பரிஷத்துகளிலும் எங்களுக்கும் லெப்ட் பிரண்டுக்கும் பெரும் மெஜாரிட்டி கிடைத்திருக்கிறது. எதற்காக கொடுத்திருக்கிறார்கள் ? வறட்சி நிவாரணமும் பொது விநியோகம் செய்வதும் ஒழுங்காக நடந்திருக்கிறது என்று மத்திய அரசு பிரணாப் முகர்ஜி அல்ல, அதை யூஸ் பண்ணும் மக்கள் சர்ட்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நீங்கள் பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தி மக்களிடம் சர்ட்டிபிகேட் வாங்க முன்வரமாட்டீர்கள். அநனால் மத்திய அரசு சர்ட்டிபிகேட்டை நம்பி இருக்கிறீர்கள் என்பது எங்களுடைய வாதம். சுப்ரீம் கோர்ட்டில் ஸ்டே இல்லை. பெப்ரவரி மாதம் வரும் என்று சொல்கிறீர்கள். பெப்ரவரி மாதம் என்றால் என்ன ? அன்றைக்கு பிரதமர் மத்திய சர்க்காரை அதாவது பார்லிமென்டை கலைத்தாலும் கலைத்துவிடுவார் என்று நாடு முழுவதும் பேச்சு அடிபடுகிறது. அப்படி என்றால் பஞ்சாயத்துத் தேர்தல் நடக்காது.

ஆனால் நான் சொல்வது ' யூ ஆர் ரிலையிங் ஆன் பிரணாப் முகர்ஜி சர்டிபிகேட், அப்படியானால் அதே மத்திய சர்க்கார் உங்கள் வறட்சி நிவாரண வேலையைப் பற்றி கூறிய எல்லாவற்றையும் நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். சமீபத்தில் பிரதமர் கிருஷ்ணா தண்ணீர் ஃபங்ஷனுக்கு வந்தபோது என்ன கூறினார் என்பது எல்லா பிரசிலும் வந்திருக்கிறது. நாட் எ சிங்கிள் பிரஸ். 1983-ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் நாள் அன்று வந்திருக்கிறது. தமிழக சர்க்கார் வறட்சி நிவாரண வேலைகளை விமர்சித்திருக்கிறார் ஸ்ரீமதி காந்தி சிறிதுகூட தயவு தாட்சணியம் காட்டாமல். அடுத்து, வறட்சி நிவாரணப் பணிகளுக்காக தமிழக சர்க்காருக்கு கூடுதல் நிதி கொடுக்கப் போகிறீர்களா

[திரு. ரா. உமாநாத்] [1983 நவம்பர் 16

என்று நிருபர் கேட்டார். அதற்கு பிரதமர் பதில். நாங்கள் கொடுத்த தொகையை முழுவதையும் தமிழக அரசு செலவு செய்து முடித்துவிட்டதா என்று சிடுசிடு என்று வேறு அர்த்தம் வரக்கூடிய முறையில் அந்த அம்மா பதில் சொல்லியிருக்கிறார். கடைசியில் வறட்சி நிவாரணங்களுக்குக் கொடுக்கப்படும் பணம் தமிழக அரசால் முறையாக செலவிடப்படுகிறதா என்றும் எந்த நோக்கத்திற்காக அது கொடுக்கப்படுகிறதோ அதற்கு உண்மையாகப் பயன்படுத்தப்படுகிறதா என்றும் மக்கள் கண்காணிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அதில் இருக்கிற அர்த்தம் வேறு.

It is being misused.

மிஸ் யூஸ் பண்ணுகிறார்கள். நீங்கள் ஜாக்கிரதையாக பாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், நீங்கள் பிரணாப் முகர்ஜியை கோட் பண்ணி சொன்னீர்கள். ஆனால் வறட்சி நிவாரண வேலைகளில் தமிழக அரசு லஞ்ச ஊழல் செய்கிறது என்று அந்த ஸ்டேட் மென்ட்டினுடைய இம்பிளிக்கேஷன் இருக்கிறது. நீங்கள் மத்திய சர்க்கார் சர்டிபிகேட்டை நம்பும் முடிவுக்கு வந்த பிறகுதான் பிரதமர் அப்போது பேசியதை நான் உங்களுக்கு சான்றாகச் சொல்கிறேன். இதை நான் சொல்லவில்லை; லாஜிக். அந்த லாஜிக்கை சொல்கிறேன் (சிரிப்பு) ஆக, வறட்சி நிவாரண வேலைகளில் பிளாக் பாயின்ட் இருக்கிறது.

எஞ்சினீயரிங் காலேஜ் இருக்கிறது. ஊழல் விஷயமாக சொல்கிறபோது மெடிக்கல் காலேஜ். புரொஃபஷனல் காலேஜ் பற்றி சீரியஸ் சார்ஜஸ் வந்திருக்கின்றன. அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொல்லவில்லை. என்பதை நான் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

விலைவாசி உயர்வு பற்றி நாங்கள் இரட்டை நிலை எடுத்திருப்பதாக ஆளும்கட்சி உறுப்பினர் இரண்டு பேர் சுட்டிக் காட்டினார்கள். விலைவாசி உயர்வுக்கு பிரதான காரணம் மத்திய அரசினுடைய நேரடியான விலை உயர்த்தும் கொள்கைதான். பெட்ரோல், டீசல், சிமின்ட் போன்றவைகளுக்கு நேரடியாக மானிட்டரி பாய்ன்ட்ஸ் அவர்கள்தான் ஃபிக்ஸ் பண்ண வேண்டும். உடனடியாக விலை உயர்த்தும் கொள்கை, பற்றாக் குறைபட்ஜெட் கொள்கை காகித நோட் அடிக்கும் கொள்கை, மக்கள் பயன் படுத்தும் பொருள்களுக்கு வரி போடும் கொள்கை, மொத்த வியாபாரத்தையும் ஜனங்களுக்கு வேண்டிய பொருள்கள் விநியோகத்தையும் மத்திய சர்க்கார் ஏற்பதை எடுக்காமல் இருக்கும் கொள்கை, இது போன்ற பல கொள்கைகள்தான் விலைவாசி உயர்வுக்கு பிரதான காரணம் என்பது எங்களுடைய நிலை. அன்றைக்கு இந்த நிலைதான், இன்றைக்கு இந்த நிலைதான்.



1983 நவம்பர் 16] [திரு. ரா. உமாநாத்]

அதே நேரத்தில் மத்திய அரசு அதிகாரத்திற்கு உட்பட்டும் சில பொறுப்புகள் இருக்கின்றன. பொது விநியோக முறையை ஒழுங்குபடுத்துவது, மொத்த வியாபாரிகளும் நிலப் பிரபுக்களும் செய்கின்ற முறைகேடுகளை தடுப்பது போன்ற நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்கலாம். நம்முடைய அவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள். மாதம் ஒரு லட்சம் டன் என்ற அளவில் நமக்குக் கிடைத்தால்தான் ஜனவரி வரையில் ஓட்ட முடியும் என்றஒரு சீரியஸ் பொசிஷனைச் சொன்னார்கள். இப்படிப்பட்ட எமர்ஜன்சி மெஷர்ஸ் என்று சொல்லும் போது பெரும் வியாபாரிகளும் நிலப் பிரபுக்களும் உணவு தானியங்களைக் கொண்டு வைத்திருக்கிறார்கள், கார்னர் பண்ணி வைத்திருக்கிறார்கள், அந்த ஸ்டாக்கை மாநில அரசு சட்டம் போட்டு எடுக்க முடியும். சிறு வியாபாரிகளைத் தொந்தரவு படுத்தாமல் அதனால் தான் மத்திய அரசினுடைய பொறுப்பு இப்படி இருக்கிறது. ஆனால் மாநில அரசிற்கு இந்த அளவிற்குப் பொறுப்பு இருக்கிறது. இரண்டையும் இன்றைக்கு இங்கே சொன்னது மட்டுமல்ல. 14 கட்சிகள் கூடி உருவாக்கிய கோரிக்கைகளுக்கு நாமே அமைத்திருக்கக் கூடிய அந்த கேம்ப்பைன் கமிட்டியிலே கூட மத்திய அரசையும், மாநில அரசையும் சேர்த்து கண்டித்துத்தான் கோரிக்கைகளை உருவாகினோம்.

We are very conscious of it

மத்திய அரசை எல்லாம் நாம் அப்படி விடப்போவதில்லை.

When we are basically different from them, why should we spare them we won't spare them.

எங்கள் குற்றச்சாட்டு என்ன? விலைவாசியை ஏற்றும் மத்திய அரசின் கொள்கையை எதிர்த்து போராட நீங்கள் அரசியல் காரணமாக முன்வரவில்லை. That is our charge விலைவாசி உயர்விற்கு நீங்கள்தான் காரணம் என்று சொல்லவில்லை. அந்தக் கோரிக்கையை எதிர்த்து சமீபத்தில் ஒரிசாவில் பந்த் நடந்தது. பீஹாரில் நடந்தது. கேரளாவில் மத்திய அரசையும், மாநில அரசையும் கண்டித்து ஒரு நாள் பந்த், ஒரு நாள் இரயில் நிறுத்தம் நடந்தது. ஏனென்றால் ஜனங்களுக்கு கஷ்டங்கள் ஜாஸ்தி. அதே காரணங்களுக்காக மேற்கு வங்கத்தில் செப்டம்பர் 28-லே மைய அரசை எதிர்த்து நடத்தப்பட்டது. ஆனால் தமிழக மக்களைப் பாதுகாக்க மத்திய அரசின் இந்த விலைவாசி உயர்வு கொள்கையை எதிர்த்து பந்த் நடத்த முன்வர மாநில அரசு மறுக்கிறது என்பது எங்களுடைய குற்றச்சாட்டு. பெரும் மொத்த வியாபாரிகளும், பெரும் நிலப்பிரபுக்களும் சேர்த்து வைத்து, ஸ்டாக்கில் வைக்கப்பட்டுள்ள பொருள்களை பறிமுதல் செய்து பொது விநியோகத்திற்கு சப்ளை பண்ண மாநில அரசு மறுக்கிறது என்பது எங்களுடைய குற்றச்சாட்டு.

[திரு. ரா. உமாநாத்] [1983 நவம்பர் 16

சமீபத்தில் 7 அனைத்து இந்திய கட்சிகள் டெல்லியில் கூடினார்கள். விலைவாசி உயர்வு போன்ற மக்கள் பிச்சனைகளை பேசினார்கள். பொலிட்டிகல் அலையன்ஸ் அல்லது எலக்‌ஷன்ஸ் பற்றி பேசவில்லை. மக்கள் பிரச்சனைகளை மட்டும் ஒன்றுபட்டு கிளர்ச்சி நடத்தி அவர்கள் முடிவு எடுத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை டிஸ்கஸ் பண்ணி கன்சுலேட் பண்ணுவதற்கு இ. எம். எஸ்.-ஐ. செகரட்டரியாக போட்டு ஒரு சப் கமிட்டி போட்டிருக்கிறார்கள். அனைத்திந்திய மக்களுடைய பிரச்சனையிலே Where C ntral Government is involved.

அதற்காக கூடியிருக்கிற அந்த கூட்டத்திலாவது அந்த ஜனங்களைப் பாதுகாக்கக் கூடிய மற்ற கொள்கைகளை உருவாக்குவதற்காகவாவது நீங்கள் கலந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறோம். ஆகவே விலைவாசி விஷயத்தில் நீங்கள் சொல்வதைப் போல நாங்கள் இரட்டை நிலையில் இல்லை. இரட்டை நிலை இந்த அரசாங்கம் தான் எடுத்தது என்று நான் சொல்கிறேன். ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த காலத்தில் ஒரு கவர்னர் உரை, அந்த கவர்னர் உரையிலே, அந்த காலத்திலே விலைவாசி குறைந்திருந்தது பல பொருள்களுக்கு. அப்போது அந்த உரையிலே என்ன சொல்லப்பட்டது என்றால், நாங்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக விலைவாசி தமிழகத்தில் குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். அப்போது நான் விவாதத்திற்குப் பதில் சொல்லும் போது சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இருந்தார். அவர் கூட இலேசாக ஸ்மைல் பண்ணினார். நான் ஏதோ தமாஷ் பண்ணுகிறேன் என்று எண்ணினார். அந்த விவாதத்தில் நான் எச்சரித்தேன். விலைவாசி விஷயத்தில் மாநில அரசு கொள்கை தான் என்று இன்று பொறுப்பு கொண்டால், நாளை விலை ஏறுகிற போது நீங்கள் பதில் சொல்லவேண்டி இருக்கும். நான் சொன்ன வேர்ட்ஸ் இதுதான். நீங்கள் உங்கள் விவாதத்தை நான் சொன்ன பிறகும் திருத்தவில்லை. நாங்கள்தான் பொறுப்பு என்று சொன்னார்கள். விளைவு என்ன? விலை குறைந்த பொழுது நாங்கள் தான் காரணம் என்று சொன்னீர்கள் இப்போது விலை எக்கச்சக்கமாக ஏறும்போது மத்தியஅரசு தான் காரணம் என்று சொல்கிறீர்கள். You on having double stan ard குறைந்தால் நாங்கள், ஏறினால் இந்திரா காந்தி என்கிறிர்கள் that won't b proper There must be connection and coordination உங்களுக்குள்ளே இருக்கக்கூடிய அதிகாரத்திற்கு உட்பட்டு செய்ய வேண்டியது நீங்கள்.



1983 நவம்பர் 16] [திரு. ரா. உமாநாத்]

Coordination is the main Policy of th: C ntral Gov. nment இப்பொழுது லா-அண்ட்-ஆர்டர் விஷயம். பொய் வழக்கு போடவில்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் சொல்கிறார். நான் உண்மையிலேயே சொல்கிறேன். விவசாயிகள் சட்டக் கூலி கேட்டு போராடிவார்கள். 307 தான் முதலிலே போடுகிறார்கள். உங்களுக்குத் தெரியவில்லை என்றால் ஃபாக்ட்ஸ்லை சொல்கிறேன். நமது முதலமைச்சருக்கு டிபார்ட்மெண்டிலிருந்து ஃபீட் பண்ணுகிறார்கள். நீங்கள் குடிசையிலே இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். நாங்கள் அதைவிட, குடிசைக்கும் குடிசைக்குள்ளே வேலை செய்கிறோம். அக்ரிகல்சுரல் லேபரர்ஸ். நாம் நிர்ணயித்த கூலியைக் கேட்டால் அவர்கள் பேரில் 307-கொலை முயற்சி-நம்முடைய தோழர்கள் நல்லவேலை செய்தார்கள். சில ஆனஸ்ட் எம். பி.க்களும் இருக்கிறார்கள். நான் எல்லோரையும் சொல்லவில்லை. நம்முடைய காம்ரேட்டுகள் ஃபாக்ட்ஸ்களை, ப்ரூப்களை காண்பிக்கிறார்கள். ஆனால் போட்டது 307. எப். ஐ. ஆர். உட்பட இருக்கிற உண்மையை காண்பித்து இது எப்படி 307 ஆகும் என்று கேட்டார்கள். அந்த எஸ். பி. ஒத்துக் கொண்டார். 307 கேஸ் அல்ல இது. அந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டரை கூப்பிட்டு அதை அடிக்கச் சொல்லி நீ என்ன எழுதியிருக்கிறாயோ அதற்கு செக்‌ஷன் போடு, என்று சொல்கிறார்.

This is not th average position

ஆகவே, இந்த மாதிரி பொய் கேஸ் சட்டம்-அமைதி குறித்து தினமும் பத்திரிகைகளில் ஏதாவது செய்தி வருகிறது. முகமூடிக் கொள்ளை. செயினைப் பிடுங்குவது. வீட்டில் பகலில் தனியாக இருக்கும் பெண்ணைக் கொன்று கொள்ளை அடிப்பது. குழந்தையைக் கடத்திச் செல்வது இப்படி. நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தாலும் மக்கள் மத்தியிலே ஒரு பீதி ஏற்பட்டிருக்கிறது என்பதை சர்க்கார் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

(பிற்பகல் 12.40)

டெய்லி பேப்பரிலேயே முன்னமே எப்பொழுதாவது ஒரு தரம் வரும். B t now it has b com a regular f a ur . ஆகவே பீதி இருக்கிறது. அதைச் சொன்னால் ஆளும் கட்சிக்காரர்கள் கூறுகிறார்கள். ஜோதிபாசு அவர்களே கூறினார், கோட் பண்ணினார் பாலசுப்பிரமணியம் அவர்கள் ரைட். மக்கள் ஒத்துழைப்புடன்தான் குற்றங்களைக் குறைக்கமுடியும். ஏன், என்றால் இன்றைக்கு இருக்கிற, சோசியல், எக்கனாமிக்ஸ் சமுதாயத்திலே இந்தக் கிரைம்ஸ் எல்லாம் அதிகம்தான். வெறும் போலீசை வைத்து டீல்

பண்ணமுடியாது. மக்களுடைய ஒத்துழைப்பு வேண்டுமென்று அவர்கள் கூறினார்கள். அது உண்மை. ஆனால் நான் சொல்வது மக்களுடைய ஒத்துழைப்பு பெற்று குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்கு என்ன செய்தீர்கள்? We have been suggesting எத்தனையோ சட்டசபையில். நீங்கள் டி. டி. சி. வைத்து இருக்கிறீர்கள் அல்லவா? மாவட்ட வாரியாக எஸ்.பி. லெவலிலேயே ஒரு ஆல்பார்ட்டி கமிட்டி என்று வைத்துக்கொள்ளுங்கள். அது பிரியாட்டிக்கலாக மீட் பண்ணினால் என்ன தவறு நடக்கிறது, நடக்கவில்லை என்பதைப் பற்றி ஒரு டிஸ்கசன் நடக்கும். it is not a public thing ஒரு கமிட்டி என்று வைத்துவிடுங்கள். இப்படிச் சொல்வதைக் கூட நீங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. இந்த லா அண்ட் ஆர்டர் விஷயத்தில், போலீசை வைத்து, தொழிலாளர்களையும், அரசு ஊழியர்களையும், பொதுமக்களையும் அவர்களுடைய இயகத்தையும் தாக்குவதற்காக நீங்கள் போலீசை உபயோகப்படுத்துகிறீர்கள். ஆகவே This is our charge. மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்கள் ஜோதி பாசு அவர்கள் சொன்னதை கோட் பண்ணியதாகச் சொன்னார்கள். குற்றங்களின் எண்ணிக்கை அதிகம் என்று. மேற்கு வங்கத்தில்தான் அதிகம் தமிழகத்தில் அதைவிடக் குறைவு என்று சொன்னார்கள். சரி, ஜோதிபாசு அவர்கள் கொட்டேசனை நம்பி. அதற்கு நன்றி. அதே ஜோதிபாசு எண்ணிக்கையைக் கொடுத்தார். பாப்புலேசன் ரேட் என்ன என்பதைக் கொடுக்கவில்லை. எண்ணிக்கை, நம்பர்தான் கொடுத்தார். சட்டசபையிலேதான் சொன்னார். லட்சத்திற்கு எத்தனை கிரைம்ஸ், எல்லா மாநிலங்களிலேயும் என்பதை அசெம்பிளியிலே கொடுத்தார்கள். வெஸ்ட் பெங்காளிலே பெர் லட்சம் பாப்புலேசன் 175.3, தமிழ்நாடு 184.0, உத்திரப் பிரதேசம் 187.2, இந்த மாதிரி நான் எல்லா மாநிலங்களுக்கும் கொடுத்தால் நேரம் அதிகமாகும். இந்தமாதிரி, 184, 179, 287, 394, 178, 246 என்று இப்படி வரிசையாக, லட்சத்திற்கு எத்தனை கிரைம்ஸ் இன்குளூடிங் மர்டர்ஸ். அது கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவும் ஜோதிபாசுதான் கொடுத்தார் (குறுக்கீடு). இது 1982-லே என்று நான் நினைக்கிறேன். சப்ஜக்ட் டு கரெக்ஷன். வெஸ்ட் பெங்கால் அசெம்பளியிலே ஜோதிபாசு அவர்கள் கொடுத்துள்ள பெர் லாக் பாபபுலேசன் கணக்கு இது. நீங்கள் கொடுத்த கணக்கு, எண்ணிக்கை. நான் சொல்வது பெர் லாக் பாப்புலேசன். ஆகவே ஒரு லட்சம் ஜனத்தொகைக்கு அதையெல்லாம் பார்த்தால், ரேட் ஆப் கிரைம் அந்தக் கணக்கின் அடிப்படையிலே பார்த்தால் இந்தியாவிலேயே மிகவும் குறைந்தது மேற்கு வங்கம்தான், This is also Assembly figures.





இந்தக் கணக்கைக் கொடுத்தது ஜோதிபாசு அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்கள் இந்தக் கணக்கை நம்புவார் என்று நம்புகிறேன். ஆகவே லா அண்ட் ஆர்டர் என்கிறபோது, வகுப்புக் கலவரம் அதுவும் பிரச்சினைதான். வகுப்புக் கலவரம் இல்லாத மாநிலம் மேற்கு வங்காளம். You can see 6 years என்ன பொசிசன் என்று, அது மாதிரி அரிசனக் கொடுமை. They are living peacefully with each other ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டு, அது தொழிலாளியாக இருந்தாலும், ஹரிஜன் அட்ரோசிட்டிஸ் என்பது கிடையாது. அதையெல்லாம் பார்த்துத்தான் லா அண்ட் ஆர்டர் பற்றிப் பேசினேன். ஆகவே இந்தமாதிரி இருக்கிறது நிலைமை.

அடுத்து வீட்டுக்கு ஒரு ஆள் வேலை என்பது உண்மையல்ல என்று நான் சொன்னேன். அதற்கு பதில் முதல் அமைச்சர் என்ன சொன்னார். காதி போர்ட், கோ-ஆப்பரேட்டிவ், பவர்லூம், போக்குவரத்துத் துறை தன்னிறைவுத் திட்டத்தில் தற்காலிக வேலைகள், சத்துணவுத் திட்டத்தில் கொடுக்கப்பட்ட வேலைகள்; பல்வேறு நிவாரண வேலைகள் இதையெல்லாம் போட்டுக் கூட்டி, டோட்டல் பண்ணி, 39 லட்சம் பேர்களுக்கு வேலை என்று சொன்னார்கள், நேற்று. இதுதான் வீட்டுக்கு ஒரு ஆள் வேலை திட்டம் என்று (குறுக்கீடு). நீங்கள் நேற்று சொல்கிறபோது அந்த ஸ்கீமின் அடிப்படையிலே படித்தீர்கள். அதைத்தான் நான் சொல்கிறேன். அந்த ஸ்கீம் அடிப்படையில் இவ்வளவு என்று சொன்னால், இது நார்மல் டெவலப்மென்ட்; எல்லா மாநிலங்களிலும் உள்ளது. இந்த மாதிரி ஒவ்வொரு மாநிலத்திலேயும், கூட்டியோ, குறைச்சலாகவோ நடக்கிறது. அதிலே வேலை செய்கிறார்கள். பார்ட்டைம் வேலை செய்கிறார்கள். 3 மாதம் செய்தபிறகு நிறுத்திவிடுகிறார்கள். எல்லா மாநிலத்திலேயும் இருக்கிறது. அப்படியானால் வீட்டுக்கு ஒரு ஆள் வேலை என்று நீங்கள் சொல்லவில்லை என்றால் நான் விட்டுவிடுகிறேன். ஆனால் எனக்கு அப்படிப் பட்டது. அதனால்தான் இது சரியானது அல்ல என்று நான் சொல்கிறேன்.

நேற்று கணக்குக் கொடுக்கிறபொது, எத்தனை லட்சம் பேர்கள் இந்த பீரியட்டிலே தமிழகத்திலே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்ற கணக்கை நீங்கள் கொடுத்து இருந்தால். That would have been a balanced position பொசிசனாக இருக்கும். நான் என்னுடைய பேச்சிலே சொல்லியிருக்கிறேன். நான் அதை ரிபிட் பண்ணப் போவதில்லை. ஏராளமானவர்கள் நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள். மின்சார வாரியத்திலே 80 ஆயிரத்தை 60 ஆயிரமாக்குவதற்கு அபிசியல் நோட்டே இருக்கிறது என்பதை எல்லாம் நான் சொல்லியிருக்கிறேன். ஆக, நான் அதை

ரிபிட் பண்ணவில்லை. அடுத்து தேர்தல் வாக்குறுதி.
விவசாயிகளுக்கு மேம்பாடு கொடுப்பதாக நீங்களே
சொன்னீர்கள். ஹை பவர் கமிட்டியை சுட்டிக் காட்டினீர்
கள். ஒன்றை கேட்கவிரும்புகிறேன். 11 பிரச்சினைகளை இந்த
ஹை பவர் கமிட்டிக்கு விட்டீர்கள், ரெக்கமென்டேஷன்
கொடுங்கள் என்று. இரண்டரை வருஷம் ஆயிற்று. இந்த
11 பிரச்சினைகளிலே ஒரு பிரச்சினையிலாவது உங்களிடம்
ரெக்கமண்டேஷன் வந்திருக்கிறதா? (குறுக்கீடு) அதை மட்டும்
கேட்டேன். விவசாயக் கடன் குறித்து மத்திய
அரசிடம் கேட்பேன் என்று தேர்தலிலே சொன்னீர்கள்.
நீங்கள் அப்படிச் சொன்னதை நானே மேடையிலே கேட்டேன்.
நீங்கள் மறுக்க மாட்டீர்கள். அன்றைக்கு நீங்கள்
எடுத்த ஸ்டேண்ட் அது. விவசாயக்கடனை ரத்து பண்ணிக்
கொடுக்கவில்லை, 5 வருஷங்களுக்குள் என்றால், நானே-
அரசாங்கமே-கொடுப்பேன் வங்கிக்கு என்று சொன்னீர்கள்.
ஹை பவர் கமிட்டி ஏகமனதாக, இந்தக் கடன் விஷயமாக
சிபாரிசு செய்தார்கள். ஆனால் அப்படி எதுவும் வரவே
யில்லை, கமிட்டியிலே எடுக்கவேயில்லை என்று தள்ளி
விட்டீர்கள்.

அதுபோலவே மின்சார கட்டணத்திற்கு ஒரு அக்ரி
மெண்ட் 1 பிளஸ் 1 என்று இருக்கிறது. அது நின்றுபோய்
விட்டது. அதை அமல் படுத்தவில்லை. விவசாயத் தொழி
லாளர்களுக்கு பென்ஷன் உண்டு என்று சொன்னீர்கள்.
ஆனால் இல்லை. முதியோர்களுக்கு (குறுக்கீடு) அநாதை
களுக்கு உண்டு என்று கணக்கையே காட்டினீர்கள் இந்தச்
சபையிலே கேள்வி நேரத்திலே. அதற்காக 1.99 லேக்ஸ்
(i.e.) Rs. 2 Lakhs கொடுக்கப்படுகிறது. அதிலே விவசாய
தொழிலாளிகள் 30 ஆயிரம் பேர்கள். நாம் கொடுத்த
வாக்குறுதி என்ன என்று சொன்னால், 60 வயது தாண்டிய
விவசாயத் தொழிலாளர்களுக்கு, வயதானவர்களுக்கு கொடுப்
போம் என்று. ஆனால் அது இல்லை. எனவே இந்த
விஷயத்தில் இதுதான் நான் சொல்லவிரும்பியது.

அடுத்து, என்றைக்கும் நாங்கள் தான் அதிகாரத்திற்கு
வருவோம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்.
சொல்வதற்கு உரிமை உண்டு. மறுப்பதற்கு எங்களுக்கு
உரிமை இல்லை. அப்படி எத்தனை தடவை வேண்டு
மானாலும் சொல்லலாம். அடித்துச் சொன்னார்கள்.
ஆனால் நாட்டிலே சரித்திரம் என்ற ஒன்று இருக்கிறது. That
also we must take into account சரித்திரம் எங்களுக்குப் பொருந்
தாது என்று சொன்னால் சொல்லுங்கள் ஐயா. நான் வேண்டாம்
என்று சொல்லவில்லை. நாட்டினுடைய சரித்திரம் ஏ. டி. எம்.
கேவுக்கு பொருந்தாது என்று சொன்னால், That is all right.
ஆனால் சரித்திரம் இருக்கிறது. கடந்த காலத்தில் இருந்த
பெரியவர்கள் எல்லாம் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள்.
திருமதி காந்தி கூறியிருக்கிறார்கள் (குறுக்கீடு). மறைந்த





தலைவர் காமராசர் கூறியிருக்கிறார்கள். படுத்துக் கொண்டே
ஜெயிப்பேன் என்று அவர் சொல்லியிருக்கிறார். பலரும்
கடந்த காலத்திலே நம் நாட்டிலே இப்படிச் சொல்லி
யிருக்கிறார்கள். காமராசர் அவர்கள் இப்படிச் சொன்ன
போது, எந்த தைரியத்தில் சொன்னார்கள் என்றால், பல
தொழிற்சாலைகளைக் கட்டியிருந்தார் அந்தப் பீரியட்லே
அவர். 11-வது வகுப்பு வரையிலும் எஜுகேஷன் ஃபிரி என்று
கொண்டு வந்திருந்தார். மதிய உணவுத் திட்டத்தையும்
அன்றைக்கு முதன் முதலாகக் கொண்டு வந்திருந்தார்.
லேண்ட் ரிஃபார்ம்ஸ் சம்மந்தமாக சில சட்டங்களையும்
பாஸ் பண்ணியிருந்தார். ஆகவே, அதிலே நம்பிக்கை
வைத்துக்கொண்டு படுத்துக் கொண்டே ஜெயிப்பேன் என்று
அவர்கள் சொன்னார்கள்.

ஆனால் இதைப் பொறுத்தமட்டில் முடிவு செய்ய
வேண்டியவர்கள் ஜனங்கள். ஜனங்கள் முடிவு செய்ய வேண்டிய
நிலை எப்போது வரும்? அப்படிப்பட்ட நிலை வரும் என்று
இந்திராவே எதிர் பார்க்கவில்லை. நேரு பரம்பரைக்
குடும்பத்தினுடைய தொகுதி அது. அதில் தோற்றார்.
நாங்களே நினைக்கவில்லை, அவர் டிஃபிட் ஆவார் என்று.
ஏனென்று சொன்னால், நீங்கள் எவ்வளவுதான் நிவாரணம்
கொடுத்தாலும், ஒரு லாங் பிரியட்டில் போகிறபோது,
தங்களுடைய அடிப்படையான பிரச்சினைகள் போகவில்லை
என்று வருத்தம் ஆரம்பித்து, அப்புறம் அது ஆத்திரமாக
மாறுகிறபோதுதான், பொசிஷனே தெரியும். அதற்குத்தான்
சொன்னேன், சரித்திரம் இருக்கிறது என்று. நீங்கள் தோற்றே
தீருவீர்கள் என்ற வாதத்தையும் நான் சொல்லவில்லை.
ஜெயித்தே தீருவீர்கள என்றும் சொல்லவில்லை.

I am just pointing out the history.

1977-லேயும் 1980-லேயும் தேர்தல்கள் நடைபெற்றன.
ஏ. டி. எம். கே. யினுடைய பொசிஷனை விளக்குவதற்காகச்
சொல்லுகிறேன். 1980- லே தேர்தல் நடந்தது. அப்போது
உங்களுடைய கையில் அரசு இயந்திரம் இல்லை.
You ar purely a Political Party அரசு இயந்திரம் இல்லை.
அது இல்லாமலேயே கூட்டணி மூலம் வெற்றி பெற்றீர்கள்.
ஆனால் திருச்செந்தூர் பை-எலக்ஷன் நடந்தபோது
அரசாங்கம் உங்கள் கையில் இருந்தது. அது ஒரு சின்ன
தொகுதி. அதில் நீங்கள் பல கூட்டங்களை நடத்தினீர்கள்.
அமைச்சர்கள் பூராவும், அரசு இயந்திரம் பூராவும் அங்கே
இருந்தது. ஜாதி போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. பல சங்கங்
கள் உங்களுக்கு ஆதரவு காட்டினார்கள். அதுபற்றி பெரிய
பெரிய போஸ்டர்கள் ஒட்டப்பட்டது. இவ்வளவு செய்ய
வேண்டியிருந்தது ஒரு சின்ன தொகுதிக்கு. You won in 1977.
In 1980 You won.

[திரு. ரா. உமாநாத்] [1983 நவம்பர் 16

அரசாங்க இயந்திரம் உங்கள் கையிலே இல்லாமலேயே
நீங்கள் வெற்றி பெற்றீர்கள் அப்போது. ஆனால் இப்போது,
அரசு உங்கள் கையிலே இருந்தாலும், அதனுடைய செல்வாக்கே
எங்களுக்கு வேண்டாம், பார்ட்டி என்ற முறையிலேயே
போவோம் என்று டெசிஷன் எடுக்காமல், இப்படிச் செய்ய
வேண்டிய அவசியம் என்ன? மனதிலே உங்களுக்கு கொஞ்சம்
சந்தேகம் இருக்கிறது. That is "our position is rot as b fore"
பெரிய குளத்திலே பார்த்திருப்பீர்கள். இன்னும் 6 தொகுதி
களிலே, ஜெயித்தவைகளிலே, பார்த்திருப்பீர்கள்.

(பிற்பகல் 12–50)

ஒரு தொகுதியிலே இரண்டாயிரம் ஓட்டு கம்மியாகிவிட்டது.
You have lost. ஆகவே அந்த மாதிரிச் சொல்கிறபோது நாம்
கொஞ்சம், என்ன வார்த்தையைப் பயன்படுத்துவது என்று
தெரியவில்லை, கொஞ்சம் சரித்திரத்தைப் பார்க்க வேண்டும்.

I do not want to go deep into it. Now I have come to the last.
சிறு தொழில்களை ஊக்குவிப்பது உங்கள் கொள்கை என்று
சொன்னீர்கள். மின்சாரம் பெரிய தொழில்களுக்குக் கொடுக்
கிறபோது 42.5 பைசாவுக்குக் கொடுக்கிறீர்கள். ஆனால் நீங்கள்
ஊக்குவிக்கிற சிறு தொழில்களுக்கு மின்சாரத்திற்கு 50 பைசா
சார்ஜ் பண்ணுகிறீர்கள். பின் தங்கிய பகுதிகளில் தொழில்
வளர்ச்சி என்று அறிவித்தீர்கள். புதுக்கோட்டை மாவட்டம்
இரண்டு அமைச்சர்கள் இருக்கிற இடம். அங்கே சிப்காட்டிற்கு
600 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ததாகச் சொன்னார்கள்.
நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன். அந்த இடத்திலே 5 கோடி ரூபாய் முதலீடு செய்தும்

Southern Hydro Carbon.

அது மூடப்பட்டிருக்கிறது. புதிய கெமிக்கல் பேக்டரி கட்டப்
பட்டது. அது துவக்கப்படாமல் அப்படியே நிற்கிறது. அங்கே
அரசுப் பண்ணையும் மூடப்பட்டது. ஆகவே பின்தங்கிய பகுதி
கள் என்பது அமைச்சர்களின் வெத்து வேட்டுத்தான். லேட்
டஸ்ட் ஆர்டர் ஒன்று வந்ததாக நான் அறிகிறேன். மாநிலத்திலே
9 இடங்களிலுள்ள சிப்காட் யூனிட்களை மூட உத்தரவிட்டிருக்
கிறது என்று அறிகிறேன். காகித ஆலைபற்றி—லஞ்சம் விஷயம்
கூறியபோது—நீங்கள் விளக்கம் கொடுத்திருக்கிறீர்கள்.

இவ்வளவு மூலதனமும் சர்க்கார் பைனான்ஸ் இன்ஸ்டிட்
யூஷன்களிலிருந்து ஸ்டேட் கவர்ன்மெண்டிலிருந்து தான் வரு
கிறது. அதனால் நாம் தனியாருடையது என்று கருத முடியாது.
முதலமைச்சருக்கு நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால்



1983 நவம்பர் 16] [திரு. ரா. உமாநாத்]

நம்முடைய நாட்டிலே பிர்லா உட்பட செய்யக்கூடிய பேட்டர்ன்
இதுதான். பிர்லாவின் பேக்டரி என்று நாம் சொல்லிக் கொண்
டிருக்கிறோம். ஆனால் அதன் பெரும் பகுதி பணம் மத்திய
அரசிடமிருந்தோ மாநில அரசிடமிருந்தோ பைனான்ஸாகப்
பெறப்பட்டதுதான். அதிலே பிர்லா பணம் ரொம்பக் கம்மி
யாகத்தான் இருக்கும். இன்டஸ்ட்ரீஸ் மினிஸ்டர் சென்னைக்கு
வந்தபோது ஒரு ஸ்டேட்மென்ட் கொடுத்தார். ஏன் பேக்டரிகள்
மூடப்படுகின்றன என்பதைப் பற்றி ரிசர்வ் பேங்க் ஒரு சர்வே
நடத்தியது. அப்படி சர்வே செய்ததில் எப்படி முதலாளிக்கு
சர்க்கார் கொடுத்த பணத்தை அவர்கள் தூக்கிக் கொண்டு
போய் வேறு லாபம் வரக் கூடியதில் போட்டு இதை மூடுகிறார்கள்
என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் மூடப்பட்டது 52
சதவீதம், தொழில் சர்ச்சையால் மூடப்பட்டது 2 சதவீதம்தான்.

நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால் நீங்கள் சொல்கிற
காரணம் இதற்குச் சரியாகாது. அதுதான் இந்தியாவிலே பேட்
டர்ன். நீங்கள் வேண்டுமானால் கணக்கைப் பாருங்கள். எனக்கு
ஆட்சேபணையில்லை. டாட்டா, பிர்லா பேக்டரி என்று நாம்
பெயர் சொல்லலாமே தவிர அவர்களுடைய பேக்டரி அல்ல
உண்மையிலே. நம்முடைய வங்கிகளிலிருந்து சென்ட்ரல் ஸ்டேட்
பேங்கிலிருந்து கொடுக்கப்பட்ட பணம்தான். அதை வைத்துக்
கொண்டு அதிலே வரக்கூடிய பணத்தைக் கொண்டு அப்படிச்
செய்கிறார்கள். அப்புறம் எப்படி கள்ளப் பணம் வருகிறது
பேக்டரியிலே? நீங்கள் கொடுத்த பணம் பூராவும் உங்களுக்கு
வருவதில்லை. அல்லது அதில் ஒரு பகுதி உங்களுக்கு வருவ
தில்லை. புரடக்ஷனிலே ஒரு கணிசமான பகுதியை வைத்துக்
கொண்டு அதை வெளியே விற்று அதனால் மொனோபொலியாகி
பிர்லா இவ்வளவு பெரிதாகி வெடிப்பார் என்ற நிலைக்கு
வந்திருக்கிறது. நீங்கள் சொன்ன காரணம் தனி காரணமாக
சொல்லி இருந்தால் நான் யோசித்து இருப்பேன். ஆனால் பொது
வாக எல்லா நிறுவனங்களும் சர்க்கார் பணத்தை எடுத்துத்தான்
இம்மாதிரி வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு பணத்தை
உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் ஒன்றை நான் கேட்க விரும்புகிறேன். திடீர் என்று,
ஆர்.டி.ஓ., எஸ்.ஐக்களை ஒரு காலத்தில் சுமார் 2 ஆண்டு
களுக்கு முன்பு சஸ்பெண்டு செய்து இருக்கிறார்கள். அதற்குப்
பிறகு அவர்கள் மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்.
அப்போது சொன்னார்கள் 6 மாதத்திற்கு மேல் அவர்களை
வைக்க முடியாது ஆகவே தொடர்ந்து ஆக்ஷன் எடுக்கிறோம்
என்று சொன்னார்கள். திரும்ப வேலை கொடுத்து ஆகிவிட்டது.
ஆம்னி பஸ் அனுமதி இல்லாமல் சர்க்காருக்கு போட்டியாக
அவர்கள் ரூட் பஸ்களை நைட் உட்பட விடுகிறார்கள்.

It should have been stoppd.

அதற்குப் பிறகு பார்த்தால் ஆம்னி பஸ்கள் அன்றைக்கு ஓடியதை விட அதிகமாக இன்றைக்கு ஓடுகிறது. நான் நைட்டில் எக்ஸ்பிரஸில் டிராவல் செய்கிறேன். எத்தனை ஆம்னி பஸ்கள்? அது மட்டும் அல்ல போன வாரம் நான் திருச்சிக்கு போவதற்காக அரசு எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் போனபோது எக்மோரில் பிளாக் ஆகியிருந்தது. ஏன் என்றால் 5 ஆம்னி பஸ்கள் ரோடில் நடுவில் நிற்கிறார்கள்.

The traffic was blocked. No action.

அப்போது நான் என்ன நினைக்க வேண்டியிருக்கிறது? அன்றைக்கு எடுத்த நடவடிக்கை ஏதோ ஒரு நோக்கத்திற்காக என்று நாங்கள் நினைக்க வேண்டியிருக்கிறது.

You have to explain.

மாண்புமிகு என்னுடைய மதிப்பிற்குரிய சி.என்.ஏ. அவர்கள் சொல்வார்கள் வேறு கான்டெக்ஸ்ட்டில், காட்ட வேண்டியதைக் காட்டி பெறவேண்டியதைப் பெறவேண்டும் என்று சொல்வார்கள். ஆம்னி பஸ் முதலாளிக்கு நடவடிக்கையைக் காட்ட வேண்டியதைக் காட்டி பெற வேண்டியதைப் பெற்று ஆகி விட்டது போல் தெரிகிறது. ஏன் என்றால் இந்த மாதிரி ஏராளமான பஸ்கள் ஓடுகிறது. அதனால் சொல்கிறேன். எனக்குத் தெரியாது. நீங்கள் கிளியர் செய்ய வேண்டும்.

இன்னும் ஒரு டெஸ்டு உங்களுக்கு வந்து விட்டது.

Nationalisation of buses.

என்று சொல்லும்போது சுப்ரீம் கோர்ட்டில் தடை இருந்தது. இப்போது அந்தத் தடை போய்விட்டது. ஆகவே அந்த தடை போன பிறகு அதனால் சிறு தொழில்கள் இவர்களைத் தவிர, உங்கள் கொள்கையின்படி டிரான்ஸ்போர்ட் நேஷனலைஸ் செய்யப் போகிறார்களா என்ன என்பதைப் பற்றி தெரிந்த பிறகு தான் உங்கள் நிலை என்ன, என்ன செய்தீர்கள், என்ன செய்யவில்லை என்பதை நான் சொல்ல முடியும். இதிலே முன்பு ஒரு டிஸ்கஷனில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் கேட்டார்கள் மேற்கு வங்கத்தில் நேஷனலைஸ் செய்தீர்களா என்று கேட்டார். இல்லை. மேற்கு வங்கத்தில் நாங்கள் முதலில் அதிகாரத்திற்கு வரும்போதே பஸ்களை நேஷனலைஸ் செய்யவில்லை. அப்போது நாங்கள் முடிவு செய்தோம். எங்கள் பார்ட்டியும், லெப்ட் பிராண்டும், வந்து இருக்கிறோம். சர்க்காருக்கு இருக்கிற ரிசோர்ஸை பணத்தை வைத்து எதற்கு பிரையாரிட்டி கொடுக்கலாம் முதலில். ஏன் என்றால் நேஷனலைஸ் செய்தால் அதற்காக



அவர்களுக்கு காம்பன்சேஷன் கொடுக்க வேண்டும். வந்த உடனே பிரையாரிட்டி எதற்கு கொடுக்க வேண்டும் என்கிற போது அரசு ரிசோர்ஸை வைத்துக் கொண்டு நாங்கள் முடிவு செய்தது, கிராமப்புற மக்கள், ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், அந்த பகிர்தார்கள் அதாவது குத்தகை விவசாயிகள் இவர்கள் போன்ற ஏராளமானவர்கள் இருக்கிறார்கள் அவர்களுக்கு எந்த பெனிபிட்டும் இல்லாத போஸிஷனில், நம்முடைய ரிசோர்ஸஸ் கணிசமான தொகையை முதல் பிரையரட்டியாக வந்த உடனே இதற்குக் கொடுபபோம் பிறகு மற்றதை பார்ப்போம். என்ற முறையில் செய்தோம். ஆனால் இங்கே அப்படி அல்ல, இங்கே இவர்கள் பொசிஷன் நேஷனலைஸ் ஆகி கம்ப்ளீட் நேஷனலைஸ்-நீலகிரி டிஸ்ட்டிரிக்ட்டை கஸ் செய் பிறகு ஹைகோர்ட்டுக்குப் போனது. இப்போது கேள்வி உங்கள் முன்னால் இருப்பது நீங்கள் இப்போது தடை நீங்கின பிறகு செய்யப் போகிறீர்களா என்பது. மாண்புமிகு விஸ்வநாதன் அவர்கள் ஒன்று சொன்னார்கள்.

Poverty breads Communism.

Sr. Communists want poverty to remain

அது அவர் சொந்த சரக்கு அல்ல. வறுமை கம்யூனிஸத்தைப் பெற்று எடுக்கிறது. ஆகவே என்றைக்கும் வறுமை இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதாவது அப்படித்தான் அவர் சொன்னதன் அர்த்தம். அவர் தலைக்கீழாக சொல்லியிருக்கிறார்கள்.

It is Capitalism that breeds poverty and unemployment and it is Communism which liquidates poverty and unemployment.

அதாவது நான் சொல்கிறேன் உண்மையிலேயே முதலாளித்துவம் தான் வறுமையை உண்டாக்குகிறது. அது தான் வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டாக்குகிறது. கம்யூனிஸம், சோஸலிசம் தான் அந்த பாவர்ட்டியை லிக்குயூடேட் பண்ணுவது, வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பது. கண்ணால் நாம் பார்க்கிறோம். ரஷியா போன்று இருக்கக் கூடிய சோசியலிஸ்ட் நாடுகளிலே நாம் அதை பார்க்கிறோம்.

It is the other way about.

அதனால் அந்த உண்மையான சாதாரண தொழிலாளிகளுக்கும், ஏழை மக்களுக்கும், விவசாயிகளுக்கும் தெரியக் கூடாது என்பதற்காக இன்றைக்கு சுரண்டும் வர்க்கம் உண்டாக்கிய சுலோகன் தான் இது.

Poverty breeds Communism or somthing like that.

அவர் சொன்னார். அது தான் அவர்கள் முதலாளிகள் உண்டாக்கியது. ஆகவே மாண்புமிகு விசுவநாதன் அவர்கள்

echoing capitalism.

என்று சொல்வது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

கடைசியாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் நமக்குள்ள உடன்பாடு தேர்தலில் ஏற்பட்டு எனக்கு 11 சீட்டு, 10 சீட்டு, அந்தப் பக்கம் சர்க்கார் என்ற நிலைமை ஏற்பட்டது. அது எல்லாம் சொல்லாமல் என்ன அர்த்தத்தில் பேசினார்கள் ஒன்று இரண்டு நண்பர்கள் மட்டும், நாங்கள் ஆதரவு கொடுத்து இங்கே வந்து எங்களை எதிர்க்கிறீர்களே அது சரிதானா? அதாவது என்ன வார்த்தை என்று சொல்லாமல், '' வளர்த்த கடா மார்பில் பாய்வதாக '' கூறிவிட்டார்கள் அந்த வார்த்தையை யூஸ் பண்ணவில்லை.

This is what he meant.

இதற்கு எங்கள் தலைவர் திரு. சங்கரய்யா பதில் சொல்லும் போது (குறுக்கீடு) '' வாட் இஸ் திஸ் '' இது கூட பேர் பண்ண முடியவில்லை.

This is debate.

அதை புரிந்து கொள்ள வேண்டும். அன்று திரு. இராமலிங்கம் அவர்கள் கருவாடு என்று பதில் சொன்னார்கள் நானும் சிரித்தேன், அனுமதித்து விட்டேன்.

That is debate.

நான் சொன்னேன், அவர் அதற்கு சொன்னார்.

That is debate. Let us have patience.

அதாவது '' வளர்த்த கடா '' மார்பில் பாய்வதாக.



(பிற்பகல் 1—00)

அதே வார்த்தைகளைத்தான் உள்ளடக்கி அதிலே கூறியிருக்கிறார்கள். அதற்கு எங்கள் தலைவர் திரு. சங்கரய்யா அன்றைக்கே பதில் சொன்னார். ஆனால், ஒன்றை நான் விளக்கிச் சொல்ல விரும்புகிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை, அ.தி.மு.க.தான் வளர்த்ததாகக் கூறி இருக்கிறீர்கள். நீங்கள் எங்களை வளர்க்கவில்லை.

It is not the AIADMK Party that has built the Marxist Party. AIADMK Party

பிறப்பதற்கு முன்னாலேயே மார்க்சிஸ்ட் பார்ட்டி இருக்கிறது.

Don't forget that.

நான் கேட்கிறேன், (குறுக்கீடு) ஒரு எம். எல். ஏ.தான் சக்தியா? மாண்புமிகு முதலமைச்சர் எத்தனை தடவைச் சொல்லியிருக்கிறார், பதவி போனாலும் கவலை இல்லை, நல்லது செய்வேன் என்று. இங்கே எத்தனை எம். எல். ஏக்கள் இருக்கிறீர்கள்' எப்படி கிடைத்தது என்றால், that's wrong, அதனாலே, ஏ. டி. எம். கே. மார்க்சிஸ்ட் கட்சியைக் கட்டியதா? நீங்கள் வளர்க்கவில்லை. தொழிலாள வர்க்கம் எங்களை வளர்த்தது; விவசாயி வர்க்கம் எங்களை வளர்த்தது; தூக்குமேடைக்குச் சென்று சிறையில் துப்பாக்கிப் பிரயோகத்தால்—சேலத்தில்—23 பேர்கள் செத்த, தலைமறைவுக் காலத்தில் மரத்தில் பிடித்துக் கட்டிவைத்து, மதுரையிலும், தஞ்சாவூரிலும் சுட்டுக் கொல்லப்பட்ட, சிறையில் உண்ணாவிரதம் இருந்து உயிர் இழந்த தாய் லட்சுமி, வெண்மணியில் உயிருடன் கொளுத்தப்பட்ட, கத்தியால் குத்தப்பட்டு கொல்லப்பட்ட, நமது சக்திவேல் போன்ற அநேக தியாகிகளால் எங்கள் கட்சி வளர்க்கப்பட்டது. உங்களால் அல்ல. ஆனால், வளர்த்த கடா பாயப் பார்ப்பது உண்மை. 1977-க்கு முன் அதிகாரம் இல்லாத ஒரு பார்ட்டி ஏ. டி. எம். கே. எங்களைப் போன்ற சிறு கட்சிகளிடம்—நாங்கள் மட்டுமல்ல, நான் சொல்கிறேன், அன்றைக்கு உடன்பாடு செய்திருக்கிற சிறு கட்சிகளிடம் இருக்கும் சிறு ஓட்டுக்களால்தான் ஓரளவு பெரும்பான்மை கிடைத்தது. அதுதான் பொசிஷன்.

Narrow Position. Close fight.

அதை நாங்கள் பல கட்சிகள் உங்களுக்குக் கொடுத்தோம். சிறு எண்ணிக்கைதான்.

The fight was also marginal.

[திரு. ரா. உமாநாத்] [1983 நவம்பர் 16

உங்களுடைய மெஜாரிட்டியும் சிறு மெஜாரிட்டிதான். ஒரு சிறு
பெரும்பான்மை அதிகச் சீட்டு பெற்றுத் தந்தது, எங்களது சிறு
ஓட்டுக்களால் அரசாங்கம் ஆக வளர்த்தோம். நீங்கள் சொல்
கிற பார்வை, அரசாங்கம் ஆக வளர்த்தோம். இப்படி அரசாங்க
மாக வளர்க்கப்பட்ட அ. தி. மு. க. அரசு கடாதான் இன்று
தொழிலாளி வர்க்கத்தின் மார்பில் பாய்கிறது ; விவசாயி மார்
பில் பாய்கிறது ; உழைப்பாளி வர்க்கத்தின் மார்பில் பாய்கிறது;
உங்கள் குத்தைத் தாங்கக்கூடிய சக்தி தமிழ் நாட்டுத் தொழி
லாளி வர்க்கத்திற்கு உண்டு. ஒரு நாள் நமது வர்க்கத்தின் மார்
பில்தான் அந்தக் கிடாவின் கொம்பு ஒடியப் போகிறது என்று
சொல்லி முடிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்பிக்கையில்லாத்
தீர்மானம் கொண்டு வந்த மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள்
என்னுடைய பேச்சைக் கேட்ட பிறகும், தன்னுடைய கருத்தை,
கட்சியின் சார்பாகவும், தன்னுடைய அனுபவத்தை மையமாகக்
கொண்டும், ஆதாரமாகக் கொண்டும், இங்கே எடுத்துச் சொல்லி
யிருக்கிறார்கள். ஆனால், சொன்ன கருத்துக்களில் பலவற்றை
நான் திரும்பச் சொல்லி நேரத்தை வீணடிக்காமல், அதிலே
முக்கியமானவைகளை நான் அவரோடு இணைந்துகொண்டு சில
பதில்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலில், இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்த
வளர்ச்சி நிவாரணப் பணிக்கு மத்திய அரசினுடைய பணம்—
அவர்கள் தருகின்ற பணம் எப்படி செலவு செய்யப்படுகிறது
என்று கவனிக்க வேண்டுமென்று சொன்ன வார்த்தையை எப்படி
நீங்கள் எடுத்துக் கொண்டீர்கள் என்று நான் இப்பொழுது விமர்
சனம் செய்யத் தயாராக இல்லை. ஆனால், அவர்கள் வேறு
ஒரு நிகழ்ச்சிக்கு வந்தபொழுது இங்கு பல இலட்சம் மக்கள் கூடி
யிருந்த கூட்டத்தில் என்ன சொன்னார்கள் என்பதை நினைவு
படுத்திக் கொள்ள வேண்டும். ''இந்த அரசு சரியான காரி
யத்தை சரியான நேரத்தில் செய்கிறது ; மக்களுக்குத் தேவை
யான அவசியமானவைகளை அவர்கள் திட்டம் போட்டு செய்ய
முனைகிறார்கள்'' என்று சொன்னதை இங்கு இந்த மன்றத்தில்
நினைவுபடுத்த விரும்புகிறேன். அதோடு நாங்கள் வறட்சிப்
பணிக்காக எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள், அதனால் ஏற்
பட்ட விளைவுகளை எல்லாம் சரியாக இருக்கின்றனவா, மேற்
கொண்டு உதவி செய்ய வேண்டுமா, வேண்டாமா என்று தெரிந்து
கொள்ள வந்தக் குழு பரிசீலனை செய்துவிட்டு, இந்த அரசையும்,
அதிகாரிகளையும் பாராட்டி, தேவையான அளவிற்கு பணத்தை
நியாயமாக செலவழித்திருக்கிறார்கள். மக்கள் பயன் பெற்றிருக்
கிறார்கள் என்பதை பத்திரிகைகளில் சொல்லி, தங்களுடைய



1983 நவம்பர் 16] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

குறிப்பை மத்திய அரசிற்கும் அனுப்பியிருக்கிறார்கள் என்பதை
யும் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
ஆனால், யாரால், யார் வளர்க்கப்பட்டார்கள் என்று பிரச்னை
வருகிறபோது, என்னுடைய பேச்சிலே குறிப்பிட்டதை மாண்புமிகு
உமாநாத் அவர்கள் மறந்துவிட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.
எங்கள் கட்சி தோன்றியபோது ஆதரித்த ஒரே கட்சி சி. பி. ஐ.
என்று சொன்னதை நான் பெருமையாகவே சொன்னேன் என்
பதையும், அந்தக் கட்சிதான் எங்களோடு முதலில் தொடர்பு
கொண்டிருந்தது என்று சொல்லும்போது நான் எந்த நிலையில்
சொன்னேன் என்பதை அவர்கள் சரியாக புரிந்துகொள்ளவில்லை
என்றே நான் நினைக்கிறேன். ஏனென்றால் எங்கள் கட்சி புதிய
கட்சி. ஒரு பழி சுமத்தாமல், கட்சி கட்டுப்பாட்டிற்கு உட்
படாத ஒருவன் என்ற நிலையில் வெளியேற்றப்பட்டபோது,
உண்மையிலேயே சொல்லப்போனால் எனக்காக ஒரு பிரிவை,
கூட்டத்தை அங்கே உருவாக்கிக் கொள்ளாத நான், நான் மட்டும்
வெளியே அனுப்பப்பட்ட அந்த நேரத்திலே ஒரு பெரிய கட்சி
அகில இந்திய கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, எங்களை ஆதரித்தது
என்பதைச் சொல்கிறபோது, நாங்கள் பெரியவர்கள் அல்ல, எங்
களை விட பெரியவர்கள் எங்களை ஆதரித்தார்கள் என்று
கருதினேனே தவிர நாங்கள் தான் பெரியவர்கள் என்ற எண்
ணம் எங்கள் உள்ளத்தில் இல்லை என்பதை இந்த மன்றத்திலே
குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் நாங்கள் தான் ஜெயிப்போம்
என்று சொல்வது, எங்களுடைய நம்பிக்கையே தவிர, மக்கள்
நிரூபித்து விட்டால் அதை ஏற்றுக்கொள்ளத்தான் போகிறோம்;
நான் முதலில் சொன்னேன், அண்ணா அவர்கள் தோற்கவில்
லையா? காமராசர் அவர்கள் தோற்கவில்லையா? பிறகு
அண்ணா அவர்கள் முதலமைச்சராக வரவில்லையா? என்று
கேட்டேன். அரசியல் கட்சிகளுக்கு இவைகள் எல்லாம் புதிய
தல்ல. தோல்வியும், வெற்றியும் எந்தப் போராட்டத்திலே
இறங்கினாலும் அது ஒருவர் பங்கு அல்ல என்பது வாக்கு. அந்த
நிலையில் நாங்கள் எங்களை தயார் படுத்தி வைத்துக் கொண்
டிருக்கிறோம். நாங்கள் பிப்ரவரி மாதம் தேர்தல் என்றால்
உடனே சொல்வீர்கள். மத்திய அரசு பார்லிமெண்ட்டை
கலைத்து விட்டால் என்ன செய்வது என்று கேட்கிறீர்கள்.
வேண்டாம், ஜனவரியிலே வைத்துக் கொள்வோம்.
நாங்கள் தயாராக இருக்கிறோம். நீங்கள் தேதியைக் குறிப்
பிடுங்கள். நாங்கள் சொன்னால் பிப்ரவரி மாதம் கடைசியில்
வைத்துக் கொள்வோம் என்றால் உடனே சொல்வீர்கள்
அவர்கள் கலைத்து விட்டால் என்ன செய்வது என்று ; வேண்
டாம், எல்லா தலைவர்களும் முடிவெடுத்துச் சொல்லுங்கள்.
நாங்கள் நடைமுறைப்படுத்துகிறோம். ஏன் சந்தேகப்பட வேண்
டும்? (குறுக்கீடு) இப்படி சொல்வது முறையாகாது? நீங்கள்
வெளியே சென்று நாங்கள் சொன்னோம்.. அவர்கள் கேட்க

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1984 நவம்பர் 16

இல்லை ; அவர்களாக வசதி பார்த்து வைத்துக் கொண்டார்கள்
ற நிலை வந்து விடக் கூடாது. ஆகவே எப்படி வேண்டு
மானாலும் அதை சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்று
சொல்லும்போது, வங்காளத்தில் மக்கள் தீர்ப்பு அளித்தார்கள்
என்று சொன்னீர்கள். அந்தத் தீர்ப்பு எங்களுக்கு பாதகமாக
இருந்தால் ஏற்றுக்கொள்கிறோம். ஆதரவாக இருந்தால் நாங்
கள் மகிழ்ச்சி கொள்ள மாட்டோம் ; பெருமை பட மாட்டோம்.
எங்கள் கடமை சரியாக இருக்கிறது என்று அதை மேலும்
சரியாகச்செய்ய, அதிகப்படுத்த; விரைவுப்படுத்த, அதை நாங்கள்
தொடர்ந்து செய்வோம் என்பதை இங்கே நான் சொல்லிக்
கொள்கிறேன். இன்னொரு குற்றச்சாட்டை சொன்னார்கள்.
காவல் துறையைப் பற்றி ; நான் மீண்டும் பழைய காரணங்
களை எல்லாம் சொல்லத் தயாராக இல்லை; வேண்டாம், நேரம்
வீணாகப் போகிறது. காவலர்கள் என்றால் சப்-இன்ஸ்பெக்டர்
களைப் பற்றி, சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களைப் பற்றி நமது
மாண்புமிகு உமாநாத் அவர்கள் கருத்தை எடுத்து வைத்தார்
களோ, அதைப்போல நான் சொல்கிறேன். யாராவது சில
காவலர்கள தவறு செய்யக்கூடியவர்களாக இருக்கக் கூடும்.
முதலிலேயே எல்லோரையும் கண்டுபிடிக்கவும் முடியாது ;
தண்டிக்கவும் முடியாது. இங்கே அதிகாரிகள் 18 சதவீதம் ஆதி
திராவிடர்களுக்கு இருக்க வேண்டிய இடத்தில் இப்போது
இல்லை ; அவர்களுக்கு ஒன்பது இடம் தான் கொடுக்கப்பட்
டிருக்கிறது என்று சொன்னால், நான் கேட்கிறேன், ஐ.ஏ.எஸ்.
ஆவது எப்போது ? எத்தனை ஆண்டுகள் ஒரு அதிகாரி பணி
செய்த பிறகு அவருக்கு ஐ.ஏ.எஸ். பதவி கிடைக்கிறது ? அப்
போது நாங்கள் 5, 6 ஆண்டுகளுக்குள்ளே முன்பு இருந்த 18
சதவீதத்தை குறைத்து விட்டோமா ?

[பிற்பகல் 1-10]

அல்லது இப்பொழுது அதிகப்படுத்தியிருக்கிறோமா என்
பதை மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் கொஞ்சம் கணக்கிட்
டுப் பார்க்க வேண்டும். நாங்கள் வரும்பொழுது ஒன்பது
சதவிகிதம் இல்லை. நான் ஒரு உத்தரவு போட்டிருக்கிறேன்.

எந்த இடம் காலியாயிருக்கிறதோ புதிதாக அந்த இடத்திற்கு
தகுதியுள்ள அரிசன் வருகின்ற வரையில் அதைக் காலியாகவே
வைத்திருங்கள் என்று கூட நான் உத்தரவிட்டு, சில சமயங்களில்
வேறு வழியில்லாமல் நடவடிக்கைக்காக ஆள் தேவை என்று
வரும்பொழுது அந்த சீனியாரிட்டி பிரகாரம் போட்டிருக்கிறேன்.
இந்த உத்தரவை நான் எழுதியது இந்தக் கையால்தான், இந்த
இராமச்சந்திரன்தான்.



1983 நவம்பர் 16] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

ஆனால் முன்னாலிருந்த ஒரு வழக்கத்தில் அரிசனங்கள் அவ்வளவு தூரம் எண்ணிக்கையில் பரவியில்லை, அரிசன மக்கள் அந்த இடத்திற்கு வருவதற்கில்லை என்று சொல்லும்பொழுது இன்னொன்றையும் சொல்கிறேன்.

அப்துல்லா என்பவர் இங்கே டி.ஜி.பி. யாக இருந்தார். இன்னொரு முஸ்லீம் டி.ஜி.பி.-யாக வர வேண்டுமென்றால் எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பதைத் தயவு செய்து எல்லோரும் புரிந்து வேண்டும்.

அப்படியிருந்த நிலையை, நாங்கள் சில சமயம் தவிர்க்க முடியாத நிலையில் அல்ல, இப்படிச செய்து தீர வேண்டுமென்று ஒரு டி.ஜி.பி.-க்கு ஐந்தாக்கி, அதனை நான்காக்கி சிறுபான்மையினர் ஒருவரைக் கொண்டு வர வேண்டும், இன்னொருவரைக் கொண்டு வர வேண்டுமென்று நாங்கள் முயற்சிக்கிறோமே இது தான் எங்கள் நேர்மை நிலைமை. உண்மையில் தகுதியிருந்து அரிசன மக்கள் ஒதுக்கி வைக்கப்படவில்லை.

வெளிநாடுகளுக்குப் பயிற்சிக்குப் போக வேண்டுமென்றால் தாழ்த்தப்பட்ட மக்கள் முதலில் கவனிக்கப்பட வேண்டுமென்று உத்தரவிருக்கிறது. அதேபோல் பிற்பட்ட சமூகத்தினருக்கும் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிருக்கிறது. அவர்களுக்குத் தான் முதலில் வாய்ப்பு கொடுக்கிறோம். ஆகவே, இளைஞர் களுக்குக் கொடுக்கிறோம். அவர்கள் போய் வந்தால் தமிழ் நாட்டிற்கு அவர்கள் பல ஆண்டுகளுக்குப் பயன்படுவார்கள் என்ற காரணத்தால். இந்தக் கொள்கையைத்தான் நாங்கள் வைத்துக்கொண்டிருக்கிறோம்.

ஆகவே, எந்தப் பிரிவினருக்காவது நாங்கள் எங்களுடைய இஷ்டப்படி, நாங்கள் விரும்பியபடி, எங்களுக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பார்த்து, சாதக பாதகமாக நடக்கிறோம் என்பதை இந்த மன்றம் இனிமேல் நம்பாமல் இருக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள்.

திரு. ரா. உமாநாத் : மெடிகல் அட்மிஷனைப் பற்றி.....

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : அது வழக்கு மன்றத்தில் இருக்கிறது. அதனால் நான் பதில் சொல்ல முடியவில்லை. வழக்கு மன்றத்தில் எத்தனை வழக்குகள் போய் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, அந்த நீதிமன்றம் என்ன தீர்ப்பு வழங்குகிறதோ அதற்கேற்றபடி நட

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 16

வடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை நமக்கிருப்பதால் முன்ன தாகவே நான் ஒரு கருத்தைச் சொல்லி, அது வேறொரு நிலை யைக் கெடுத்துவிடக் காரணமாகிவிடக் கூடாது என்பதால் நான் அதற்குப் பதில் சொல்லாமல் இருக்கிறேன்.

ஒப்பந்தப் புள்ளியைப் பற்றிப் பேசினார்கள். ஒப்பந்தப் புள்ளிக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில் இரண்டு திட்டங்களை வைத்துக்கொண்டிருக்கிறோம். ஒரு விஷயத்தை நண்பர் திரு. உமாநாத் அவர்கள் மறந்து விடுகிறார்கள். நண்பர் திரு. உமாநாத் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நான் அவர் களுக்கு இதை ஒரு நினைவுக்காகச் சொல்கிறேன். டெண்டர் கால்ஃபார பண்ணி, ஒப்பந்தப்புள்ளி என்கிற முறையில் எடுக்கப் பட்டிருந்தது. அது ஒரு சிலருக்குத் திரும்பத் திரும்பப் போகிறது என்ற குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. எல்லோரும், தமிழ் நாட்டிலே நான் எங்கு சென்றாலும் அதிகாரிகளும் சரி, கட்சித் தோழர்களும் சரி, பொதுவானவர்களும் சரி, இப்படி ஏகாதிபத்தியம் போல இருக்கிறது என்கிற குற்றச் சாட்டை என்னிடத்திலே சொனனபொழுது நான் சொன்னேன் என்ஜினீயராவதற்குப் படித்துப் பட்டம் பெற்று, பணமில்லாமல் அவர்கள் இருந்தார்களானால் அரசு பணம் கொடுத்து அவர்களைக் கூட்டுறவு கம்பெனியாக வைத்து அவர் கள் இந்த டெண்டர்களை எடுத்துக் கொள்ளட்டும். முதல் சலுகை, முன்னுரிமை அந்தக் கம்பெனிகளுக்கு இருக்க வேண்டு மென்று நான் உத்தரவிட்டிருக்கிறேன்.

இதைச் செய்தபொழுது இளைஞர்கள் படித்து வெளியே வந்ததும் அந்தப் பொறியாளர்கள் வேலையில்லாமல் இருக்கக் கூடாது என்கிற வகையில் அவர்களுக்கு வேலையும் கிடைக் கிறது. இன்னொருவருக்கு அடிமையாகாமல், ஏகபோக முதலாளித்துவம் போல ஒருவரே வளர்ந்து கொண்டு போகாமல் அதைத் தடுப்பதற்கும் பயனாகிறது. நாட்டிலே ஒவ்வொரு வரும் தொழிற்பயிற்சி செய்வது எவ்வளவு முக்கியமானதோ அதுபோல் தொழில் கற்றுக் கொள்வதற்கு, அதைச் சொல்லிக் கொடுப்பதற்கு அமைப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டன.

இவைகளையெல்லாம் நாங்கள் யாருக்கோ செய்யவேண்டும் என்கின்ற எண்ணத்தால் அல்ல, பொறியியல் துறையில் அந்த என்ஜினியரிங் கல்லூரியில் படித்துவிட்டு வருகின்றவர்கள் எங்கள் கட்சிக்காரர்கள் மட்டும் அல்ல, யாரோ ஒருவர் எங்கள் கட்சிக்காரர்களாக இருக்கலாம் அல்லது எங்கள் கட்சி அனுதாபியாக இருக்கலாம் ஆனால், யாராக இருந்தாலும் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று நான் எழுதினேன்.



1984, நவம்பர் 16] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

ஒரு சிற்றூர் என்று வைத்துக் கொள்ளுங்கள், அந்த ஊரிலே இருப்பவர்கள் அந்த ஒப்பந்தப் புள்ளி என்ற பெயரில் இல்லாமல் அந்தப் பணியினை எடுத்துக்கொண்டு வேலை செய்ய முன் வந்தால், அவர்களுக்கு அந்தப் பணத்தை கொடுங்கள் என்று நான் சொல்லியிருக்கிறேன்.

எந்த கிராமத்தவர்களாவது இந்தப் பணியை நாங்கள் செய்கிறோம் என்று முன்வந்தால் அவர்களுக்கு உரிய வசதி களைச் செய்து கொடுத்து அதைச் செய்யுங்கள் என்று நான் சொல்லி இருக்கிறேன். இவைகளை எல்லாம் நான் ஏன் சொல் கிறேன்? இந்த அளவுக்கு இந்தப் பிரச்சினைகளில் எல்லாம் நாங்கள் அக்கறை காட்டவில்லையா ?

இன்னொன்று சொன்னார்கள். தேர்தலிலே எங்களுடைய சில ஓட்டுக்களும் உங்களுக்கு பயன்பட்டிருக்கும் என்று அவர்கள் சொன்னார்கள். உண்மையாகவே நான் ஏற்றுக்கொள்கிறேன். சில இடங்களில் டிசைடிங் பேக்டார் என்ற நிலையில், சில இடங்களில் வெற்றிக்கும் அது உதவும், தோல்விக்கும் அது உதவும் என்பதைப் பற்றி தெரியாதவன் அல்ல. அந்த நிலைமை தான் அண்ணா அவர்களுக்கும் ஏற்பட்டது. ஆதரிக்க வேண்டிய வர்கள் ஆதரிக்காமல் விட்டதும், வேறு பல கோளாறுகள் அங்கே செய்யப்பட்டதும் தான் அண்ணா அவர்கள் தோற்க வேண்டிய நிலைமையை ஏற்படுத்தியது. எனவே மக்கள் அவரை வெறுக்கவில்லை என்பதை அதன்பின்னர் நடந்த நாடாளு மன்றத் தேர்தலிலே எவ்வளவு இலட்சம் வாக்குகள் வித்தியாசத் தில் வெற்றி பெற்றார்கள் என்பதை வைத்து நாம் கண்டோம். மேலும் சட்டப்படி சொன்னால் எங்களுடைய சொல்லுக்குக் கீழ்ப்படிந்து செயல்படுகின்ற அதிகாரிகள் இருக்கிறார்கள் என் பதை எல்லாம் வைத்துக்கொண்டு நாங்கள் வெற்றி பெறுவோம் என்று சொல்லவில்லை. 1977-ஆம் ஆண்டு என்ன சொன்னோமோ அதைத்தான் இப்போதும் சொல்கிறோம்.

முன்னால் திண்டுக்கல் தேர்தலின்போது வலதும், இடதும் சேர்ந்திருக்கின்ற நேரத்தில், இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளின் இரண்டு பெரிய தலைவர்களும் என்னுடைய பக்கத்திலே இருந்த நேரத்தில் நான் என்ன பேசினேன் என்பதை இந்த நேரத்தில் நினைத்துக்கொள்ளுங்கள். ஒரு கை மாத்திரம் அல்ல, வலது கை, இடது கை இரண்டும் எனக்குக் கிடைத்திருக்கின்றன என்று சொன்னவன்தான் இந்த இராமச்சந்திரன். ஆகவே இவை எல்லாம் அலட்சியப்படுத்தவில்லை. ஆனால் இப்போது இங்கே சொல்லப்படுகின்ற பேச்சுகளுக்குப் பதில் சொல்லவேண்டும் என்ற ஆத்திரத்தில் உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் என்பதைத் தவிர இதை எல்லாம் அவர்கள் உணரவில்லை. ஒருவரோடு கூட்டு வைத்துக்கொள்ளும்போது அவர்கள்

எவ்வளவு உற்சாகமாக இருந்தார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனவே எங்களை எதிர்ப்பதற்காக நாங்கள் அஞ்சப்போவதும் இல்லை. ஆதரிக்கிறார்கள் என்பதால் தலை கனத்தோடு நடக்கப் போவதில்லை. இவை இரண்டையும் சமமாக மனதில் வைத்துக்கொள்வதற்குத்தான் அண்ணா அவர்கள் பழக்கி இருக்கிறார்கள். எனவே நீங்கள் எனக்குத் துணையாக இல்லாவிட்டாலும் கூட உங்களை வெறுக்க மாட்டோம்; எதிராக இருந்தாலும் கூட அண்ணன், தம்பிகளை எப்படி விரும்புகிறோமோ அதுபோல் தான் இருக்கிறோம். எனவே தேர்தலைப்பற்றி எங்களுக்கு அக்கறையே இல்லை. எந்தக் கூட்டு, எந்தக் கட்சியோடு என்ற கேள்வியே இன்னும் போடவில்லை. இந்தப் பிரச்சினை எதற்காக வந்தது என்பது வேறு விஷயம்.

இங்கே குறிப்பிட்டார்கள், விலைவாசி உயர்வதற்கு மத்திய அரசு தான் காரணம் என்று. மாநில அரசும் சில பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். அந்த வகையில்தான் ஆளுநர் உரையில் கூறி இருக்கிறோம் என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். விலைவாசி குறைந்தது என்றால் இங்கே அரிசி விலை குறைக்கப்பட்டது. அரிசி விலை குறைந்தது என்றால் விளைச்சல் அதிகமாக இருந்தது. இங்கே தேவையில்லை என்றால் வெளிநாடுகளுக்கு அனுப்புங்கள் என்று ஜனதா அரசு மத்தியிலிருந்து சொல்லும்போது 2 இலட்சம் டன்னுக்கு மேலே திரு. கார்த்திகேயன் அவர்கள் சீஃப் செக்ரட்டரியாக இருக்கும்போது ஏற்பாடு செய்து அனுப்பினார்கள். அந்த நிலை வந்தபோது நான் சொன்னேன், இதைத்தான் அண்ணா அவர்கள் விரும்பினார்கள், நாம் வெளி நாடுகளுக்கு உணவுப் பொருளை அனுப்புகின்ற அளவுக்கு வளரவேண்டும் என்று விரும்பினார்கள் என்று. அன்று இயற்கை உதவி செய்தது. நாங்கள் அதைச் சொன்னோம் பிறகு இயற்கை உதவி செய்யவில்லை; விலைவாசி உயர்கிற நிலைமை இருந்தது. தயவுசெய்து 7, 8 வருஷங்களுக்கு முன்னால் உள்ள நிலைமையை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். அந்த நிலையில் எப்படி இருந்தது என்பதையும் கொஞ்சம் கவனித்துப் பார்த்தால் நாங்கள் எவ்வளவு அக்கறையோடு செயல்படுகிறோம் என்பதை நீங்கள் எல்லோரும் ஒப்புக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்னொருவரைக் காட்டி, குற்றவாளி, கொலை செய்தார்கள், தவறு செய்தார்கள் என்று சொல்லி பெருமை தேடிக்கொள்ள நான் விரும்பவில்லை. அனுபவம் இல்லாத இராமச்சந்திரன் ஆட்சிக்கு வந்து, உங்களால் அனுபவப்பட்டு, சிபாரிசு செய்யப்பட்டு, அறிவுரை கூறப்பட்டு எப்படி எல்லாம் உத்தரவு போட்டிருக்கிறேன் என்பதை நினைத்துப் பார்த்தால் கொஞ்ச



நேரத்துக்கு முன்னாலே சொன்னேனே அந்த உத்தரவுகளை நான் இட்டிருப்பேன் என்று நீங்கள் எதிர்பார்த்திருக்கமாட்டீர்கள். இதற்காகத்தான் சொன்னேன். நான் எந்த மக்களோடு பழகுகிறேன், யாரைப்பற்றி எல்லாம் நினைக்கிறேன் என்பதைப் பற்றி சொல்வதற்காகத்தான், இந்த நிலைமைகளை நாங்கள் எடுக்கிறோம், எங்கள் உத்தரவுகள் இவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்பதற்காகத்தான் இந்த உதாரணங்களை நான் சொன்னேன்.

(பிற்பகல் 1-20)

நீங்கள் குடிசைக்குக் கீழே உள்ள குடிசையில் இருக்கலாம். நான் குடிசைக்குக் கீழே உள்ள குடிசையில் மட்டுமல்ல, மரத்தடியில் நிற்கிறவர்கள் கூட நான் பழகியிருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் குடிசை என்று சொல்கிறபோது நான் மரத்தடிக்குத்தானே போக வேண்டும்.

**திரு. ரா. உமாநாத் :** நீங்கள் குடிசை என்று சொன்னீர்கள் நான் அதற்காக குடிசைக்குக்குடிசையிலும் உள்ள மக்களோடு பழகுகிறேன் என்று சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** எனக்கு குடிசையில் இருப்பவர்களோடு மட்டுமல்ல, மரத்தடியில் நிற்கிறவர்களோடு நான் பழகியிருக்கிறேன். நடுத்தெருவில் நிற்கிறவர்களோடு நான் பழகியிருக்கிறேன். எங்களை யாராவது வாழ்த்துவார்கள் என்று சொலவீர்களானால் அவர்கள் ஏழைகளாகத்தான் இருப்பார்கள். பணக்காரர்கள் இல்லை.

நீங்கள் ஒன்று சொன்னீர்கள். ஏகபோக முதலாளிகளை நாங்கள் அடிப்படையாக எதிர்க்கிறோம் என்று. அதிலே உங்களுடைய தோழனாக என்னை ஏற்றுக்கொள்ளுங்கள். தோழர்களாக இந்தப் பகுதியில் இருக்கும் அத்தனைபேரையும் ஏற்றுக்கொள்ளுங்கள். நாங்கள் எப்போதும் அதை தீர்த்துக் கொண்டு தான் இருக்கிறோம். உங்கள் உள்ளம் அதை அறியும். எங்களுக்குத் தெரியாமல் சில இடங்களில் நாங்கள் விவரம் தெரியாமல் ஏதாவது சொல்லியிருந்தால் இருக்கலாம், எங்களை அறிவுபூர்வமாக நாங்கள் உணர்ந்தால் அதை எதிர்க்காமல் இருந்தது இல்லை என்பதை வரலாறு சொல்லும்.

சரித்திரத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். உங்களை விட வயதில் அதிக மூத்தவன் நான். நீங்கள் எவ்வளவோ படித்துத் தெரிந்து இருந்தாலும், நேரில் சில வரலாற்றை நான் பார்த்து இருக்கிறேன். அந்த வரலாற்றை நான் நினைத்துப் பார்க்கிறபோது, புதிய வரலாற்றை நான் தெரிந்து கொள்ள

ஆசைப்படவில்லை. என்னுடைய பழைய வரலாறே எனக்குப்
போதும். என்னவெல்லாம் செய்தேன். நேற்று கூட சொன்
ன்னன், எத்தனை எலெக்ஷனில் இரவு பகல் பாராது மேடையில்
கத்தியிருப்பேன். முதன் முதலில் சினிமா படத்தில் தி.மு.க.
கொடியை காண்பித்தது இந்த எம்.ஜி. ஆர். தான், அண்ணா
அவர்களை நான் கேட்டேன் (குறுக்கீடு)

திரு. அன்பில் தர்மலிங்கம் : 1953–லேயே திராவிட நாடு
திராவிடருக்கே என்ற பாட்டு பராசக்தி படத்தில் வந்துவிட்டது.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : நான்
மறுபடியும் சொல்கிறேன். அண்ணா அவர்களிடம் கேட்டேன்.
வீரப்பா அவர்களைத்தான் அனுப்பி வைத்தேன். அவர் சொன்
னார், கொடியைக் காண்பித்தால் உங்கள் படத்திற்கு ஏதாவது
தடை வருமானால் அதைக் காண்பிக்க வேண்டியது இல்லை.
என்று சொன்னார்கள். அதை நான் பார்த்துக் கொள்கிறேன்
என்று சொல்லி, என்னுடைய கம்பெனியின் எம்ப்ளமாக அதை
வைத்தேன். அதைப் புரிந்து கொள்ளவேண்டும், அந்த எம்பளமாக
வைத்து வந்த அந்தப் படம்' நாடோடி மன்னன்' எங்கே ஓடி
னாலும் அங்கெல்லாம் அந்தக் கொடி அறிமுகப்படுத்தப்பட்டது.
அதற்கும் தான் உழைத்தேன். அதனால் தான் ஒரு வேளை
அந்தப் படத்திற்கும் புகழ் வந்து இருந்தால் அது அவர்களைச்
சாரும், அண்ணா அவர்களைச் சாரும். அதையும் நான் ஏற்றுக்
கொள்கிறேன். அண்ணா அவர்களைக் கலந்து கொள்ளாமல்
நான் தயாரித்த அந்தப் படத்தில் வருகின்ற கொள்கையெல்
லாம் என்னுடை கொள்கைகள், எங்கள் கட்சியினுடைய கொள்
கைகள் என்று இதே சென்னையில் அண்ணா அவர்கள் பல்லா
யிரக்கணக்கான மக்கள் கூடியிருந்த கூட்டத்தில் சொன்னார்கள்.
நான் டேப் செய்து வைத்து இருக்கிறேன். அதைப் படமும்
எடுத்து வைத்து இருக்கிறேன். அது மறக்கக்கூடாது என்பதற்
காக. எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், அண்ணாவின்
கொள்கை ஏகபோக முதலாளிகளை ஆதரிப்பது அல்ல.

அவர் ஏற்றுக் கொண்டது, சமதர்மம், சமதர்ம வாதம், சமசந்
தர்ப்பம், இன்னும் சொல்லப் போனால் ஏற்றத்தாழ்வு இல்லாத
சமுதாயம் தான் நான் விரும்புகிறேன் என்று அண்ணா அவர்கள்
சொன்னார்கள். பேருந்துகளை தேசிய உடைமையாக்கும்
கொள்கை ஏற்கனவே வந்துவிட்டதே, சுப்ரீம் கோர்ட் தடை
விதித்து விட்டார்கள் என்று சொன்னீர்கள், இப்போது என்ன
செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். இன்னொன்றையும்
சொன்னார்கள். நாங்கள் வங்காளத்தில் ஆட்சிக்கு வந்தவுடன்
ஏழைகளுக்கு அதாவது விவசாயிகளுக்கு, உழைக்கும் மக்களுக்கு,
கிராமப் புற மக்களுக்கு சீர்மைப் படுத்த வேண்டும், செம்மைப்





படுத்த வேண்டும். எங்களைப் பொறுத்த வரையில், தன்னிறைவு
திட்டம் போட்டோமே தவிர இன்னும் எனக்கு முழுமையான
திருப்தி அதிலே இல்லை. அது முழுமை அடையும் வரையில்
இந்த தேசிய உடைமையாக்கும் முயற்சியை எந்தவிதத்திலும்
எப்போதும் முழுமையாகச் செய்ய இந்த அரசு தயாராக இல்லை.

எங்களுக்குத் தேவையெல்லாம் கிராமப புற மக்கள் அவர்
களுக்குத் தேவையான வாழ்க்கை முழுமையையும் பெற்றாக
வேண்டும். அவர்கள் பெற்ற பிறகு அவர்களுக்கு தேவையா
னவை பேருந்துகள் என்றால் அதுவும் அவர்களுக்குச் சொந்த
மாக இருக்க வேண்டும். என்னுடைய எண்ணம், லட்சியம் வேறு.
அதை முழுமையாக இங்கே சொல்ல முடியவில்லை. ஒரு கிரா
மத்தில் இருக்கும் மக்கள், அவர்களின் உழைப்பிலிருந்து வரு
கின்ற பணத்தில் முன்னுரிமை கொடுத்து செலவு செய்யும் பணம்
கிராம மக்களுக்குப் பயன்படும் என்ற வகையில் அமைய வேண்டும்
என்பது தான் என்னுடைய கொள்கை. அந்தக் கொள்கை
நிறைவேறத்தான் திரும்பத் திரும்ப கிராமப்புறம் என்று
சொல்லிக் கொண்டே இருக்கிறேன். அங்கே இருக்கிறவர்கள்
நிச்சயமாக சுபிட்சமாக இல்லை. ஏதோ அரிசி கொடுக்கிறோம்,
துணி கொடுக்கிறோம், அது 60 வயதா, 65 வயதா என்ற
இந்தக் கேள்வியை விட கொடுக்காமல் இருந்த இந்த தமிழ்
நாட்டில் கொடுக்கிறார்கள். அதற்கு ஒரு நல்ல எண்ணம்
சொல்லக் கூடாதா ? (மேசையைத் தட்டும் ஒலி) இது எப்படி
தவறாகும் ? 60 வயதில் கொடுக்கிறீர்கள். தேர்தல் நேரத்
திலே சொன்னீர்களே என்கிறீர்கள். சொல்னோம். அங்கிருந்து
வாங்கி, கடன் கொடுக்கிறோம் என்றீர்கள். அங்கே கொடுக்க
வில்லை. நீங்கள் 204 கோடி ரூபாய் வரையிலும் அந்த வட்டி
யையும் மிகை வட்டியையும் கடனையும் தீர்க்க வில்லையா ?
எங்களால் முடியவில்லை. அதை மக்களிடம் சொன்னோம்.
ஆதற்குப் பிறகுதான் நாமெல்லாம் சேர்ந்தோம்; ஆட்சிக்கு
வந்திருக்கிறோம்.

நீங்கள் பண்ணைகளை மூடிவிட்டீர்கள் என்று சொல்லும்
போது அது 1979 ஆம் ஆண்டு. அது அப்போதே மூடியாகி
விட்டது. 1979 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் நாம் எல்லாம்
ஒன்றாகச் சேர்ந்து, 1980-ல போட்டியிட்டு இங்கே வந்திருக்கி
றோம். ஆக அது புது பிரச்சினை அல்ல ; பழைய பிரச்சினை.

இன்னொன்றையும் சொல்கிறேன். அதிகமாக நான் பேசத்
தயாராக இல்லை. இந்த ஆட்சியைப் பொறுத்த வரையில்
மக்கள் ஆதரிக்கின்ற வரையில் நாங்கள் இருப்போம். அதுவரை
நாங்கள் ஏகபோக முதலாளித்துவத்தை எதிர்ப்போம். சமதர்ம
உரிமை எல்லோருக்கும் வேண்டும் ; சமத்துவம் வேண்டும்.
அதற்காக உழைப்போம். இதுதான் எங்கள் இலட்சியம் என்று
கூறி, என்னுடைய உரையை இத்துடன் முடிக்கிறேன்.

[1983 நவம்பர் 16

(பிற்பகல் 1.30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரா. உமாநாத் அவர்களின் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு).

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : பேரவைத் தலைவர் அவர்களே,....(கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது வாக்கெடுப்பு. வேறு எந்தவிதமான விளக்கத்திற்கும் இடமில்லை.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு-செய்தனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : ''மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையிலான அமைச்சரவையின் மீது இப்பேரவை நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கிறது''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று தோல்வியுற்றதாக அறிவிக்கப்பெற்றது.

திரு. என். சங்கரய்யா : நான் டிவிஷன் கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று வாக்குகள் எண்ணிக் கணிக்கப்பெற்றன. (மாண்புமிகு பேரவைத் தலைவர்-தலைமை).

| | |
|---|---|
| ஆதரித்தோர் | 49 |
| எதிர்த்தோர் | 125 |

நடுநிலை வகித்தோர் ஒருவருமில்லை.

தீர்மானத்திற்கு எதிராக 76 வாக்குகள் அதிகமாகக் கிடைத்துள்ளதால் தீர்மானம் தோல்வியுற்றது.

(பிற்பகல் 7-40)



1983 நவம்பர் 16]

ஆதரித்தோர்

1. திரு அன்பில் தர்மலிங்கம்
2. திரு வி. கிருஷ்ணமூர்த்தி
3. திரு என். சங்கரய்யா
4. திரு ரா. உமாநாத்
5. திரு சு. பாலன்
6. திரு பாபு ஜனார்த்தனன்
7. திரு துரைமுருகன்
8. திரு கு. ரமணி
9. திரு பெ. சு. திருவேங்கடம்
10. திரு கெ. சொக்கலிங்கம்
11. திரு ஜே. எஸ். இராசு
12. திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்.
13. திரு து. இராசரத்தினம்
14. திரு அ. ரகுமான்கான்
15. திரு த. வேணுகோபால்
16. திரு எம். செல்லமுத்து
17. திரு அ. செல்வராசன்
18. திரு ப. பொன்னுரங்கம்
19. திரு து. புருஷோத்தமன்
20. திரு எஸ். ரெத்தினராஜ்
21. திரு என். முத்துவேல்
22. திரு த. ஆறுமுகம்
23. திரு ஏ. இராமலிங்கம்
24. திரு என். வி. என். சோமு
25. திரு கு. பா. பழனியப்பன்
26. திரு பம்மல் நல்லதம்பி
27. திரு ப. சுந்தரம்
28. திரு. மு. ப. முனுசாமி
29. திரு மு. அரங்கநாதன்
30. திரு. சோ. அழகர்சாமி
31. திரு இரா. கருப்பையா
32. திரு பி. முகமது இஸ்மாயில்

ஆதரித்தோர்—தொடர்ச்சி

33. திரு குமரி அனந்தன்
34. திரு மு. அம்பிகாபதி
35. திரு பொ. உத்திராபதி
36. திரு என். ஏ. பூங்காவனம்
37. திரு ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்
38. திரு ஏ. சாகுல் அமீது
39. திரு செ. சிவசாமி
40. திரு தி. கா. நல்லப்பன்
41. திரு மு. அப்பாதுரை
42. திரு எஸ். என். இராமசாமி
43. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்
44. திரு என். பழனிவேல்
45. திரு கே. ஆர். சுந்தரம்
46. திரு எம். ஆறுமுகம்
47. திரு டி. மணி
48. திரு ஜே. ஹேமச்சந்திரன்
49. திரு ஏ. டி. கருப்பையா

எதிர்த்தோர்

1. திரு ஆர். மணிமாறன்
2. மாண்புமிகு திரு பி. எச். பாண்டியன்
3. திரு வி. வி. சுவாமிநாதன்
4. திரு எஸ். எஸ். இராசேந்திரன்
5. திரு பி. முசிறிப்புத்தன்
6. திரு ச. அங்குசாமி
7. திரு கே. எம். அப்துல் ரசாக்
8. திரு எஸ். அரங்கநாதன்
9. திரு வெ. அரங்கராசன்
10. திரு தி. அன்பழகன்
11. திரு சேலம் மு. ஆறுமுகம்
12. திரு எம். பி. இரத்தினம்
13. திரு க. இரா. சின்னராசு
14. திரு மே. அ. இராசகுமார்



(எதிர்த்தோர்-தொடர்ச்சி.)

15. திரு கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்
16. திரு த. இராமசாமி
17. திரு இ. இராமசுப்பிரமணியன்
18. டாக்டர் கே. பி. இராமலிங்கம்
19. திரு எஸ். டி. உகம்சந்த்
20. திரு ம. கண்ணன்
21. திரு கே. ஆர். கணபதி
22. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்
23. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்
24. மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி
25. மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்
26. மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்
27. மாண்புமிகு திரு எம். விஜயசாரதி
28. மாண்புமிகு திரு திருச்சி ஆர். சௌந்திரராசன்
29. மாண்புமிகு திரு எம். ஆர். கோவேந்தன்
30. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்
31. மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி
32. திரு இ. கணேசன்
33. திரு சி. கணேசன்
34. திரு பி. கந்தசாமி
35. திரு டி. கே. கபாலி
36. திரு சோ. கலிதீர்த்தான்
37. திரு பெ. கலியமூர்த்தி
38. திரு நன்னிலம் அ. கலையரசன்
39. திரு கா. கோ. கிருஷ்ணசாமி
40. திரு சா. கிருட்டிணமூர்த்தி
41. திரு ஜி. கிருஷ்ணராஜ்
42. திரு என். குப்புசாமி
43. திரு கே. குப்புசாமி
44. திரு செ. குப்புசாமி
45. திரு ப. குருசாமி
46. திரு எம். அண்ணாதாசன்
47. திரு ந. குலசேகரபாண்டியன்
48. திரு இரா. அமிர்தராஜ்

(எதிர்த்தோர்-தொடர்ச்சி.)

49. திரு சி. கோபால்
50. திரு கா. கோபாலகிருஷ்ணன்
51. திரு கோவைத்தம்பி
52. திரு ஆர். சக்கரபாணி
53. திரு இரா. சண்முகம்
54. திரு ஏ. சி. சண்முகம்
55. திரு வ. சத்தியமூர்த்தி
56. திரு சி. சபாபதி
57. டாக்டர் கோ. சமரசம்
58. திரு. தா. சாமிக்கண்ணு
59. திரு, சீ. சிவப்பிரகாசம்
60. திரு. மு. சிவபெருமான்.
61. திரு. எம். சின்னசாமி.
62. திரு. ஏ. சின்னதுரை.
63. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து.
64. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்.
65. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு.
66. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி.
67. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு.
68. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்.
69. திரு. ஆர். டி. கோபாலன்.
70. திரு. மா. சின்னராசு.
71. திரு. ஜி. கே. சுப்பிரமணியன்.
72. திரு. கு. அ. செங்கோட்டையன்.
73. திரு. செ. செம்மலை.
74. திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி.
75. திரு. ஏ. எம். சேதுராமன்.
76. திரு. கே. சௌந்தரராசன்.
77. திரு. ஏ. தங்கராசு.
78. திரு. ப. தனபால்.
79. திரு. இரா. தாமரைக்கனி.
80. திரு. பெ. திருமாறன்.
81. திரு. இரா. திருமான்.
82. திரு. பி. எஸ். துரைசாமி.



(எதிர்த்தோர்-தொடர்ச்சி.)

83. திரு. கே. உச்சி.
84. திரு. பி. துரைராஜ்.
85. திரு. பூ. மு. நரசிம்மன்.
86. திரு. கே. பி. நாச்சிமுத்து.
87. திரு. பி. ஜி. நாராயணன்.
88. திரு. செ. பட்டாபிராமன்.
89. திரு. சு. பழனிசாமி.
90. திரு. ச. பாலகிருஷ்ணன்.
91. திரு. வி. பாலகிருஷ்ணன்.
92. திரு. க. பாலசுப்பிரமணியன்.
93. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.
94. திரு. அ. பாலுச்சாமி.
95. திரு. எம். பிச்சை.
96. திரு. ஜே. சி. டி. பிரபாகரன்.
97. திரு. ஏ. பெரியசாமி.
98. திரு. என். பெருமாள்.
99. திரு. எம். எஸ். மாணிக்கம்.
100. திரு. த. மாரிமுத்து.
101. திரு. சு. முத்துக்கிருஷ்ணன்.
102. திரு. இரா. முத்தையா.
103. திரு. எஸ். ஆண்டித்தேவர்.
104. திரு. கே. தனுக்கோடித் தேவர்.
105. திரு. ஜி. மூர்த்தி.
106. திரு. ஆர். ரங்கசாமி.
107. திரு. எம். கே. ராஜமாணிக்கம்.
108. திரு. மி. வின்சென்ட்.
109. திரு. க. பாரமலை.
110. திரு. என். விஜயபாலன்.
111. திரு. கோ. விஸ்வநாதன்.
112. திரு. த. வீராசாமி.
113. திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்.
114. திரு. மா. சுப்பிரமணியன்.
115. திரு. இ. முத்துராமலிங்கம்.
116. திரு. இரா. சா. முனிரத்தினம்.

சென்னை-600009 136064 Y211,31 N83 N83.54.

(எதிர்த்தோர்-தொடர்ச்சி.)

117. திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்.
118. திரு. வி. சுப்பிரமணியன்.
119. திரு. ஆ. வெள்ளைச்சாமி.
120. திரு. பாபு கோவிந்தராஜன்.
121. திரு. க. ரங்கசாமி.
122. திரு. எஸ். ஜகத்ரட்சகன்.
123. திரு. ஆலூர் பு. கோ. ஜகதீசன்.
124. திரு. வே. இரா. ஜெயராமன்.
125. திரு. எம். ஜான் வின்சென்ட்.

6. அரசினர் தீர்மானம்.

விதி 32 (1)-ஐத் தளர்த்துதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32 (1)-ஐத் தளர்த்தி இப்பேரவை 17—11—1983 அன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 17—11—1983 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். மாலையிலும் பேரவை கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.46 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

219. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி முதலீட்டுக் கழகத்தின் 1982—83-ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

(எதுவும் இல்லை.)

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS, IN MADRAS CITY.

1 Account Test. Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

## IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tirchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Id Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores. No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vasa Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Center, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

## IN OTHER STATES.

1 Jain Book Agency. New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 5TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.